
# பி.எஸ். குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா







# தமிழரசு


ஜூலை 1 - 15, 1998 ரூ.3











# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

**குழந்தை பிறப்பைத் தடுப்போம்**
**எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்**

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

## இந்த இதழில்...


★ கலைஞருக்குத் தமிழக ஆளுநர் புகழாரம் ........ 2

★ கலைஞர்கள் எந்நேரமும் ஒன்றுபட்டு இருக்கவேண்டும் - முதலமைச்சர் கலைஞர் உரை ........ 3

★ குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் - முதலமைச்சர் கலைஞர் உரை ........ 5

★ மனித தெய்வங்களுக்காக நடத்தப்படும் திருவிழா - முதலமைச்சர் கலைஞர் உரை ........ 9

★ தலைமைச் செயலகச் சங்கம் பொன்விழா - முதலமைச்சர் கலைஞர் உரை ........ 13

★ காவிரிப் பிரச்சினை - முதலமைச்சர் கடிதம் ........ 18

★ கலைமாமணி விருது பெற்றோர் ........ 20

★ பெருந்தலைவர் காமராஜர் - கலைஞர் கவிதை ........ 23

★ அரசு ஆணைகள் ........ 24

★ கடலூரில் முதலமைச்சர் கலைஞர் பேச்சு ........ 26

★ விமோசனம் ........ 35

★ பட்டயக் கணக்கர் பயிலகப் பொன்விழாவில் கலைஞர் ........ 41

★ வாழி தோழி ! (இலக்கியம்) ........ 44

★ உலகக் கால்பந்தாட்டப் போட்டி ........ 46



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2029

ஆனி

ஜூலை 1-15, 1998

மலர் : 29 இதழ் : 1


## திருக்குறள்

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற.*

- அறிவில் சிறந்த நல்ல பிள்ளைகளைவிட இல்வாழ்க்கையில் சிறந்த பேறு வேறு எதுவுமில்லை. (கலைஞர் உரையிலிருந்து)

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 4-7-98 அன்று தலைமைச் செயலகத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில், ரூ.38.75 இலட்சம் செலவில், அங்கன்வாடி மையங்களுக்கு 2500 மிதிவண்டிகளை வழங்கினார்.





# கலைஞர் சிறந்த நிர்வாகி - மக்கள் தலைவர் தமிழ்மொழியில் அரிய சாதனைகள் செய்பவர்!

*தமிழக ஆளுநர் பாத்திமா பீவி புகழாரம்!*



"கலைமாமணி விருது" வழங்கும் சிறப்பான இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தியாவின் கலாச்சாரம் வளர்வதற்குப் பல்வேறு கலைகள் முக்கியப் பங்கு வகித்துள்ளன. தங்களது பாரம்பரியப் பழங்கால நாகரிகத்தால் இந்தியர்கள் கலாச்சாரத்தின் உச்சிக்கே சென்றுள்ளனர். அதன் காரணமாகச் சீரிய இலக்கியங்கள், கலை நுட்பங்கள் போன்றவைகளை அவர்களால் படைக்க முடிந்தது.

## வளம் மிக்க தமிழ்

அந்த வகையில் தமிழ் மக்கள் முக்கியப் பங்காற்றியுள்ளனர். தமிழின் வரலாறு வித்தியாசமானது மட்டுமல்ல; வியப்பானதும் ஆகும். தான் கொண்டுள்ள இலக்கிய வளங்களால் தமிழ்மொழி தொடர்ந்து செழுமையாக இருந்து வருகிறது!

சங்க காலம் முதலே தொடர்ந்து, தமிழ்ச் சமுதாயம் இயல், இசை, நாடகத் தமிழைத் தன்னகத்தே கொண்டு திகழ்கின்றது.

இங்கு கர்நாடக இசை பிறப்பதற்கு முன்னரே 'பண்ணிசை' புழக்கத்தில் இருந்து வந்துள்ளது. நாடோடி இசையும், பாடலும் தொடர்ந்து இருந்திருக்கிறது. சங்க இலக்கியத்திலேயே நாடகம் குறிப்பாக இடம் பெற்றுள்ளது. ஆனாலும், அவை தமிழகத்தில் தாமதமாகத்தான் சிறப்பெய்தி வளர்ச்சி பெற்றுள்ளது. நாடகத்தின் விஞ்ஞான ரீதியான பரிணாம வளர்ச்சி என்று கூறப்படும் திரைப்படக்கலை வியக்கத்தக்க வகையில் இந்தியர்களின் வாழ்வில் இரண்டறக் கலந்துள்ளது.

இன்றைக்கு, சென்னையும் மும்பையும் போட்டி போட்டுக்கொண்டு 'ஹாலிவுட்' தயாரிப்புகளுக்கு இணையாகத் திரைப்படங்களைத் தயாரித்து வருகின்றன. நமது தயாரிப்பாளர்கள் பல விருதுகளைப் பெற்று, தமிழ் மாநிலத்திற்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர். 'சங்கீத நாடக சங்கம்' என்று சொல்லப்பட்ட இந்த மன்றம் 1955 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. பின்னர் 1973 ஆம் ஆண்டு இதன் பெயரைத் தமிழக முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் 'இயல், இசை, நாடக மன்றம்' என்று மாற்றி புதிய பெயரைச் சூட்டினார்.

## பல்வேறு சாதனை

எழுத்தாளராக, கவிஞராக, நாடக ஆசிரியராக எனப் பல்வேறு விதங்களில் தமிழ்மொழியில் முதலமைச்சர் அவர்கள் அளவிற்கரிய சாதனைகளைச் செய்துள்ளார். பல காவியங்களைப் படைத்துள்ளார். பலதரப்பட்ட துறைகளிலும் சாதனை செய்யக்கூடிய வல்லமை பெற்றவராக முதலமைச்சர் அவர்கள் திகழ்கிறார்.

அவர் ஒரு சிறந்த நிர்வாகி, மக்கள் தலைவர், ஆனாலும், உங்களுக்கெல்லாம் தெரியும் - அவர் தன்னைக் 'கலைஞர்' என்று அழைத்துக் கொள்வதையே விரும்புகிறார். அந்த அளவிற்குக் கலைகளின் மேல் அவருக்கு ஆர்வம்.


தமிழ் இலக்கியம், நுண்கலை, கைத்திறன் ஆகியவைகள் இங்கே நிச்சயமாகச் சிறந்து விளங்கும் என நான் உறுதியாகக் கூறுகிறேன். இந்த மாநிலத்தின் கலாச்சாரப் பாரம்பரியம் வளத்தோடும், உண்மையாகவும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கும்.

## முதல்வருக்கு வாழ்த்து

இந்த நிகழ்ச்சியில், பவள விழா கண்ட முதல்வர் அவர்களை, மென்மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

இன்றைக்குக் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களையும், படைப்பாளிகளையும் பாராட்டி என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(10.7.98ல் சென்னையில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கு விழாவில் பேசியதில் இருந்து.)




**கலைமாமணி விருது வழங்கு விழாவில் முதலமைச்சர் கலைஞர் வேண்டுகோள்**

"இங்கே இந்த மன்றம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழா, மிகப்பெரிய விழா. ஏனென்றால், சிறிய மண்டபங்களிலே அல்லது நடுத்தர மண்டபங்களிலே நடைபெற்றுக்கொண்டிருந்த விழா இன்றைக்கு வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த வள்ளுவர் கோட்டத்தை மேலும் வசதியுள்ளதாக, எழில் உள்ளதாக அமைக்க வேண்டும் என்று ஏற்புரையாற்றிய ஆர்.எம்.வீ. இங்கே குறிப்பிட்டார்.

ஆனால், உங்களுக்குத் தெரியும். 72-ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு, 75 அல்லது 76-ஆம் ஆண்டு நிறைவுற்று, ஆனால், இதனுடைய திறப்புவிழாவிற்கு நான் கலந்து கொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு 13 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு இந்த வள்ளுவர் கோட்டத்திலே நான் நுழைந்தேன் என்பதும், அதன் பின்னர் இடைக்காலம் ஒரு 5 ஆண்டுக்காலம், வள்ளுவர் கோட்டத்தினைச் செம்மைப்படுத்துகின்ற பணிகளை, சீர்படுத்துகின்ற பணிகளை மேற்கொள்ள முடியாமல், இந்த வள்ளுவர் கோட்டம் எந்த அளவிற்குப் பாழடைந்து கிடந்தது என்பதையும் நானல்ல, நாட்டில் இன்றைக்கும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நாளேடுகள், கிழமை ஏடுகள் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன.

இந்த வள்ளுவர் கோட்டம் எந்த அளவிற்குப் பாழ்பட்டுக் கிடந்தது என்பதைச் சொல்லவே எனக்கு நா கூசுகிறது. மனம் கூசுகிறது. அந்த அளவிற்கு இது யார் யாரோ பயன்படுத்தக்கூடிய இடமாக ஒரு நான்கைந்து ஆண்டு காலம் மாறியிருந்ததையும், இப்பொழுது தமிழக அரசு எடுத்துக்கொண்ட பெரு முயற்சியின் காரணமாக, ஏறத்தாழ 80 இலட்ச ரூபாய் செலவிட்டு, இந்தக் கோட்டம் இப்பொழுது பழுதுபார்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

**எழில் மிக்கதாக மாற்றப்படும்**

இதற்குக் குளிர்சாதன வசதி செய்யவேண்டும் என்று ஆர்.எம்.வீ. கேட்டுக்கொண்டார். நாங்களும் அதை எண்ணிக்கொண்டிருக்கின்றோம். விரைவில், இதற்கான குளிர் வசதி செய்யப்பட்டு, அவர் விரும்பியதைப் போல உலகத்திலே பல நாடுகளும் மெச்சத்தகுந்த வகையில், விரும்பத்தகுந்த வகையிலே இந்த வள்ளுவர் கோட்டம் சீரோடு எதிர்காலத்திலே விளங்கும் என்ற நம்பிக்கையினை இங்கே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மன்றத்தினுடைய உறுப்பினர் செயலாளர் நடிகர் சந்திரசேகர் பேசியபோது, சில கோரிக்கைகளை வைத்தார். கோரிக்கைகளை வைத்து "நான் வைப்பது கோரிக்கை. கலைஞர் அமர்ந்து இருப்பதோ இருக்கை. ஆகவே, இந்த கோரிக்கை நிறைவேறும்" என்றார். கலைஞர் இருக்கையிலே இருக்கின்ற காரணத்தினால், கோரிக்கை நிறைவேறும் என்று சந்திரசேகர் நம்பிக்கை பெறலாம் என்று நான் அவருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.


ஏனென்றால், கோரிக்கையினுடைய ஆழம், அகலம், ஒன்றும் அதிகமில்லை. கோடிக்கணக்கிலே இல்லை, இலட்சக்கணக்கிலேதான் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கோரிக்கைகள் அரசின் சார்பாக நிறைவேற்றித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஉலகப் பெருமக்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளவேண்டும். 75 கலைஞர்கள் இங்கே விருது பெற்றிருக்கின்றார்கள். அதிலே, மூத்த கலைஞர்கள் இன்றைக்கு ஒளி விட்டுக்கொண்டிருக்கின்ற நட்சத்திரக் கலைஞர்கள், இந்தக் கலை உலகத்திலே தங்களுடைய ஆற்றலால், அறிவின் திறத்தால், எத்தனையோ புதுமைகளைச் செய்து காட்டிய கலைஞர்கள், இசைவாணர்கள், கர்நாடகக் கலைஞர்கள், கிராமப்புறக் கலைகளிலே ஈடுபட்ட கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நாடகத்தின் மூலம் நல்லறிவு ஊட்டியவர்கள், சமுதாயத்தொண்டு ஆற்றியவர்கள் இப்படி75 கலைஞர்கள் இங்கே பாராட்டப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு விருது வழங்கப்பட்டிருக்கிறது.

**பெருந்தன்மை உடையவர்கள்**

எனக்கு உள்ள ஒரு ஆதங்கம். அந்த 75 கலைஞர்களும் அவர்கள் விருது பெறுகிற நேரத்திலே, அவர்களைப் பாராட்டுகின்றவர்களும் இந்த மண்டபத்திலே நிரம்பியிருந்தால் இன்னும் நான் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருந்திருப்பேன். கலை உலகத்திலே உள்ள ஒருவருக்கு ஒரு விருதோ, பெருமையோ கிடைக்கிறதென்றால், அவருடைய சக கலைஞர்களும் அதைப் பார்த்து மகிழ, பாராட்ட அவர்களும் இந்த மண்டபத்திலே குழுமியிருப்பார்களேயானால், அவர்களுக்கும் ஒரு எழுச்சியாக இருக்கும். எனக்கும் இன்னும் மகிழ்ச்சியாக இருக்கும்.

இந்த ஆண்டு அது இல்லாவிட்டாலுங்கூட, அடுத்த ஆண்டு முதலாவது அத்தகைய முனைப்போடு எல்லாக் கலைஞர்களும், ஒரு கலைஞர் பெறுகின்ற விருது நமக்குத்





தரப்படாவிட்டாலும், நாம் பெறாவிட்டாலும், நாம் ஏற்கெனவே பெற்றிருந்தாலும், இன்றைக்கு நாமே அந்த விருதைப் பெறுகிறோம்' என்கின்ற அந்த உணர்ச்சியோடு எல்லாக் கலைஞர்களும் கலந்துகொள்ளவேண்டும்.

சொல்லப்போனால், எப்படி கோரிக்கை வைப்பதற்காக பேரணி நடத்த எல்லாக் கலைஞர்களும் ஒன்றுபட்டீர்களோ, அதைப்போலக் கலைஞர்களுக்கு விருதும், பெருமையும் கிடைக்கும் நேரத்திலும், எல்லாக் கலைஞர்களும் ஒன்றுபட்டு இருந்தால் பரவாயில்லை. கோரிக்கைக்காக மாத்திரம் இவர்கள் கூடுபவர்கள் அல்ல. ஒரு கலைஞன் புகழப்பட்டால், அதைப் பார்த்து மற்ற கலைஞர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்று அந்தப் பெருந்தன்மை உடையவர்கள், பெருமனது படைத்தவர்கள் கலைஞர்கள் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும். எனவே இந்த ஆண்டு எனக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆதங்கத்தை அடுத்த ஆண்டாவது நீங்கள் தீர்த்துவைக்கவேண்டும் என்று கலை உலகப் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

விருது பெற்றுள்ள கலைஞர்கள், நடிகர்கள், நடிகைகள், எழுத்தாளர்கள், நல்ல புத்தகங்களை எழுதியது மாத்திரமல்ல; எழுதியவைகளை எடுத்துச்சொல்லக் கூடிய அளவிற்குப் பேச்சாற்றல் படைத்தவர்கள், இயல், இசை, கூத்து என்கின்ற இந்த மூன்று முத்தமிழிலே ஈடுபாடு கொண்ட அத்தனை பேரும் இன்றைக்கு விருது பெற்றிருக்கின்றீர்கள்.

சில பேர் எனக்குக் கடிதம் எழுதினார்கள். உங்கள் கையால் நாங்கள் விருது பெறுகிறோம். அதற்காகப் பெருமையடைகிறோம் என்று எல்லாம் சொன்னார்கள். இங்கேகூட விருதுகளைப் பெற்ற போது, என்னைப் பார்த்து உங்கள் கையால் விருது பெறுவது எங்களுக்குப் பெருமை என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுக்கு விருது வழங்குகின்ற அளவிற்கு எனக்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அது எனக்குப் பெருமை என்று கூறி விருது பெற்றவர்களையெல்லாம் மீண்டும், மீண்டும் வாழ்த்துகிறேன்.

*(10-8-98 அன்று கலைமாமணி விருது வழங்கு விழாவில் பேசியதிலிருந்து)*



ஒழுக்கம் என்பது
உயர்வானதுதான்.
ஆனால்
அந்த வார்த்தை
பாமர மக்களை
ஏமாற்றி வாழப்
பயன்படுத்தப்படும்
சூழ்ச்சி ஆயுதமாகி
விடக் கூடாது!

- தந்தை பெரியார்

# மறைந்தும் மறையாமல் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பெரியவர் குமாரசாமி ராஜா

**குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் கலைஞர் உரை (8-7-98)**

"மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற பெரியவர், தேசத் தியாகி, தமிழகத்தினுடைய மக்களின் உள்ளங்களைப் பெருமளவுக்கு ஈர்த்துக் கொண்டிருக்கின்ற நல்லவர், வல்லவர் பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறுகின்ற நேரத்தில் அதில் பங்குகொள்கின்ற வாய்ப்பை இன்றைய தமிழக அரசு பெற்றமைக்கும், அந்த வாய்ப்பைப் பெற்ற தமிழக அரசின் தலைமை அமைச்சனாக நான் இருப்பதற்கும் மிகுந்த பெருமை அடைகிறேன்.

ராஜபாளையம் நகரம் இன்றைக்கு விழாக்கோலம் பூண்டிருக்கின்றது. ராஜபாளையத்திற்கு வருகின்ற சாலைகளெல்லாம் ஆர்த்தெழுந்து அலங்காரம் பூண்டு நிற்கின்றன. எல்லோருடைய இதழ்களிலும் குமாரசாமி ராஜா அவர்களின் பெயர் இன்றைக்கு உச்சரிக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றது. மூப்பனார் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையிலே இங்கே இந்த விழா நிகழ்ச்சி மாத்திரமல்ல; என்றென்றும் நிலையாக இருக்கக்கூடிய அளவிற்கு, மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்குத் திருமண மண்டபம், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் நிறைந்துள்ள ஒரு நூலகம், மற்றும் சில மண்டபங்கள் - இப்படி பலப்பல பயனுள்ள காரியங்கள் நூற்றாண்டு விழாவையொட்டி இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றன.

**அரசே விழாவை நடத்துகிறது**

இந்த விழாவை ராஜபாளையத்தில் நடத்தவேண்டுமென்று என்னுடைய அருமை நண்பரும், சட்டப்பேரவை உறுப்பினருமான அழகர்ராஜா அவர்கள், சட்டப்பேரவையிலே கேட்டபோது, "நடத்தப்படும்" என்று நான் சொன்னேன். "அரசே முன்னின்று நடத்தும்" என்றும் நான் கூறினேன். அழகர்ராஜா அவர்களுக்குக்கூட சந்தேகம் வந்திருக்கலாம். அன்றைக்குச் சொன்னாரே, இன்றைக்கு அரசே நடத்தமுடியுமா? என்ற சந்தேகம் இருந்திருக்கலாம். காரணம், அதுவரை அரசு இருக்குமா? - என்ற சந்தேகம். ஆனால், அரசும் இருக்கிறது. அரசேதான் இந்த விழாவை நடத்துகிறது.



இந்த விழா நடத்துவதற்கு ஒத்துழைக்கின்ற வகையில், விழாக்குழுவினர்– அதிலும் குறிப்பாக, நமது அன்பிற்குரிய ராமசுப்பிரமணிய ராஜா அவர்களும், அவரோடு இணைந்து செயலாற்றுகின்ற பிற உறுப்பினர்களும், சிறந்த முறையிலே தங்களுடைய பங்கை ஏற்று, இந்த விழா எல்லாவகையிலும் சிறப்படையக்கூடிய ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைப் பாராட்டுக்களை, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**யாருக்கும் பின் தங்கியவன் அல்ல**

இங்கே இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பேசும்போது, "தேசத் தலைவர்கள், தேசத் தியாகிகளை மதிக்கின்ற இயல்பு படைத்தவர் முதலமைச்சர் கலைஞர்" என்று குறிப்பிட்டார்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். குமாரசாமி ராஜா அவர்களுடைய பெயரை இந்த மாவட்டத்தின் ஆட்சியர் அலுவலகத்திற்குச் சூட்ட வேண்டும் என்று இராமசுப்பிரமணியராஜா குறிப்பிட்டு, அந்த வேண்டுகோளை நான் 89-90ல் ஏற்றுக்கொண்டதை நன்றிப் பெருக்கோடு வரவேற்புரையில் இங்கே குறிப்பிட்டார்.

**ஓமந்தூரார் நூற்றாண்டு விழா**

மாவட்ட ஆட்சிதத்தலைவரின் அலுவலக வளாகத்திற்கு 89-ஆம் ஆண்டிலேயே குமாரசாமி ராஜா அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். குமாரசாமி ராஜாவைப் போல, இன்னொரு பெயர் சொன்னால், நீங்களெல்லாம் நினைவில் கொள்ளக்கூடிய பெயர்தான் - தமிழகத்திலே, அதிககாலம் ஆட்சி நடத்தாவிட்டாலும்கூட, அதிக காலம் மக்களுடைய உள்ளத்திலே இடம்

## "சென்னை - கிரீன்வேய்ஸ் சாலைக்குக் குமாரசாமி ராஜா பெயர் சூட்டப்படும்!"

இன்று நேற்றல்ல, என்றைக்குமே எத்தனை ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, நாட்டிற்காக, மொழிக்காக, இனத்திற்காக தங்களை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் போற்றுவதிலும், புகழ்வதிலும் அவர்களுடைய நினைவு என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்று எண்ணி காரியமாற்றுவதிலும், நான் என்றைக்கும் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

அந்த வகையிலே எத்தனை நினைவுச் சின்னங்கள் தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையெல்லாம் இங்கே பட்டியலிட்டுக் காட்டி இருக்கின்றார்கள். அதிலும், இலக்கியச் செல்வர் அவர்களும், அவரே வேண்டுகோள் என்ற பெயரால் விடுத்து, எப்போதுமே இத்தகைய வேண்டுகோள்களை ஆணைகளாக ஏற்றுக்கொள்கின்ற நான், அந்த ஆணையை நிறைவேற்றுகின்ற வகையிலே, விஸ்வநாததாஸ் அவர்களுக்கான நினைவ மண்டபம் பெரிய அளவிலே மதுரை திருமங்கலத்திலே இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கின்றது.

**தியாகிகள் மணிமண்டபம்**

அதைப் போலவே சென்னையில் அவர் ஒரு விழாவிலே எடுத்துச்சொன்னதை ஏற்றுக்கொண்டு கிண்டி பகுதியில் தியாகிகளுடைய மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

நான் நேற்றைக்குக்கூட அவர் ஒரு தொலைக்காட்சியிலே சொன்னதைப் பார்த்தேன். அந்த மணிமண்டபத்திலே வைப்பதற்கான தியாகிகளின் படங்களெல்லாம் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்று சில படங்களைக் கூட தொலைக்காட்சியிலே காட்டியபொழுது, எனக்குப் பெருமிதமாக இருந்தது. மகிழ்ச்சியாக இருந்தது. விரைவிலே தியாகிகளுடைய மணிமண்டபம் தயாராகும்.

பிடிக்கின்ற அளவிற்கு, அந்த குறைந்த காலத்தில் ஆட்சி நடத்திய, திராவிட இயக்கத் தலைவர்களால், தாடி இல்லாத பெரியார் என்று அழைக்கப்பட்டவர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்.

அந்த ராமசாமி ரெட்டியாருடைய நூற்றாண்டு விழா 1995-ஆம் ஆண்டு வந்தது. நான் ஆட்சியில் இல்லாத காலம் அது. 95- ஆம் ஆண்டு அவர்களுடைய நூற்றாண்டு விழா வந்தது. அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக அப்போது இருந்த அரசு ஏதாவது முயற்சியில் ஈடுபட்டதா என்று நான் பழைய கோப்புகளையெல்லாம் புரட்டிப் பார்த்தேன். முயற்சியிலே ஈடுபட்டு, அதற்காக மூன்றரை இலட்ச ரூபாய் செலவு செய்வது என்று என்று கோப்பிலே குறிப்பிட்டு, ஆனால் நிகழ்ச்சி நடத்தப்படவில்லை. ஒதுக்கப்பட்ட மூன்று இலட்ச ரூபாய் செலவு செய்யப்படவில்லை.

நான் சில பேர் செய்த நல்லவைகளைத் தொடர்ந்து செய்யக்கூடியவன். எப்படியாவது செய்து காட்டக்கூடியவன். செய்ய விட்டுவிட்டதையும், எப்படியாவது செய்து காட்டக்கூடியவன். அது என்னுடைய பெருமையைக் காட்டுவதற்காக அல்ல; பெரியவர்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வதற்காக. அந்த வகையிலே ஆகஸ்டு மாதம் 25ஆம் - தேதி மறைந்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுடைய பிறந்தநாள் வருகிறது. அந்த நாளில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழா 95ல் நடத்துவதாக இருந்து நடத்தாமல் விடப்பட்ட அந்த விழா 98-ஆம் ஆண்டு ஆகஸ்ட 25-ஆம் தேதி சென்னை மாநகரில் மிகச் சிறப்பாக நடைபெறும்.

அதிலும் நம்முடைய மூப்பனார் அவர்களும், மற்ற கட்சித் தலைவர்களும் கலந்துகொள்வார்கள் என்று இப்போதே நான் அறிவிக்கிறேன். ஏனென்றால், குமாரசாமி ராஜா அவர்கள் எந்த அளவிற்குச் சாதாரண–சாமான்ய மக்களிடத்தில் பரிவுகொண்டு ஆட்சி நடத்தினாரோ. பொது வாழ்க்கையில் ஈடுபட்டாரோ; அதைப்போல ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களும், எளிமையாக



> **"சாதிமத பேதங்கள்**
> **மூடவழக்கங்கள்**
> **தாங்கிநடை பெற்றுவரும்**
> **சண்டை உலகிதனை**
> **ஊதையினில் துரும்புபோல்**
> **அலைக்கழிப்போம்; பின்னர்**
> **ஒழித்திடுவோம்; புதியதோர்**
> **உலகம் செய்வோம்!"**
>
> **- புரட்சிக் கவிஞர்**

எல்லோரிடத்திலும் பழகுவதில் இனிமையாக வாழ்ந்தவர். அதே நேரத்தில், தான் கொண்ட கொள்கைக்காகப் பதவி போனாலும் பரவாயில்லை என்று இங்கே உள்ள தலைவர்களிடத்தில் அல்ல, ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்களிடத்திலேயே எடுத்துச்சொல்லி, தான் கொண்ட கொள்கையை நிறைவேற்றிக் காட்டியவர். அப்படிப்பட்ட ஓமந்தூராருக்கு ஆகஸ்ட் மாதத்திலே நூற்றாண்டு விழா - விடுபட்டுப் போன நூற்றாண்டு விழா. இரண்டு, மூன்றாண்டு காலம் தாமதித்தாலும் நிச்சயமாக நடைபெறும் அது என்பதை இந்த விழாவிலே தெரிவிப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

**குமாரசாமி ராஜா போலவே**

ஏனென்றால், ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு நடைபெறுகின்ற நூற்றாண்டு விழாவில், இன்னொரு முன்னாள் முதலமைச்சருடைய நூற்றாண்டு விழா நடைபெறும் என்று இந்நாள் முதலமைச்சராகிய நான் அறிவிப்பது மிகமிகப் பொருத்தம் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். குமாரசாமி ராஜா அவர்களுடைய வாழ்க்கையைப் பார்த்தால், அதை ஒரு வரி விடாமல் படித்துப் பார்த்தால், இங்கே நம்முடைய முல்லைவேந்தன் பேசும்போது குறிப்பிட்டார்–

'குமாரசாமி ராஜாவும் சில கொள்கைகளுக்காகத் தன்னுடைய பதவியை இழக்க நேரிட்டது. கலைஞரும் அவ்வாறே இழக்க நேரிட்டது' என்று குறிப்பிட்டார். இந்த ஒரு சம்பவம் மாத்திரமல்ல. இளமைக்காலத்திலேயே பல சம்பவங்கள் எனக்கும் அவருக்கும் பொருத்தமாக இருக்கின்ற சம்பவங்களை நான் காண்கின்றேன்.

குமாரசாமி ராஜா உயர்நிலைப் பள்ளியிலே படித்தபொழுது, ராஜபாளையத்திலிருந்து, திருவில்லிப் புத்தூருக்கு ஏழு மைல் தூரம் நடநதே வந்துதான் படித்தார் என்று அவரே தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பில் எழுதி இருக்கிறார். மூப்பனார் அவர்களுக்குத் தெரியும். நான் பிறந்த திருக்குவளைக்கும், திருவாரூருக்கும் 15 கல் தொலைவு. அங்கே உள்ள திருநெல்லிக்காவல் என்ற ஊருக்குச் சென்று, ரயிலேற ஏழு மைல் தூரம் நான் நடநதே செல்லவேண்டும். நானும் ஏழு மைல்தூரம் நடந்துசென்றுதான் இரயிலேறி திருவாரூர் சென்றுதான் படித்தேன்.

**பொதுவாழ்வில் ஈடுபட்டதால்...**

எனவே, இந்த ஏழு மைல் எனக்கும் குமாரசாமி ராஜாவுக்கும் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அந்த ஒரு பொருத்தம்கூட நான் இந்த விழாவிலே கலந்து கொள்ளக் காரணமாக இருக்குமோ என்று கூட, நான் கருதுகிறேன். இன்னொன்று, அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே பெயிலானவர்; நானும் அவ்வண்ணமே.

அவரும் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெயிலானவுடன் நண்பர்கள் வருத்தப்பட்டார்களாம். அப்போது குமாரசாமி ராஜா "ஏன் வருத்தப்படுகிறீர்கள்? இதற்கெல்லாம் வருத்தப்படலாமா?" என்று சொன்னாராம். அதே மாதிரிதான் நானும் வருத்தப்படாதது மாத்திரமல்ல. பெரியாரோடு சேர்ந்து சுற்றுப்பயணம் போய்விட்டேன். பெரியாரோடு சுற்றுப் பயணம் போனதினால்தான் அப்போது பெயில் கூட ஆனேன்.

அதேபோல, பொது வாழ்க்கையில் ஈடுபட்டதன் காரணமாக குமாரசாமி ராஜா அவர்களும் எஸ்.எஸ்.எல்.சி.யிலே பெயிலானவர். அதற்கு யாரும் வருத்தப்படக்கூடாது. நானும் வருத்தப்படமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

இன்னொன்று அவருக்கு விளையாட்டுக்களிலே கால்பந்து விளையாட்டிலேதான் அதிகப் பிரியம் என்றும் அந்த விளையாட்டிலே கீழே விழுந்து ஒரு பாதிப் பல்லை உடைத்துக்கொண்டேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடைய இளமைக்கால வாழ்க்கை வரலாற்றில். எனக்கும் கால்பந்து விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திருவாரூரில் படித்த காலத்தில் கால்பந்து பந்தயங்கள் பலவற்றில் கலந்துகொண்டிருக்கின்றேன். பல்லை உடைத்துக்கொள்ளவில்லை. ஆனால், நெற்றியில் ஒரு காயம். இன்றைக்கும் இருக்கிறது. கால்பந்து விளையாட்டின்போது விழுந்ததால் ஏற்பட்ட தழும்பு அது.

இப்படி பலவகையிலும் இளமைக்காலத்திலே குமாரசாமிராஜா அவர்களின் வாழ்க்கையும், என்னுடைய வாழ்க்கையும், பொருந்தி இருக்கின்ற காரணத்தால், இரண்டு பேருடைய வாழ்க்கை வரலாற்றையும் சேர்த்துப் படித்த இராமசுப்பிரமணிய ராஜா, நான் இந்த விழாவிற்கு வரவேண்டுமென்று என்னை வலியுறுத்தி இருப்பாரோ என்று நான் கருதுகின்றேன்.

**சாதித் துவேஷம்**

இந்த மாவட்டத்தை எண்ணிப் பார்க்கிறேன்; சுற்று வட்டாரத்தைப் எண்ணிப் பார்க்கிறேன்.

குமாரசாமி ராஜா அவர்களுடைய வாழ்க்கையில் அவரே குறிப்பிட்டிருக்கின்ற இன்னொரு சம்பவம் என்னவென்றால், அவருக்கு ஒரு அய்யங்கார் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் நண்பராக இருந்திருக்கிறார். இருவரும் ஒருநாள் கடைவீதிக்குப் போகும் போது, ஒரு அய்யர் கடையில், அந்தக் கடையில் அந்த அய்யங்கார் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர் சென்று ஒரு வடையை வாங்கிச் சாப்பிட்டுவிட்டாராம். அய்யர் கடை வடையை வாங்கிச் சாப்பிட்டவர் அய்யங்கார். குமாரசாமி ராஜாவின் நண்பர். அந்த அய்யங்கார் பிள்ளை வடை வாங்கி சாப்பிட்டது தந்தைக்குத் தெரிந்தது. அடாத காரியம் செய்துவிட்டாய். அய்யர் கடை வடையைச் சாப்பிடலாமா என்று அந்த அய்யங்கார் பையனை அடித்து உதைத்தார். அடித்து

உதைத்தது மாத்திரமல்ல; தோஷம் கழிப்பதற்காகப் பால், தண்ணீர் இவைகளையெல்லாம் கலந்து அதிலே சாணத்தையும் கலந்து அதிலே கோமியத்தையும் கலந்து "இதைக் குடி. அப்போதுதான் தோஷம் கழியும்" என்று சொல்லி குடிக்க வைத்திருக்கிறார் - அப்போதே அய்யருக்கும் அய்யங்காருக்கும் சாதித் துவேஷம் இருந்திருக்கிறது - அதனுடைய சாயல் இன்றைக்கும் இருக்கிறது.

இந்த மாவட்டத்திலும் மற்ற மாவட்டங்களிலும் நூறாண்டு காலத்திற்கு முன்பே அய்யரும், அய்யங்காரும் ஜாதித் துவேஷத்திலே இருந்தார்கள் என்பதை குமாரசாமி ராஜா சொல்லித்தான் நமக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஜாதி வேறுபாடுகள், மத வேறுபாடுகள், மத மோதலகள், சாதி மோதல்கள் இவைகளெல்லாம் நூற்றாண்டு காலமாகத் தமிழகத்திலே இருக்கின்றன. அதற்காக மனம் வெதும்பியவர்கள்; அது தீர வேண்டும், அது அகற்றப்பட வேண்டும் என்று கருதியவர்கள் பலர் இருந்தார்கள். அப்படிப்பட்டவர்களிலே குமாரசாமி ராஜா போன்றவர்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்று எண்ணுகின்ற நேரத்திலே நமக்குள்ள பணி எவ்வளவு பெரிது என்பதை நாம் எண்ணிப் பார்க்க முடிகிறது.

**நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்தவர்**

பெரிய ராஜ குடும்பத்திலே பிறந்தவர். செல்வந்தர், செல்வம் செழிக்கின்ற அளவிற்கு நிலபுலன்களும், தோட்டம், துரவுகளும் கொண்டவர். அந்த இனிய வாழ்வை, சுக வாழவை விரும்பாமல் ஒரு முறை ஓராண்டு காலமும் இன்னொருமுறை ஒன்பது மாத காலமும் சிறையிலே அடைக்கப்பட்டு நாட்டிற்காக, மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார் என்கிறபோது இளமைக் காலத்திலே இந்தத் துடிப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த இளமைக் கால நினைவுகளைப் படித்தால் தமிழகத்திலே இன்றைக்கு உள்ள இளைஞர்கள் திருந்துவார்களா? குமாரசாமி ராஜாவைப் போன்று நாங்களும் ஆக வேண்டும் என்று எண்ணுவார்களா? என்ற ஆதங்கம் கூட எனக்கு ஏற்படுகிறது. ஏனென்றால் நான் மிகுந்த வருத்தத்திற்கும் கவலைக்கும் ஆளானவனாக இருக்கிறேன்.

இன்றைக்கு உள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் இந்த நாட்டையும், சமுதாயத்தையும், மொழியையும், இனத்தையும் காப்பாற்றுவதற்கு எந்த வகையிலே பயன்படப் போகிறார்கள் என்பதுதான் அந்தக் கவலை. ஒரு 50 ஆண்டு காலத்திற்கு முன்பு இளைஞர்கள் மாணவப் பருவத்தில் அவர்கள் எந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களாக இருந்தாலும்; அது காங்கிரஸ் இயக்கமானாலும், திராவிட இயக்கம் ஆனாலும், கம்யூனிஸ்ட் இயக்கமானாலும் அந்த இயக்கத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்கள் கல்லூரிகளில், பள்ளிகளில் இலக்கியச் சொற்பொழிவுகளில் காவியங்களைக் கற்றல், சரித்திரங்களைப் படித்தல், சரித்திர நாயகர்களைப் பற்றி விமர்சித்தல் அவர்கள் வழி நடக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒருவருக்கொருவர் அளவளாவுதல், உரையாடுதல், விவாதித்தல், இவைகளெல்லாம் பழைய கால இளைஞர்களுடைய பழக்க வழக்கங்களாக இருந்தது. ஆனால் இன்றைய இளைஞர்கள்; நான் எல்லோரையும் சொல்லவில்லை. சிலர் இன்றைக்கும் அந்த முனைப்போடு இருக்கிறார்கள்.

**வாழ்க்கைப் பாடம்**

இந்தச் சமுதாயத்தைக் காக்கும் ஈட்டி முனைகளாக, இந்தச் சமுதாயத்திற்குப் பாடுபட வேண்டும் என்ற தொண்டு உள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இளைஞர்கள் பலர் இன்றைக்குக் கேளிக்கைகள், கூத்துகள், சினிமாக்கள், ஆடம்பரங்கள், இதில் தங்கள் நேரத்தைச் செலவழித்தால் போதும் என்று உல்லாச புரியே தங்களது வாழ்க்கையின் குறிக்கோள் என்று எண்ணுகின்ற காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது மாற வேண்டும். இது மாறுவதற்குக் குமாரசாமி ராஜா போன்றவர்களுடைய இளமைக்கால வாழ்க்கை பாடமாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அத்தகைய ஒரு பாடத்தை நமக்கு வழங்கியவர் முன்னாள் முதலமைச்சரும், ஒரிசா மாநில முன்னாள் ஆளுநருமான பி.எஸ்.குமாரசாமி ராஜா அவர்கள். இந்த "பி.எஸ்" என்கின்ற அவருக்கு முன்னால் இருக்கின்ற அந்த இன்சியல் - இரண்டு ஆங்கில எழுத்துக்கள். அது அவருடைய குடும்ப - தகப்பனாருடைய - பாட்டனாருடைய பெயர்களாக நான் எண்ணவில்லை. பி.எஸ்.என்பது 'பப்ளிக் சர்வன்ட்' என்ற முறையிலே அவர் பப்ளிக் சர்வண்ட்டாகவே வாழ்ந்து காட்டினார்.

அவர் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர். பரிட்சையிலே மாத்திரமல்ல; படிப்பிலே மாத்திரமல்ல; அவர் ஈடுபட்ட அரசியலிலே கூட வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்த நேரத்தில் இரண்டையும் ஒன்றுபோல் கருதி நாடு முக்கியம், சமுதாயம் முக்கியம் என்ற அளவிலே பாடுபட்டவர். அப்படிப்பட்ட அந்தப் பெரியவருடைய புகழை இன்றைக்கு நாம் நினைத்து மகிழ்ந்தால் மட்டும் போதாது. எதிர்கால இளைஞர்களுக்கு நல்ல பாடமாக அமையவேண்டும் என்று வேண்டி இந்த விழாவை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

இங்கே சில கோரிக்கைகளை நம்முடைய ராமசுப்பிரமணிய ராஜா அவர்கள் வைத்திருக்கிறார்கள். இரண்டு, மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் உடனடியாக நான் இங்கு பதில் அளிக்க முடியாவிட்டாலும் முக்கியமான ஒரு கோரிக்கை சென்னையிலே அமைச்சர்கள் வாழ்கின்ற இடம் கிரீன்வேஸ் சாலை. அந்தச் சாலையின் பெயரை மாற்றி குமாரசாமி ராஜா சாலை என்று பெயர் வைக்க வேண்டும் என்று நம்முடைய வரவேற்புக் குழுத் தலைவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு விரைவில் இன்னும் இரண்டொரு நாளில் அந்தப் பெயர் மாற்றப்படுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும். இதற்கு சென்னை மாநகராட்சி மன்றமும், ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து வாழ்க குமாரசாமி ராஜாவின் புகழ் என்று உரைத்து விடைபெறுகிறேன்". ★



மனதில் மாசு,
மதவெறி, சாதி,
சுயநலம், ஆணவம்
ஆகியவற்றை
மக்கள் விட்டொழிக்க
வேண்டும்;
அப்போதுதான்
நம்நாடு
முன்னேறும்!

- அறிஞர் அண்ணா

# மனித தெய்வங்களுக்காக நடத்தப்படும் திருவிழா

**ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் பராமரிப்பில்**

**தொழில் நிறுவனங்களின் பங்கேற்புத் திட்டத்தின் தொடக்க விழாவில்**

**முதலமைச்சர் கலைஞர் பெருமிதம்**

"இந்த இனிய மாலை நேரத்தில் நம்முடைய இதயமெல்லாம் பூரிக்கின்ற அளவிற்கு இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் எல்லாப் பிரிவு மக்களுடைய அன்போடும், ஆதரவோடும், நல்வாழ்த்துக்களோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த அரசு - அந்த மக்களில் ஒரு பகுதியாக விளங்குகின்ற - தொழில் வளர்ச்சியின் மூலம் நாட்டில் பல்வேறு வளங்களை வளர்க்க முடியுமென்ற உறுதியோடு செயல்பட்டு, அரசுக்கு உறுதுணையாக இருக்கின்ற தொழில் அதிபர்கள் தங்களுடைய கடமையைச் செய்கின்ற ஒரு நிகழ்ச்சியே இந்த நிகழ்ச்சியாகும்.

**மக்கள் துணையோடு அரசு ஆற்றிவரும் பணிகள்**

அவர்கள் சொந்த முறையில், அவர்களாகவே முன் வந்து சில பணிகளை அவர்களுடைய தொழில் நிறுவனங்களின் சார்பாக மக்களுக்கு என்ற நிலையிலே ஆற்றிக் கொண்டிருந்தாலுங்கூட, அரசின் துணையோடு, அரசின் வேண்டுகோளை யேற்று, அந்தப் பணிக்குத் தங்களை ஒப்படைத்துக்கொண்டிருக்கின்ற விழா நிகழ்ச்சியாகும் இந்த நிகழ்ச்சி. தமிழ்நாட்டிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த அரசு, தானே முன்நின்று எல்லாப் பணிகளையும் மக்களுக்கு ஆற்ற முடியுமென்கின்ற அந்த தன்னம்பிக்கையை மாத்திரம் கொள்ளாமல் இதற்கு எல்லா மக்களுடைய துணையும் வேண்டுமென்ற அடக்க உணர்வோடு அனைவருடைய உதவியையும் பெற்று - அந்த மக்களுக்காகப் பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. அதற்கு அடையாளம்தான் இந்த இரண்டாண்டு காலத்திலே அரசு அறிவித்துள்ள இரண்டு புதிய திட்டங்கள். ஒன்று 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' - மற்றொன்று 'நமக்கு நாமே திட்டம்'.

அண்ணா மறுமலர்ச்சித திட்டத்தின்படி தமிழகத்திலே இருக்கின்ற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டு, அந்தக் கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து முடிப்பது என்று உறுதிபூண்டு, அந்தப் பணிகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றது. நமக்கு நாமே திட்டம் என்பது, எல்லாக் கிராமங்களிலுமே, மக்களுடைய ஒத்துழைப்போடு வள்ளல் தன்மை வாய்ந்தவர்கள், பெரியவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அவர்களுடைய பொருள் உதவியோடு கூட, அரசின் ஒத்துழைப்பையும் அரசின் ஆக்கப்பூர்வமான ஊக்கத்தையும் வழங்கி, அதன் மூலமாக அந்தக் கிராமத்திற்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்வது.

**குறைபாட்டை நீக்கிய நமக்கு நாமே திட்டம்**

நீங்கள் அண்மையிலே 'இந்து' பத்திரிகையிலே வந்த ஒரு செய்தியைப் படித்திருக்கக்கூடும். நமக்கு நாமே திட்டம் எப்படி செயல்படுகின்றது என்பதற்கு உதாரணமாக அந்தச் செய்தி விளங்குகிறது. திருச்சி மாவட்டத்தில் மணிகண்டம் என்ற கிராமப் பகுதியில் அந்த ஊர் மக்கள் எல்லாம் ஒன்று கூடி தங்களுக்கு கால்நடை மருத்துவமனை ஒன்று தேவை. அந்தத் தேவை நிறைவு செய்யப்படவில்லை என்ற குறைபாட்டை எழுப்பியபோது, நமக்கு நாமே திட்டத்தின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்று, நமக்கு நாமே திட்டத்தினுடைய கோட்பாடுகளை எடுத்துரைத்து, அந்தப் பகுதி மக்கள் உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு, அவர்களும் தங்களால் இயன்ற தொகையை அதற்காகத் தந்து, சில மணி நேரங்களிலே கால்நடை மருத்துவமனை உருவாகின்ற ஒரு அற்புதமான காரியம் அங்கே நடைபெற்றது என்று இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு அரசே முன்நின்று எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு நேரம் இல்லை. நினைப்பில்லை என்பதை விட, நிதி இல்லை என்பதுதான் மிக முக்கியமான காரணம். அந்த நிதித் தேவையை அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அதற்கு நல்ல உள்ளங்கள் வேண்டும், அந்த உள்ளங்களை நாங்கள் நாடிச் சென்றபோது தரப்பட்ட ஒத்துழைப்பின் அடையாளம்தான் இந்த மண்டபத்தில் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தப் பெரு விழா - என்னுடைய மனமார்ந்த அன்போடு, பாசத்தோடு சொல்லவேண்டுமேயானால் திருவிழா. திருவிழா ஆலயங்களிலேதான் நடைபெறும். ஆனால் இது மனித தெய்வங்களுக்காக நடத்தப்படுகின்ற திருவிழா. அந்தத் திருவிழாவிலே பங்குகொள்ள இசைவு தந்து இன்றைக்கு அதற்கான ஒப்பந்தப் பத்திரங்களை உங்கள் முன்னிலையிலே பெற்றுக்கொண்டிருக்கின்ற தொழில்துறை அதிபர்கள் அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே ஏறத்தாழ 1,400 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் பலவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதைப் போல, அவைகளைச் சொந்தக் கட்டடங்களிலே - நல்ல நல்ல கட்டடங்களிலே இயங்கச் செய்ய வேண்டிய முயற்சியை இந்த அரசு ஏற்கெனவே 89-90ல் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது - அந்த இரண்டாண்டுக் காலத்தில் 136 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டி முடித்தது. அதற்குப் பிறகு ஐந்தாண்டுகாலம் நடைபெற்ற ஆட்சியில் - 93 சுகாதார நிலையங்கள்தான் கட்டி முடிக்கப்பட்டன. நாங்கள் கட்டியதைப் போன்ற அதே கட்டடங்கள்தான்.

**சொந்தக் கட்டடங்களில் அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்கள்**

அதற்குப் பிறகு 96-97ல் மீண்டும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்துள்ள இந்த நிலையில் 300 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஓராண்டில் கட்டடங்கள் கட்டித் தருவதென்று தீர்மானித்து 18 கோடி ரூபாய் செலவிலே அவைகள் எல்லாம் கடந்த ஆண்டு கட்டப்பட்டு ஏறத்தாழ அந்தப் பணிகள் முற்றுப்பெறும் நிலையிலே இருக்கின்றன. மேலும் இந்த 97-98 ஆம் ஆண்டில் 352 சுகாதார நிலையங்களுக்கு 24 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு - அந்தப் பணிகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் தமிழகத்திலே உள்ள அனைத்து ஆரம்பச் சுகாதார நிலையங்களும் சொந்தக் கட்டடங்களிலே இயங்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடிய அரிய வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கின்றது.



அதுமாத்திரமல்ல; பல ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நகர்ப்புறங்களிலிருந்து சற்று விலகியே இருக்கின்றன. அப்படி விலகியிருக்கின்ற காரணத்தால், தேவைப்படுகின்ற அவசர மருத்துவ வசதிகளைப் பெற, ஆலோசனைகள் பெற முடியாத சூழ்நிலையில் அந்தச் சுகாதார நிலையங்களுக்கெல்லாம் தொலைபேசி வசதி செய்து தரவேண்டுமென்று திட்டமிட்டு, இப்போது இந்த இரண்டாண்டு காலத்தில், 424 சுகாதார நிலையங்களுக்குத் தொலைபேசி வசதியும் செய்து தரப்பட்டிருக்கின்றது.

24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய, சிகிச்சை வழங்கக் கூடிய நிலையங்களாக 400க்கு மேற்பட்ட நிலையங்கள் மாற்றப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு - இது வரையிலே அவ்வாறு 250 நிலையங்கள் 24 மணி நேரமும் பணியாற்றக்கூடிய நிலையங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. 24 மணி நேரமும் பணியாற்றுகிறார்களா என்பதைச் சென்னையிலிருந்து நானோ, வீராசாமியோ மாத்திரம் கண்டுபிடிக்க முடியாது. ஆங்காங்கு இருக்கின்ற மக்களும் கண்டுபிடித்து எதற்கெதற்கோ சாலைமறியல் செய்கின்ற மக்கள் அப்படி அங்கே நடைபெறாவிட்டால் அதை எங்களுக்கு உணர்த்தச் சாலைமறியல் செய்தால், அந்தச் சாலை மறியலை நான் நிச்சயமாக ஏற்றுக்கொள்வேன். நல்ல காரியங்களுக்காக நடத்தப்படுகின்ற சாலை மறியலுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வேண்டுமென்றே திட்டமிட்டு சாலைமறியல் செய்பவர்கள் சட்டப்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள். இந்த இரண்டு வித்தியாசங்களையும் சாலைமறியல் செய்பவர்கள் உணர்ந்துகொண்டால் 24 மணி நேரமும் ஒழுங்காக மருத்துவமனைகள் நடைபெறுவதற்கு வசதி வாய்ப்பு ஏற்படும்.

இந்த 250 நிலையங்கள் போக, மீதம் 174 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 24 மணி நேரம் பணியாற்றக்கூடிய நிலையங்களாக மாற்றப்பட வேண்டியிருக்கிறன. 24 மணி நேர மருத்துவமனை என்று அறிவித்து விட்டால் மாத்திரம் போதாது. அங்கே பணியாற்றுவதற்கு முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த 24 மணி நேர மருத்துவமனைகளுக்கு 250 மருத்துவர்கள் பதவிகளும், 250 செவிலியர் பதவிகளும் இந்த அரசால் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே ஒன்றிரண்டு விட்டுப் போயிருந்தால் நாளைக்குப் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவார்கள். 250 மருத்துவ மனைக்கு மருத்துவர்கள், செவிலியர்கள் என்று சொன்னார்கள்; இன்ன ஊரிலே மருத்துவரே இல்லை, மருத்துவர் இருந்தாலும் செவிலியர் இல்லை என்கிற செய்தி வரக்கூடும்.

**பத்திரிகைச் செய்தியைப் பார்த்து, குறைபாடுகள் நீக்கப்படுகின்றன**

ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். காலையில் நான் ஐந்தரை மணிக்கு எழுகிறேன். ஆறு மணிக்கு

என்னுடைய "வாக்கிங்"கை முடிக்கிறேன். அதற்குப் பிறகு நான் தொடருகின்ற வேலை - பத்திரிகைகளைப் படிப்பது. எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கிறேன். எல்லா பத்திரிகைகளையும் படிப்பதால் அரசாங்கத்தைப் பற்றி, என்னென்ன குறைபாடுகள் வந்திருக்கின்றன. எந்த ஊரில் என்ன சிக்கல், என்ன பிரச்சினை என்பதையெல்லாம் படிக்கிறேன். நான் படித்த பிறகுதான் அமைச்சர்களுக்கே சொல்கிறேன். பிறகுதான் அவர்கள் படிக்கிறார்கள். உண்மையைச் சொல்கிறேன். நான் படித்த பிறகு தான் அதிகாரிகளுக்கே கூறுகிறேன். அதனால்தான் உடனுக்குடன் அதற்கான விளக்கங்கள், பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். முதலமைச்சர் நம்முடைய பத்திரிகையை முதன்முதலாகத் தமிழ்நாட்டிலேயே படிக்கிறார் என்பதை வார ஏட்டார்களும், நாளிதழாளர்களும் தெரிந்துகொள்ளலாம். அதற்குப் பிறகு - திருத்தங்கள், விளக்கங்கள், பரிகாரங்கள் எல்லாம் வருகின்றன என்றால், படித்துப்பார்த்து, உடனடியாக என்னுடைய அலுவலகச் செயலாளர்களை விரட்டு விரட்டென்று விரட்டி, அவர்கள் தொடர்பு கொண்டு மற்ற அதிகாரிகளிடம் கேட்டு - அது குமரிமுனையிலே நடைபெறுகின்ற காரியமானாலும் சரி - சென்னை மாநகரத்திலே நடைபெறுகின்ற காரியமானாலும் சரி - அதற்கெல்லாம் இன்றைக்குப் பரிகாரங்கள் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலையிலே இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த ஆட்சிக்கு நம்முடைய தொழில் அதிபர்கள் தங்களுடைய தூய உள்ளத்தோடு துணை புரிய வந்திருக்கின்றார்கள். அவர்களை யெல்லாம் நான் நேசக்கரம் கொண்டு வரவேற்றிருக்கிறேன்.

தொழில் அதிபர்கள் தமிழகத்தைத் தொழில் வளமாக ஆக்குவதற்கு இன்றைக்குத் துணை புரிந்துகொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஏற்றிருக்கும் தொழில் வளர்க்கும் பணியோடு, தமிழகத்திலே உள்ள மக்களின் சுகாதாரமும் செம்மைப்பட வேண்டும் என்ற அந்தப் பணியையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

எனக்குக்கூட ஒரு சந்தேகம். ஏதோ முதலமைச்சர் சொன்னார், அமைச்சர்களும் சொன்னார்கள். ஆர்க்காடு வீராசாமி வற்புறுத்தினார், அதற்காக ஒப்புக்கொண்டு தொலைத்தோம் என்று ஒப்புக்காக இந்தக் காரியத்தைச் செய்யாமல் உண்மையிலேயே செய்கிறார்கள் என்பதற்கு நம்முடைய வேணு, ஸ்ரீனுவாசன் - இண்டியா சிமெண்ட்ஸ் சீனிவாசன் போன்றவர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்களே, இது மாத்திரம் போதாது, பள்ளிக் கூடங்களையும் நாங்கள் எடுத்து நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னதிலிருந்து இவர்கள் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் இந்தப் பணியை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்.

"அவர்களுடைய பரந்த உள்ளத்தை - பெரிய உள்ளத்தை நான் பாராட்டுகிறேன். இந்த விழா நடைபெறுவது இவர்களைப் பாராட்டுவதற்காக என்று யாரும் கருதக்கூடாது. இந்த விழா நிகழ்ச்சி நடைபெறுவது - அவர்களுக்கு ஒப்பந்தப்பத்திரங்களைத் தருவதற்காக என்று கருதக்கூடாது. இந்த விழா நடைபெறுவது நாளைக்குப் பத்திரிகைகளிலே செய்தியாக வந்து - தமிழ்நாட்டிலே உள்ள மற்ற தொழில் அதிபர்களும் இதைப் போன்றதொரு நல்ல பணிகளிலே ஈடுபட வேண்டும் என்கிற எண்ணத்தை அவர்களுக்கு உருவாக்குவதற்காக நடைபெறுகின்ற ஒரு விளம்பர விழாவே தவிர, இது இவர்களைப் பாராட்டுகின்ற விழா அல்ல; எங்களைப் பாராட்டிக் கொள்கின்ற விழா அல்ல என்பதை எடுத்துச் சொல்லி, இதற்கு உதவிய நம்முடைய தொழில் அதிபர்கள் தங்களுடைய அன்பையும், ஆதரவையும் அரசுக்கு வெளிப்படுத்தியிருப்பது மாத்திரமல்லாமல் ஏனைய தொழில் அதிபர்களிடத்திலும் இந்தத் தொண்டு மனப்பான்மையை எடுத்துக்கூறி, அனைவருடைய துணையையும் இந்த அரசுக்கு, மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மீண்டும் மீண்டும் என்னுடைய நன்றியை அவர்களுக்கெல்லாம் காணிக்கையாக ஆக்குகிறேன்".

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார் (28.6.98).

★ ★ ★

*"நான் நபிகள் நாயகத்தின் வரலாற்றைப் படித்திருக்கிறேன். நபிகள் நாயகத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள், அவருடைய எண்ணங்களுக்கு விரோதமாக இருந்தவர்கள் அவரைப் பழித்தனர். இழித்துப் பேசினர். அவர் எரிச்சல் அடைவார் என்று எண்ணி ஏதேதோ காரியங்களில் ஈடுபட்டனர். அவர் தினந்தோறும் நடந்து செல்கிற வழி ஒன்று உண்டு. அப்படி அவர் நடந்து செல்லும்போது ஒரு வீட்டு மாடியிலிருந்து ஒரு அம்மையார் நாள்தோறும் அவருடைய தலையில் குப்பையைக் கொட்டிக்கொண்டே இருப்பாராம். நபிகள் நாயகமும் தலையில் விழுந்த குப்பையைத் தட்டிவிட்டுவிட்டு மெல்லப் புன்னகை செய்தவாறு தொடர்ந்து தெருவில் நடந்து போவாராம்.*

*இது ஒவ்வொரு நாளும் நடைபெற்ற நிகழ்ச்சி. ஒருநாள் நபிகள் நாயகம் அவர்கள் அப்படி தெருவில் செல்லும்போது அந்த மாடியிலிருந்து யாரும் குப்பை கொட்டவில்லையாம். நபிகள் நாயகத்திற்கு ஆச்சரியம்! என்ன நாள்தோறும் கொட்டப்படுகின்ற குப்பை இன்றைக்குக் கொட்டப்படவில்லையே என்று ஆச்சரியப்பட்டாராம். அதைப்பற்றி உடனே விசாரித்தாராம். "எங்கே அந்த அம்மையாரைக் காணவில்லை", என்று கேட்டாராம்.*

*அதற்கு "அந்த அம்மையாருக்கு உடல் நலம் சரியில்லை, படுத்திருக்கிறார். ஆகவேதான் குப்பை கொட்டவில்லை" என்று பதில் கூறினார்களாம். உடனே நபிகள் நாயகம் பதைத்துப்போய் மாடிக்குச் சென்று அந்த அம்மையாரைச் சந்தித்து "உடல் நலமா?" என விசாரித்தார் என்று நபிகள் நாயகம் வரலாற்றில் குறிப்பு ஒன்று உண்டு.*

*நான் நபிகள் நாயகம் அல்ல; ஆனால் குப்பை கொட்டுகிற*



*அம்மையார்கள் நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கள் கொட்டாவிட்டால் ஏன் கொட்டவில்லை என்று கேட்பேனே தவிர, கொட்டிக் கொண்டே இருந்தால் அதற்காக நான் கவலைப்பட மாட்டேன் என்பதற்காகத்தான் நபிகள் நாயகத்தின் வரலாற்றை இங்கே குறிப்பிட்டேன்".*

**- முதலமைச்சர் கலைஞர்**
**(5.7.98 அன்று கடலூரில் ஆற்றிய உரையிலிருந்து)**

வேளாண்மை:

# பயிர்களில் நூற்புழுக்களின் தாக்குதலைக் கண்டறிவது எப்படி?

பயிர்களுக்குச் சேதத்தை உண்டாக்கும் கண்ணிற்குப் புலப்படாத நூற்புழுக்களின் தாக்குதலை, பொதுவான அறிகுறிகளான ஆங்காங்கே திட்டுத்திட்டாகக் காணப்படும் உரிய வளர்ச்சியற்ற வெளிறிய மஞ்சள் நிறமடைந்த பயிர்கள், போதிய ஈரமிருந்தும் பகலில் வாடிய தோற்றத்துடன் காணப்படுதல் இதர பயிர் நோய்க் கிருமிகளான பூஞ்சாளம், பாக்டீரியா போன்றவைகளால் விரைவாகவும், அதிகமாகவும் பாதிக்கப்படுதல், அதிகமான அளவில் நாற்றுகள் மடிதல், மகசூல் குறைதல் மூலம் கண்டறியலாம். எனினும் தனிப்பட்ட நூற்புழுக்களின் சேதத்தை, சில குறிப்பிட்ட அறிகுறிகள் மூலம் எளிதாக ஊகிக்கலாம். அவையாவன :

| நூற்புழுக்கள் | பாதிக்கப்படும் பயிர்கள் | அறிகுறிகள் |
|---|---|---|
| 1. வேர்முடிச்சு நூற்புழு | காய்கறி, எண்ணெய்வித்து, மலர், பழவகை மற்றும் இதர பயிர்கள். | வேர்களில் காணப்படும் வேர் முடிச்சுகள். |
| 2. முட்டைக்கூடு நூற்புழு | பருப்பு வகைப் பயிர்கள் மற்றும் எள் | குறைவான விதை உற்பத்தியுடன் கூடிய சோடையான காய்கள் உரிய வேர் வளர்ச்சி இல்லாதிருத்தல். |
| 3. உருளைக்கிழங்கு முட்டைக்கூடு நூற்புழு | உருளைக்கிழங்கு | வளர்ச்சி குன்றிய வேர்களில் சிறு கடுகு போன்ற வெண்ணிற நூற்புழுக்கள் காணப்படுதல். |
| 4. எலுமிச்சை நூற்புழு | எலுமிச்சை | குறைவான மங்கிய அழுக்கு நிறத்துடன் மண் துகள்கள் ஒட்டிய வண்ணம் இருக்கும் வேர்ப் பகுதிகள். |
| 5. மொச்சை வடிவ நூற்புழு | பருத்தி, பப்பாளி, ஆமணக்கு, காய்கறிப் பயிர்கள் | நாற்றுகள் (அ) நட்ட பின்பு அதிக அளவில் செடிகள் பட்டுப் போகுதல், வேர்களின் வளர்ச்சி இல்லாதிருத்தல், பருத்திப் பயிர்கள் இலைகள் பகலில் ஒளிரும் தன்மையுடனும், விளிம்புகள் மடிந்து மேல் நோக்கியும் இருத்தல். |
| 6. குடையும் நூற்புழு | வாழை, தென்னை, மஞ்சள், இஞ்சி, மிளகு, பாக்கு | வேர் மற்றும் கிழங்குகளின் வெளியேயும், உள்ளேயும் ஆங்காங்கே கருமை கலந்த அழுகிய பகுதிகள் காணப்படுதல். |
| 7. வேர்கருகல் நூற்புழு | வாழை, காய்கறிகள், கனகாம்பரம், நிலக்கடலை மற்றும் இதர பயிர்கள் | வேர்களில் செந்நிறம் கலந்த கருமை நிறக் கீறல்கள் போன்ற கோடுகள் காணப்படுதல். |
| 8. நெல்வேர் நூற்புழு | நெல் | கருமை கலந்த செந்நிறத்துடன் கூடிய வேர்ப்பகுதியுடைய நெற்பயிர்கள், அறுவடைக்குத் தயாராகத் தாமதமாகும். |
| 9. நெல் வெண் நுனி இலை | நெல் | இலைகளில் நுனிப்பகுதி வெளிர்ந்து காய்ந்து சாட்டை போன்று சுருங்கிக் காணப்படுதல். கதிர்களில் பதர் எண்ணிக்கை அதிகமாக இருத்தல். |
| 10. நிலக்கடலை காய்வடு | நிலக்கடலை | காய்களின் மேற்பகுதியில் திட்டுத்திட்டாகக் கருமை கலந்த பகுதிகள் காணப்படுதல். |
| 11. வளைய நூற்புழு | நிலக்கடலை | வேர்களில் வளர்ச்சிப் பாதிப்பு, நிலக்கடலை போன்றவற்றின் பகுதிகளில் மேற்பரப்பு திட்டுத்திட்டாகக் கருமை நிற மாற்றமடைதல். |


**தகவல்**

எஸ். இராமகிருஷ்ணன், கே.பூர்ணிமா, சி.வி.சிவகுமார்
நூற்புழுவியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை - 3.



**வெளியீடு**

தகவல் தொடர்புப் பணி மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை - 3.



# வெளிச்சத்திற்காகத்தான் விளக்கு வைக்கவேண்டுமே தவிர, விளக்கிற்காக யாரும் விளக்கு வைக்கமாட்டார்கள் - அதுபோல பிரச்சினைகளுக்குத்தான் போராடவேண்டுமே தவிர, போராட்டத்திற்காகப் போராட்டங்கள் கூடாது!

***தலைமைச் செயலகச் சங்கப் பொன்விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரை!***

இந்த அரசு பொதுவாக அரசு அலுவலர்களுக்கு - ஆசிரியர்களுக்கு, குறிப்பாகவும், சிறப்பாகவும் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தினுடைய சங்கத்திலே உள்ளவர்களுக்கு 67-ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்ற காலந்தொட்டு என்னென்ன கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றியிருக்கின்றது என்பதை ஒன்றிரண்டை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மேலும் சிலவற்றை நான் சுட்டிக்காட்ட வேண்டிய கடமை உள்ளதால் சுட்டிக்காட்டுகிறேன்.

68-ஆம் ஆண்டுதான் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் இங்கே - இதே தலைமைச் செயலகத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பைப் பெற்றுக் கொண்டு, அளிக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றான நகர ஈட்டுப்படியை அரசு அலுவலர்களுக்கு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள் என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

72-ஆம் ஆண்டு இந்த அரசு மூலம் தான் முதன்முதலாகப் பல்லாண்டு காலமாக உங்களுடைய பெரும் போர்க்குரலாக இருந்த ரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் நிறைவேற்றித்தந்தேன்.

நிறைவேற்றியதற்காகப் பாராட்டு விழா ராஜாஜி மண்டபத்தில் தந்தை பெரியார் முன்னிலையில் நடைபெற்று, பலபட புகழ்ந்து பெரியார் அவர்கள் பேசிய அந்தப் பேச்சு இன்னமும் என்னுடைய செவிகளிலே இன்பமாக ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றது.

**ஊழியர்களுக்குச் சலுகைகள்**

அதற்குப் பிறகு ஊதியக் குழுவின் பரிந்துரைகளையேற்று வீட்டு வாடகைப்படியை உயர்த்த இந்த அரசு தான் வழிவகை செய்தது என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். விடுப்பில் செல்லாமலேயே ஈட்டிய விடுப்பைச் சரண் செய்துவிட்டு அதற்குப் பதிலாகத் தொகையைப் பெறும் சலுகையை அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு தான் வழங்கியது.

74-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1-ஆம் தேதி முதல் அரசு ஊழியர்களுக்குச் சிறப்புக் குடும்ப நலத்திட்டம் என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி முதன்முதலாக அந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது, அரசு ஊழியர்கள் பணிக்காலத்திலே இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது மெல்ல வளர்ந்து 60 ஆயிரம் என்று உயர்ந்து, இப்போது ஒரு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படுகிறதென்றால் - இந்தத் திட்டத்தைத் தொடங்கியதும் 74-ஆம் ஆண்டு இந்த அரசுதான்.

75-ஆம் ஆண்டு சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களுக்கு வழங்கப்பட்ட நகர ஈட்டுப்படியைப் போலவே திருச்சி, சேலம் ஆகிய நகரப்பகுதிகளுக்கும் நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. பெண் அலுவலர் மற்றும் மகளிர் திருமணத்திற்காக அரசு கடன் வழங்குகின்ற திட்டத்தை 69-ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தியது இந்த அரசுதான். இத்திட்டத்தின்கீழ் பெண் பணியாளர் அல்லது அரசு ஊழியரின் மகள் ஆகியோரின் திருமணங்களுக்கு வழங்கப்படும் முன்பணத்தொகை தொடக்கத்தில் 3,000 ரூபாய் என்பதை, 89-90ஆம் ஆண்டு நான் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது 5,000 ரூபாயாக உயர்த்தி - பிறகு நான்காவது முறையாக நான் இந்தப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் அதைப் பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தியிருப்பதும் இந்த அரசின் சார்பாகத் தான்.

அதைப்போலவே ஆண் அரசு அலுவலர் மற்றும் அவரது மகன் திருமணத்திற்கு வழங்கப்படும் முன் பணம் 89-90இல் 1,500 ரூபாயாக இருந்து பிறகு 3,000 ரூபாயாகவும், பின்னர் 96-97இல் 6,000 ரூபாயாகவும் வழங்கப்படுவது இந்த அரசில் தான்.

மிக முக்கியமாக அரசு அலுவலர்களுக்கு வாகனக் கடன் வழங்கும் திட்டத்தை 71-72ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினேன். இத்திட்டத்தின்படி 96-97ஆம் ஆண்டில் மிதிவண்டி வாங்க வழங்கப்பட்ட முன் பணத்தொகை 1000 ரூபாய் என்பது 1500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல் மோட்டார் சைக்கிள் வாங்க வழங்கப்பட்ட முன்பணம் 25,000 ரூபாய் என்பது 35,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல் கார் வாங்க அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் 1.4 இலட்சம் ரூபாய் என்பது 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் - அரசுப் பணியாளர்கள் ஓய்வூதியத்திலிருந்து மாதம் 20 ரூபாய் செலுத்தி, ஓராண்டு காலத்திற்குப் பின் அவர்கள் இறந்து போய்விட்டால் அவர்களின்

குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதி வழங்கும் திட்டமும் இந்த அரசுதான் செயல்படுத்தியது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதியம்

இங்கே உரையாற்றியவர்கள் எடுத்துக்காட்டினார்கள். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் 1989-ஆம் ஆண்டு முதன்முதலாகப் பல்வேறு மாநிலங்கள் எல்லாம் முன்வராத நேரத்தில் இந்தியாவிலே முதன்முதலாக முன் வந்து மத்திய அரசுக்குச் சமமான ஊதியத்தை மாநில அரசு அலுவலர்களுக்கு வழங்கியதும் இந்த அரசு தான் என்பதை முன்னால் பேசியவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அது மாத்திரமல்லாமல் மைய அரசினுடைய ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரை செய்த ஊதிய விகிதங்களும் தென் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தில் இந்த அரசு 1.1.96 முதல் முன்தேதியிட்டு ஆண்டு ஒன்றுக்கு 1,230 கோடி ரூபாய் செலவும், நிலுவைத் தொகை 2,400 கோடி ரூபாய் வழங்கவும் ஆணையிட்டதும் இந்த அரசுதான்.

இவைகள் மாத்திரம் கோரிக்கைகள் அல்ல. அன்றாடம் தேவைகள் வளருகின்றன. எனவே, கோரிக்கைகளும் எழுகின்றன. குறிப்பாக ஒரு கோரிக்கையைப் பற்றி இங்கே மாநாட்டின் தலைவரும், சங்கத்தின் தலைவருமான முருகேசன் குறிப்பிட்டுச் சொன்னார். துரைப்பாக்கம் பகுதியில் வீட்டுமனை வழங்குவதற்காக 23 எக்டேர் நிலம் ஒதுக்கீடு செய்து 28.2.97 அன்று இந்த அரசு ஆணையிட்டுள்ளது. ஆனாலும் நிலத்தை ஒப்படை செய்வதற்காக ஆணைகள் இன்னும் வெளியிடப்படாமல் நிலுவையிலே உள்ளது என்று அவரே குறிப்பிட்டார்.

குறிப்பிடும் போது அழுத்தந்திருத்தமாகச் சொல்லாமல் மேலோட்டமாக ஒன்றைச் சொன்னார். நாம் செய்கின்ற தவறுகளும் இருக்கிறது. நம்மிடத்திலும் குறைகள் இருக்கிறது என்று கூறினார். ஏனென்றால், தலைமைச் செயலகத்திலே உள்ள அலுவலர்களுக்குத் துரைப்பாக்கம் பகுதியிலே அரசு 23 எக்டேர் நிலம் ஒதுக்கிவிட்டது. ஆனால் அதற்கான ஆணை இன்னும் வெளியிடப்படாமல் இருப்பதற்குக் காரணம் நான் அல்ல. நான் ஆணையிட்டுவிட்டேன். கோரிக்கையை ஏற்றுக் கொண்டுவிட்டேன். ஆனால் ஓராண்டு காலமாக இன்னும் அந்தக் கோப்பு நகரவில்லை என்றால் அதற்குக் காரணம் நானல்ல. இதை அவர் சொன்ன காரணத்தினால் நான் சொல்ல நேரிட்டது. இல்லாவிட்டால் சொல்லாமல் மறைத்திருப்பேன். உங்களைக் காப்பாற்றியிருப்பேன்.

தலைமைச் செயலக அலுவலர்களின் ஒரு பிரச்சினைக்கே தலைமைச் செயலகத்திற்குள்ளேயே ஒரு கோப்பு நகர ஓராண்டு காலம் என்றால் குப்பைக்காட்டில் இருக்கின்ற குப்பன், சுப்பனுடைய கோப்பு நகர்வதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்ற எண்ணம் சாதாரண, ஏழையெளிய பாமரர்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன்.

இதைப்பற்றி நான் மேடையிலே இருந்தவாறே விசாரித்தேன். அப்போது எனக்குச் சொல்லப்பட்ட காரணம் - இதற்காக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டதும், ஒக்கியம் துரைப்பாக்கத்தைச் சேர்ந்த நேதாஜி குடிசை வாழ்வோர் சங்கத்தின் தலைவர் கணேசன் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்திலே ஒரு



# இந்த அரசிலேதான்...

## ★ நகர ஈட்டுப்படி ★ ரகசியக் குறிப்பேட்டு முறை ஒழிப்பு ★ வீட்டு வாடகைப்படி உயர்வு ★ பெண் அலுவலர், மகளிர் திருமணத்திற்காக அரசு கடன் ★ வாகனக் கடன் ★ அரசுப் பணியாளர் பாதுகாப்பு நிதித்திட்டம் ★ மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக மாநில அரசு ஊழியர்க்கு ஊதியம்...

வழக்குத் தொடுத்துள்ளார் என்றும், மேற்படி புல எண்களில் ஏறத்தாழ 12 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்படி சங்க உறுப்பினர்கள் வசித்துவருவதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றக் கூடாதென்றும் இடைக்காலத் தடை கோரும் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் நிலத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும், அவற்றை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் 13-4-98 தேதியிட்ட கடிதத்தில் அரசுக்குத் தெரிவித்துள்ளார். இது குறித்து சட்டத்துறை கலந்தாலோசிக்கப்பட்டது. நீதிமன்றத்தால் தடை ஆணை எதுவும் பிறப்பிக்கப்படாத நிலையில் நில மாற்றத்திற்குரிய முன்மொழிவு குறித்த செயற்குறிப்பினை ஆய்வு செய்யலாம் என்று சட்டத்துறை கருத்து தெரிவித்துள்ளது. இடைக்காலத் தடை ஆணை நீதிமன்றம் தரவில்லை. இருந்தாலுங்கூட, இதற்கு என்ன செய்யலாம் என்று யோசனையைச் சட்டத்துறையிடம் கேட்க, சட்டத்துறை ஆய்வு செய்யலாம் என்று கருத்து தெரிவித்து, இந்தக் கருத்து நில நிர்வாக ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டு, அதற்குரிய செயற்குறிப்பினை விரைவில் அனுப்பிவைக்கும்படி 19-5-98 அன்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

### போராட்ட உணர்வு தேவை - ஆனால் தொடர்ந்து போராடவேண்டுமென்பதல்ல

இப்படிச் சில கோப்புகள் சுற்றி வருகின்ற நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலேதான் நடக்க வேண்டிய காரியங்கள் நடக்காமல் போய் விடுகின்றன. நல்லவேளை தலைவலியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பதைப் போல, தலைமைச் செயலக அலுவலர்களுக்கே இந்தத் தலைவலியும் காய்ச்சலும் வந்த காரணத்தால், தமிழ்நாட்டு மக்கள் விரைவிலேயே இதுபோன்ற காரியத்தை உடனடியாகப் பெறக்கூடிய சூழ்நிலை இனியாவது பிறக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் - இங்கே ஒரு நண்பர் பேசும்போது குறிப்பிட்டார். சங்கரய்யா கூட அதுபற்றி என்னிடம் விளக்கம் கேட்டார். நல்லக்கண்ணு அவர்களும் அதுபற்றி என்னிடம் விளக்கம் கேட்டார். கழக ஆட்சி நடைபெறும்போது ஒருமுறை அங்கீகாரம் ரத்து செய்யப்படக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதையும், அதைக் கேள்விப்பட்டு உடனடியாக நான் சென்னைக்கு விரைந்து வந்து, ரத்து செய்யப்பட்ட அந்த ஆணையை ரத்து செய்து, பிரதிநிதிகளோடு கலந்து பேசி பிரச்சினையைத் தீர்த்து வைத்ததையும் இங்கே குறிப்பிட்டார்கள்.

நாம் போராட்ட உணர்வோடு இருக்கவேண்டும். ஆனால் தொடர்ந்து போராடிக்கொண்டே இருக்கவேண்டும் என்பதல்ல. போராட்ட உணர்வு ஒவ்வொரு மனிதனுக்கும் தேவை. அதிலும் குறிப்பாக அலுவலர்கள், தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள் இவர்களுக்குப் போராட்ட உணர்வு தேவை. ஆனால் ஒரு போராட்டம் என்பது பிரச்சினைக்காக இருக்க வேண்டுமே தவிர, இப்போதெல்லாம் பார்க்கிறோம் - ஏன் இந்தப் போராட்டம் என்றால், போராட்டத்திற்காகப் போராட்டம் என்று இப்படிப் பல போராட்டங்கள் நடைபெறுகின்றன. பிரச்சினைகளுக்காகத்தான் போராட்டம் நடைபெற வேண்டும். வெளிச்சத்திற்காகத்தான் விளக்கு வைக்கவேண்டுமே தவிர - விளக்கிற்காக யாரும் விளக்கு வைக்கமாட்டார்கள். விளக்கு வைப்பது வெளிச்சத்திற்காகத் தான். விளக்கிற்காக விளக்கு வைப்பது கூடாது. அதைப்போலப் போராட்டத்திற்காகப் போராட்டங்கள் கூடாது. பிரச்சினைகளுக்காகப் போராட்டங்கள் வந்தால் அந்தப் பிரச்சினைகளின் ஆழத்தை உணர்ந்து, அந்தப் பிரச்சினைகளின் தன்மைகளை உணர்ந்து அதை உடனடியாக நிறைவேற்றி வைக்கக்கூடிய ஒரு முதல் ஊழியனாகத்தான் உங்களுடைய முதலமைச்சர் இருக்கிறார் என்ற நம்பிக்கையை நீங்கள் பெறலாம்.

நீங்கள் இங்கே எடுத்துவைத்துள்ள பல்வேறு கோரிக்கைகள், இப்போதுதான் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேறியுள்ள சூழ்நிலையில், நல்ல முறையிலே ஆடை அணிந்து, அலங்காரங்கள் எல்லாம் முடிந்து, தலை வாரி, பூச்சூடி இவ்வளவும் முடிந்த பிறகு ஒரு திருஷ்டிப் பொட்டு கன்னத்திலே வைக்கவில்லையே என்று குறைபடுவதைப் போல, நீங்கள் அந்தத் திருஷ்டிப் பொட்டுக்காகச் சில கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறீர்கள். தேவைப்பட்டால், உரிய நேரத்தில் உங்களோடு கலந்துபேசி அந்தப் பொட்டும் வைக்கப்படும் என்ற உறுதியை உங்களுக்கு வழங்கி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து உங்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் நெஞ்சார தெரிவித்துக் கொள்கிறேன்.

*- தலைமைச் செயலக ஊழியர்கள் சங்கப் பொன்விழாவில் 30-6-98 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.*

# வாசகர் இதயம்

'தொழிலாளர்களின் தோழனாய் விளங்கும் அரசு இது' என்று கலைஞர் எழுதிய மே நாள் செய்தியை வெளியிட்டிருந்தீர்கள்; அது முற்றிலும் உண்மையே.

*-டி.எஸ்.சேகர்,*
*தென்கடப்பந்தாங்கல்*

திருவாரூர் மாவட்டச் சிறப்பிதழ் வெளியிட்டு முழுக்க முழுக்க மண்வளத்தைத் தெரிவித்தும் - படங்கள் மூலம் கவர்ச்சித்தும் எங்களையெல்லாம் அசத்திவிட்டீர்கள் போங்கள்!

*- கே.ஆர்.சேகரன்,*
*மங்களபுரம்*

'தமிழரசு' வரலாற்றுப் பொக்கிஷம் என்பது மாபெரும் உண்மை. உதாரணம் - ஆரூர் ஆழித்தேர் வரலாறு, தியாகராசர் திருக்கோயில் வரலாறு - வண்ணத்தேரின் வகையான புகைப்படம் ஆகியவை.

*- ப.அருணாசல சண்முகம்,*
*வீரளூர்*

கலைஞரின் நண்பர்களெல்லாம் அவரைப் பற்றி எழுதியிருந்த கட்டுரைகள், அற்புதமாக இருந்தன; அந்தக் காலத்தில் அவர் நல்லபல நண்பர்களைத்தான் பெற்றிருந்துள்ளார். மரங்கள் பற்றிய கலைஞர் கவிதைகளும் நல்ல தொகுப்பு.

*- ப.மு.பாண்டியன்,*
*கரப்பாடி*

கலைஞரின் பழைய நண்பர்களின் பழைய நினைவுகள் பாராட்டத்தக்க பல நிஜங்களைத் தெரிவித்தன. இராம.அரங்கண்ணல், திருவாரூர் தங்கராசு ஆகியோர் கட்டுரை குறிப்பிடும்படி இருந்தது.

*- பி.ஏ.வதூத்,*
*மேட்டுப்பாளையம்*

'தமிழரசில்' வெளியிடும் எல்லா மாவட்டங்களைப் பற்றிய மலர்கள் தொடர்ந்து பூத்து மணம் சிந்தட்டும்; எங்கள் மனம் நிறையட்டும்!

*- தி.முருகேசன்,*
*ஆனைக்குப்பம்*

திருவாரூர் மாவட்டச் சிறப்பிதழ், அந்த மாவட்டத்தையே நேரில் போய் சுற்றி வந்தது போன்றதோர் பிரமிப்பை ஏற்படுத்தியது.

*- க.குழந்தைவேல்,*
*மேட்டுத்திருக்காம்புலியூர்*

சிலம்பொலியார் தீட்டியிருந்த அகரவரிசைக் கவிதை சிறப்பாக இருந்தது. அதிலும் 'ஊழ்வினைக் காப்பியம் ஒளிபெற வடித்தேன்' என்றிருந்த வரிகள், கலைஞரின் சிறந்த தமிழ்த் தொண்டினை விளக்குவதாக இருந்தது.

*- மு.சோமசுந்தரம்,*
*கீரப்பாளையம்*

முற்போக்குக் கதை - கவிதைகளையெல்லாம் 'தமிழரசில்' தொடர்ந்து வெளியிட்டால் எங்களுக்கெல்லாம் இன்பமாக இருக்கும்.

*- க.கலைமதி,*
*செங்கல்பட்டு*

சங்கீத மும்மூர்த்திகள் பற்றிய செய்திகளும், கடைசிப்பக்கம் இருந்த தேரும் கோயிலும் எங்களை ஆனந்தப்படச் செய்துவிட்டன.

- சியாமளா,
சென்னை-24.



# காமராசர் கற்றவை !

## பேரறிஞர் அண்ணா

காமராஜர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்றார்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றினார்; தமிழர்கள் பெருமைப்படத்தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

காமராஜர் கல்லூரியில் படிக்கவில்லையே தவிர, வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார்.

மக்களின் புன்னகையை - பெருமூச்சை - கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்.

முப்பது வருடம், நாற்பது வருடம் என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெற முடியும்.

வைரம் என்பது நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித்துண்டுகள்.

அதுபோல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைரமணிகளில் ஒருவர்தான் காமராஜர் !


# சேமிப்போம் !

**முனைவர். கருவூர் கன்னல்**

மழைசெய்யும் சேமிப்பே நிலத்தின் ஊற்று!
மாக்கடலின் சேமிப்பே மேகக் கூட்டம்
இழையோடும் புன்னகையோ சிரிப்பின் மிச்சம்!
இமைக்கதவின் சேமிப்பே விழிவெளிச்சம்!
அழைக்கின்ற பூந்தென்றல் புயலின் மிச்சம்!
ஆண்மையதன் சேமிப்பே மழலைத் தென்றல்!
பிழைப்புக்குச் சேமிப்பே மனைவி யாவாள்!
பெருங்குன்றும் செலவுசெய்தால் துகளாய் மாறும்!

சிந்தனையோ தாய்மொழியின் வங்கி வைப்பு!
செந்தமிழின் சேமிப்போ நல்ல நூல்கள்!
இந்த உண்மை தெரியாதார் இன்பப் பெண்ணை
ஏக்கமுடன் பார்த்தேதான் கடந்து போவார்!
செந்தமிழின் அறநூல்கள் வருமுன் காக்கும்
செயலாற்ற ஆணையிடும்; மறக்க லாமா?
எந்தவளம் இருந்தாலும் இருப்பு வைக்க
இயலார்க்கு வசந்தத்தின் வாயில் மூடும்!

சேமிக்க மறந்தவர்கள் எந்த நாட்டில்
சிறப்புற்று வாழ்ந்தார்கள்? சிதைந்து போனார்!
சேமித்தல் செய்யாதான் வீழ்ந்து போகும்
செயலுக்குக் கோவலனோர் எடுத்துக் காட்டு!
சேமித்தல் துன்பத்தை விரட்டி யோட்டும்!
செங்கரும்பாய் வாழ்க்கையினை இனிக்க வைக்கும்!
சேமித்தல் கண்ணீரைக் கடத்தும் கப்பல்!
சிக்கனமாய்ச் சேமியுங்கள்! நீர் உயர்வீர்!



# காவிரி பிரச்சினை: தமிழகத்தின் நியாயத்தை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் திட்டத்தை அரசிதழில் வெளியிட வலியுறுத்துவீர்!

தமிழகம் - புதுவை அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு **கலைஞர்** கடிதம்

**கா**விரி பிரச்சினையில் தமிழகத்தின் பக்கம் உள்ள நியாயத்தை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்து, நடுவர் மன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான மத்திய அரசின் திட்டத்தை அரசிதழில் வெளியிட வலியுறுத்துவீர் என்று தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 12-7-98 அன்று எழுதியுள்ள விளக்கக் கடிதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்.

காவிரிப் பிரச்சினை தொடர்பாகத் தமிழகம் மற்றும் புதுவையைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் **கலைஞர்** அவர்கள் எழுதியுள்ள கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:

காவிரி நதிநீர் தாவா குறித்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களுக்கிடையே 22 ஆண்டுகளாகச் சுமார் 26 முறை மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் பலனளிக்காத நிலையில் தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் ஒரு நடுவர்மன்றத்தினை அமைக்கக் கோரி, 20 வருடங்களுக்கு பிறகு 1990-ம் ஆண்டு, சூன் திங்களில் மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம், 1956ன் கீழ் காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றத்தினை ஏற்படுத்தியது தங்களுக்குத் தெரிந்ததே. உச்சநீதிமன்றம், சட்டப்படி நடுவர் மன்றத்தினை ஏற்படுத்த ஆணை பிறப்பித்த பிறகே காவிரி நடுவர் மன்றத்தினை மத்திய அரசு ஏற்படுத்தியது.



### இடைக்கால ஆணை

நீண்ட நாள், சட்ட விவாதங்களுக்குப் பிறகும், உச்சநீதி மன்றத்தின் ஆணையின்படியும், 25-6-91 அன்று காவிரி நடுவர் மன்றம் அதன் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. ஆணை வெளியிட்டு ஆறு மாதங்களுக்குப் பின்னர், அவ்வாணையை மத்திய அரசு, 10-12-1991ஆம் நாளன்று அரசிதழில் வெளியிட்டது.

மேற்கூறிய சட்டம் பிரிவு 6-ன் கீழ், இவ்வாணையானது வெளியிடப்பட்டால், இது இறுதியானது மற்றும் தாவாவில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அதைச் செயல்படுத்த சட்டப்படி கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அதனைச் செயலாக்கம் செய்யவும் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயலாக்க கர்நாடகா முன்வரவில்லை.

மாறாக, 'கர்நாடாக காவிரிப்படுகை பாசனப் பாதுகாப்பு அவசரச் சட்டம் - 1991' என்று ஓர் அவசரச் சட்டத்தை இயற்றி (பிறகு அது சட்டமாக இயற்றப்பட்டது) இடைக்கால ஆணைக்கு விளக்கம் கோரி நடுவர் மன்றத்தில் மனுச் செய்தும், நடுவர் மன்ற இடைக்கால ஆணை செல்லாது என்று ஆணை பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்தில் கர்நாடகா அரசு வழக்குத் தொடுத்தது.

இறுதியாக, இந்தியக் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் கருத்தினை அளிக்கும்படி கோரியதன்பேரில், கர்நாடகாவின் அவசரச் சட்டம் மற்றும் அதன் சட்டம், அவ்வரசின் சட்டம் இயற்றும் வரம்பிற்குள் இல்லை என்றும், அவைகள் அரசியல் சாசனச் சட்டத்தின்படி செல்லத்தக்கது அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

### உச்ச நீதிமன்றம் கருத்து

நடுவர்மன்றம் இடைக்கால ஆணை வழங்க அதிகாரம் உண்டு என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துக்கூறியது. கர்நாடக அரசு நடுவர்மன்றத்தின் இடைக்கால ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. பின்னர் 1995-ஆம் ஆண்டு கர்நாடகா அரசு அவ்வழக்கினைத் தாமே முன்வந்து விலக்கிக்கொள்ள அனுமதி கோரியதன் அடிப்படையில், வழக்கை விலக்கிக் கொண்டதாகக் கருதி உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நடுவர்மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் ஆணைகளுக்குப் பிறகும், நடுவர்மன்ற இடைக்கால ஆணையினைச் செயல்படுத்தாமல் இருப்பதில் கர்நாடகா உறுதியாக இருந்து வருகிறது. மேற்கூறிய சூழ்நிலையில், மேற்கூறிய சட்டம், பிரிவு 6ஏ-ன் கீழ், இடைக்கால ஆணையினைச் செயல்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி அரசிதழில் வெளியிடுமாறு மத்திய அரசை இவ்வரசு கோரி வந்தது. மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் சட்டம் 1956, பிரிவு 6ஏ-ன் படி நடுவர் மன்றத்தின் ஆணையினைச் செயலாக்குவதற்காக, ஒரு திட்டத்தை மத்திய அரசு தீட்ட, சட்டப்படி கடமைப்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

பிரிவு6 - நடுவர் மன்றத்தின் ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் அறிவிக்கையாக வெளியிடப்பட வேண்டும். அப்படி வெளியிடப்பட்டால் அந்த ஆணையானது, இறுதியானது மற்றும் தாவாவில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அதைச் செயல்படுத்த சட்டப்படி கட்டுப்படுத்துவதோடுமல்லாமல், அதனைச் செயலாக்கம் செய்யவும் வேண்டும்.

### சட்டப்படி தீர்ப்பைச் செயல்படுத்த மத்திய அரசு திட்டம் தீட்டவேண்டும்

பிரிவு 6ஏ(1)-பிரிவு 6ன் கீழ் உள்ள சரத்துகளுக்குப் பாதகம் இல்லாமல், நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதை அறிவிக்கை மூலம் அரசிதழில் வெளியிடலாம்.

(2) உட்பிரிவு (1)ன் கீழ் தீட்டிய திட்டத்தில் பின்வரும் வழிவகைகள் சேர்க்கலாம்.

(a) நடுவர் மன்றத்தின் ஆணை மற்றும் அறிவிக்கைகளைச் செயலாக்கும் பொருட்டு ஓர் ஆணையம் (ஆணையம் அல்லது குழு அல்லது ஏதாவது ஒரு அமைப்பு) நிறுவப்பட வேண்டும்.

சட்டப்படி ஆற்றவேண்டிய கடமையை நிறைவேற்ற மத்திய அரசு முன்வராத காரணத்தினால், இடைக்கால ஆணையினைச் செயல்படுத்த கர்நாடகாவிற்கு ஆணையிடவும், ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கு மத்திய அரசுக்கு ஆணையிடவும், 1992-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்தது. பல விவாதங்களுக்குப் பிறகு கணிசமான சட்ட நுணுக்கம் மற்றும் அரசியல் அமைப்பிற்கு விளக்கங்கள் தேவை ஏற்படுவதால் இந்த வழக்கினை உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவின் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள 1997, மார்ச் மாதம் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு இவ்வழக்கின் விசாரணையை, 1997, ஏப்ரல் மாதம் துவக்கியது. உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை மற்றும் விவாதத்தின் முடிவில், மத்திய அரசு, சட்டப்படி ஒரு திட்டத்தைத் தீட்ட முன்வருகிறது என்று 9-4-97 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் எழுத்து மூலமாகக் கூறினார்.

உச்ச நீதிமன்றத்தில் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் பொருட்டு, மத்திய அரசு ஒரு வரைத் திட்டத்தைத் தயாரித்து, 30-5-1997-ஆம் நாளன்று சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு அந்த வரைவுத் திட்டத்தை, சட்டத்திற்குட்பட்டு ஒரு சில கருத்துக்களுடன் பொதுவாக ஏற்றுக்கொள்வதாக மத்திய அரசுக்கு 23-6-1997 அன்று தெரிவித்தது.

பின்னர் 20-8-1997 அன்று உச்ச நீதிமன்றம் கொடுத்த அறிவுரையின்படி, திட்டத்தை மத்திய அரசு இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். இவ்வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 21-7-1998 அன்று மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நடுவர்மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டும் என்று, 9-7-1997, 23-7-1997, 29-9-1997, 1-11-1997, 6-11-1997 ஆகிய நாட்களில் முன்னாள் பிரதமருக்கு (திரு.ஐ.கே.குஜ்ரால்) நான் எழுதிய நேர்முகக் கடிதங்களிலும், மேலும் 27-7-1997 மற்றும் 29-9-1997 அன்று நேரில் சந்தித்தும், இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படி கேட்டுக்கொண்டேன்.

30-9-1997 அன்று முன்னாள் மத்திய நீர்ப்பாசனத்துறை அமைச்சரின் தலைமையில், காவிரிப் படுகை மாநிலங்களின் பாசனத்துறை அமைச்சர்களின் கூட்டத்தில் கர்நாடகா, இத்திட்டமே தேவையில்லை என்றும் அப்படி ஒரு திட்டம் இருந்தால் காவிரி நதிநீர் ஆணையத்திற்குப் பதிலாகச் சட்டப்படி அதிகாரம் பெறாத ஒரு ஆலோசனைக் குழு அல்லது ஒரு ஒருங்கிணைப்புக் குழு ஏற்படுத்தினால் போதும் என்று தெரிவித்தது. ஆனால் ஏற்கெனவே மத்திய அரசு தீட்டிய திட்டம் சரியான திட்டம் என்பதாலும் கர்நாடகா கூறிய ஒருங்கிணைப்புக் குழுவிற்குச் சட்டரீதியான அதிகாரம் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்பதாலும், நடுவர்மன்றத்தின் ஆணையைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு இப்பொழுது

> *கொள்கை அளவில் ஏற்றுக்கொண்ட எதனையும் நடைமுறைப்படுத்தும் பொழுது ஏற்படும் மாறுதல்களை நாம் மறந்துவிடக் கூடாது; மற்றவர்கள் கருத்தை மதிக்கத் தவறவும் கூடாது.*
>
> **- கலைஞர்**

தீட்டிய திட்டம்தான் சிறந்த வழி என்றும் அத்திட்டத்தை விரைவில் இறுதி செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

7-11-97 அன்று முன்னாள் பிரதமர் மற்றும் முன்னாள் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து, மத்திய அரசின் வரைவுத் திட்டத்தை இறுதி செய்து மத்திய அரசிதழில் வெளியிடுமாறு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார். இதுகுறித்து மத்திய அரசின் பதில் மனநிறைவு அளிக்காத நிலையில், 10-11-1997 அன்று மத்திய அரசு வரைவுத் திட்டத்தை இறுதி செய்து மேற்படி திட்டத்தை அரசிதழில் வெளியிட அக்கறை செலுத்தாத நிலையிலுள்ளதால் மத்திய அரசை மேற்படி திட்டத்தை உடன் அமல் செய்யக்கோரி ஆணையிட உச்சநீதிமன்றத்தில் தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் முறையீட்டு மனு ஒன்றைத் (affidavit) தாக்கல் செய்தார்.

தமிழக அரசு இத்திட்டத்தை அரசிதழில் வெளியிட வேண்டி தொடர்ந்து வலியுறுத்தி வந்தபோதிலும் இது குறித்து மத்திய அரசு ஒரு முடிவு எடுக்காத நிலையில் 28-3-1998, 6-4-1998 மற்றும் 31-5-1998 ஆகிய நாட்களில் தற்போதைய பிரதமருக்கு எழுதிய நேர்முகக் கடிதங்களிலும் மற்றும் 7-4-1998 அன்று நேரில் சந்தித்தும், இந்த வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதிசெய்து அரசிதழில் வெளியிடுவதன் அவசியத்தைக் குறித்து வலியுறுத்தினேன்.

9-4-1997 அன்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு கொடுத்த உறுதிமொழிக்கேற்ப 1956-ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டம், பிரிவு 6ஏ-ன் கீழ் மத்திய அரசு தீட்டிய திட்டத்தை அரசிதழில் வெளியிட வேண்டியுள்ளது. ஆனால், மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் உறுதிகூறி 15 மாதங்கள் ஆகியும் இத்திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் மத்திய அரசால் வெளியிடப்படவில்லை. இதற்குப் பிறகு உச்சநீதிமன்றத்தின் முன் தமிழ்நாடு தொடர்ந்த வழக்கு 8 முறை விசாரணைக்கு வந்தபோதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி அந்த வழக்கை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்க மத்திய அரசு கோரி வந்தது. இதன் அடிப்படையில், இவ்வழக்கு 21-7-1998 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் பொருட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

### திட்டத்தை அரசிதழில் வெளியிடுக

இத்திட்டத்தை அறிவிக்கை மூலம் அரசிதழில் வெளியிட்டவுடன் மேற்படி சட்டம் பிரிவு 6ஏ(7)-ன் கீழ் பாராளுமன்றத்தின் முன் வைக்கப்படவேண்டும்.

காவிரி நதிநீர் தாவா குறித்து தமிழ்நாட்டின் நியாயத்தினை நிலைநாட்டுவதற்காகப் பாராளுமன்றத்திலும் மற்றும் தகுந்த தருணத்திலும் செயல்படுவதற்கு ஏதுவாக, காவிரி நதிநீர் தாவா பற்றித் தயாரித்த ஒரு குறிப்பினைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் இக்கடிதம் மூலம் தங்களுக்கு அனுப்புகிறேன். பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை குறித்து தமிழ்நாட்டின் பக்கம் உள்ள நியாயத்தை தாங்கள் எடுத்துரைத்து இத்திட்டத்தை விரைவில் இறுதிசெய்து அரசிதழில் மத்திய அரசு வெளியிட, தாங்கள் ஆக்கபூர்வமாகச் செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

- இவ்வாறு, மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார். ★

# கலை மாமணி விருது வழங்கும் விழா : வள்ளுவர் கோட்டம் 10-7-98

மேதகு தமிழக ஆளுநர் நீதிபதி செல்வி **மீ.பாத்திமா பீவி** அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களும் பங்கேற்க - தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா 10.7.98 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மேதகு ஆளுநர் அவர்கள் விழாத் தலைமையேற்றுக் 'கலைமாமணி' விருது வழங்கிட - மாண்புமிகு கலைஞர் அவர்கள், விருது பெற்றோர்க்குப் பொற்பதக்கமும், 'கலைமாமணி' விருது பெற்று அகவை முதிர்ந்த நலிந்த கலைஞர்களுக்குப் 'பொற்கிழியும்' சிறந்த நாடகக் குழுவிற்குச் சுழற்கேடயமும், சிறந்த கலை நிறுவனத்திற்குக் கேடயமும் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு.தமிழ்க்குடிமகன் அவர்கள், அனைவருக்கும் பொன்னாடை அணிவித்தார். துறைச் செயலாளர் திரு. த.ரா. சீனிவாசன் வாழ்த்திப் பேசினார்.

விழாத் தொடக்கத்தில் இயல்-இசை-நாடக மன்றத் தலைவர் திரு.இராம. நாராயணன் வரவேற்புரையாற்றினார்; விழா முடிவில் மன்றத் துணைச் செயலாளர் திரு. கி.சொர்ணம் நன்றி கூறினார். மன்ற உறுப்பினர் செயலாளர், திரு.சி.சந்திரசேகர் அறிக்கை படித்தார்.

இவ்விழாவில் 'கலைமாமணி' விருது பெற்ற 75 கலைஞர்கள் விவரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன் | - | இயற்றமிழ்க் கலைஞர் |
| திரு. மீ.ப. சோமசுந்தரம் | - | இயற்றமிழ்க் கலைஞர் |
| கவிஞர் முடியரசன் | - | இயற்றமிழ்க் கவிஞர் |
| கவிஞர் கா.வேழவேந்தன் | - | இயற்றமிழ்க் கவிஞர் |
| முனைவர் சாரதா நம்பிஆரூரன் | - | இலக்கியப் பேச்சாளர் |
| திரு.வலம்புரி ஜான் | - | இலக்கியப் பேச்சாளர் |
| குளிக்கரை திரு. பி.விசுவலிங்கம் | - | குரலிசைக் கலைஞர் |
| திரு.வி.எஸ்.கே. சக்கரபாணி | - | வயலின் கலைஞர் |
| திரு.ஏ.பிரேம்குமார் | - | மிருதங்கக் கலைஞர் |
| திருமதி ரேவதி கிருஷ்ணா | - | வீணைக் கலைஞர் |
| ஸ்ரீரங்கம் திரு.கண்ணன் | - | முகர்சிங் கலைஞர் |
| திருப்பாம்புரம் சகோதரர்கள் | | |
| திரு.டி.கே.எஸ்.சுவாமிநாதன் | - | நாதசுரக் கலைஞர் |
| திரு.டி.கே.எஸ். மீனாட்சிசுந்தரம் | - | நாதசுரக் கலைஞர் |
| திருவிடைமருதூர் திரு.பி.எஸ்.வி.ராஜா | - | நாதசுர ஆசிரியர் |
| திருக்கண்ணபுரம் திரு.எஸ். ஜெயசந்திரன் | - | தவில் கலைஞர் |
| இடும்பாவனம் திரு.கே.எஸ். கண்ணன் | - | தவில் கலைஞர் |
| திரு.டி.கே.எஸ். கலைவாணன் | - | தமிழிசைக் கலைஞர் |
| திரு.டி.எல். மகராஜன் | - | தமிழிசைக் கலைஞர் |
| திருமதி. சரஸ்வதி சீனிவாசன் | - | இறையருட் பாடற் கலைஞர் |
| திரு. அருளரசு மாசிலாமணி | - | சமயச் சொற்பொழிவுக் கலைஞர் |
| திரு. எஸ்.ஆர். ஜானகிராமன் | - | இசை ஆராய்ச்சிக் கலைஞர் |
| திரு. எம்.வி.எம். செல்லமுத்துப் பிள்ளை | - | மாண்டலின் கலைஞர் |
| திருமதி (சாமி) கே.சுப்புலட்சுமி | - | பரதநாட்டிய ஆசிரியர் |
| திருமதி அனிதா ரத்தினம் | - | பரதநாட்டிய ஆய்வுக் கலைஞர் |
| திருமதி பிரியதர்ஷினி கோவிந்த் | - | பரதநாட்டியக் கலைஞர் |
| செல்வி பிரியா சுந்தரேசன் | - | பரதநாட்டியக் கலைஞர் |


20 தமிழரசு

| | |
|---|---|
| திருமதி பத்மா ராஜகோபாலன் | பரதநாட்டிய இசைக் கலைஞர் |
| திருமதி ஸ்ரீ கலா பரத் | நாட்டிய நாடகக் கலைஞர் |
| திருமதி உமா முரளிகிருஷ்ணா | குச்சுப்புடி கலைஞர் |
| திரு. எம்.எஸ். இராஜாராம் | நாடக ஆசிரியர் |
| காஞ்சி திருரங்கமணி | நாடகத் தயாரிப்பாளர் |
| திரு. போலீஸ் வெ.கண்ணன் | நாடக இயக்குநர் |
| திரு. கு. சண்முகசுந்தரம் | நாடக நடிகர் |
| திரு. டி.என். கிருஷ்ணன் | நாடக நடிகர் |
| திருமதி கௌசல்யா செந்தாமரை | நாடக நடிகை |
| திரு. எஸ்.ஆர். கோபால் | நாடக நகைச்சுவை நடிகர் |
| திரு.வோ.பா. பலராமன் | தொழில் முறையல்லாத நாடக ஆசிரியர் |
| திரு.கே.ஏ.வகாப்கான், காஞ்சிபுரம் | நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| திரு. விகடம் கிருஷ்ணமூர்த்தி | விக..க் கலைஞர் |
| திரு. இராம. வீரப்பன் | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. ஏ.வி.எம். சரவணன் | திரைப்படத் தயாரிப்பாளர் |
| திரு. கேயார்ஜி | திரைபடத் தயாரிப்பாளர் |
| திரு. அகத்தியன் | திரைப்பட இயக்குநர் |
| கிக. பட்டாபிராமன் (பட்டு) | திரைப்பட இயக்குநர் |

| | |
|---|---|
| திரு. இரத்னகுமார் | திரைப்பட வசனகர்த்தா |
| திரு. பழநிபாரதி | திரைப்படப் பாடலாசிரியர் |
| திரு. சித்தார்த்தா | திரைப்பட இசையமைப்பாளர் |
| திரு. ஜெயச்சந்திரன் | திரைப்படப் பின்னணிப் பாடகர் |
| திருமதி ஜமுனாராணி | திரைப்படப் பின்னணிப் பாடகி |
| திரு. பி.சி.ஸ்ரீராம் | திரைப்பட ஒளிப்பதிவாளர் |
| திரு. தோட்டா தரணி | திரைப்பட அரங்க அமைப்பாளர் |
| திரு. யோகா | திரைப்படப் புகைப்படக் கலைஞர் |
| திரு. எஸ்.எம்.உமர் | திரைப்பட வளர்ச்சிப் பணிக் கலைஞர் |
| சினிமா எக்ஸ்பிரஸ் திரு. இராமமூர்த்தி | திரைப்படப் பத்திரிகை ஆசிரியர் |
| டாக்டர். மேக்னட் ஏ.இராஜாராம் | திரைப்பட ஆய்வாளர் |
| சிவகாசி திருமதி காந்திமதி | வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| திருமதி எஸ்.ஆர். மாரிக்கண்ணு | கரகக் கலைஞர் |
| திரு. எம்.குமாரராமன் | தேவராட்டக் கலைஞர் |
| திரு. எம். பிச்சையப்பா | காவடிக் கலைஞர் |
| திரு. ஏ.எஸ். பாலசுப்ரமணியம் | பொம்மலாட்டக் கலை... |
| திரு. டி.பி.செல்லப்பா | இசை நாடக நடிகர் |
| புதுக்கோட்டை திருமதி கே.எஸ்.கலா | இசை நாடக நடிகை |



| | |
|---|---|
| திரு. நெப்போலியன் | திரைப்பட நடிகர் |
| திரு. விஜய் | திரைப்பட நடிகர் |
| திரு. பிரசாந்த் | திரைப்பட நடிகர் |
| செல்வி மீனா | திரைப்பட நடிகை |
| செல்வி ரோஜா | திரைப்பட நடிகை |
| திரு. குமரிமுத்து | திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| திரு. தியாகு | திரைப்பட நகைச்சுவை நடிகர் |
| திரு. மணிவண்ணன் | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. நாசர் | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. ரகுவரன் | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| திரு. எம்.டி.சுந்தர் | திரைப்படக் கதாசிரியர் |
| திரு. விசு | திரைப்பட வசனகர்த்தா |

| | |
|---|---|
| திரு.ஆர்யக்ஞராமன் | பண்பாட்டுக் கலை பரப்புநர் |

## பொற்கிழி பெற்ற கலைஞர்கள்

| | |
|---|---|
| கலைமாமணி திருமதி. பி.எஸ்.ரஞ்சனி | இசை நாடக நடிகை |
| கலைமாமணி திரு.பி.எஸ் நாகராஜ பாகவதர் | இசை நாடக நடிகர் |
| கலைமாமணி திருக்குவளை திரு.டி.எம்.நவநீத தியாகராஜன் | நாதசுரக் கலைஞர் |
| கலைமாமணி திரு.எம்.எஸ். வெங்கடாசலம் | இசை நாடக ஆர்மோனியக் கலைஞர் |
| கலைமாமணி திருக்கடையூர் திரு.டி.கே. தட்சிணாமூர்த்தி | கஞ்சிராக் கலைஞர் |
| சுழற்கேடயம் பெறும் சிறந்த நாடகக் குழு | திரு.வி.கோபாலகிருஷ்ணன் அவர்களின் கோபி தியேட்டர்ஸ் |
| சிறந்த கலை நிறுவனம் | கார்த்திக் பைன் ஆர்... ...ஸ்னை. |

# தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றக் கூட்டம்







தமிழ்நாடு பழங்குடியினர் ஆன்றோர் மன்றக்கூட்டம், பழங்குடியினர் இன்றளவில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விவாதித்து, அவற்றிற்கு முடிவு காண - சேலத்தில் 29-6-98 அன்று மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர் திரு.சமயநல்லூர் எஸ்.செல்வராஜ் அவர்களின் தலைமையில் கூடியது.

கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் கலந்துகொண்டு பழங்குடியினர் பிரச்சினைகளைக் குறித்து விரிவாக உரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் 17 அலுவல் சாரா உறுப்பினர்கள் (3 சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து) அரசு செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மேலாண்மை இயக்குநர் 'தாட்கோ' தனி அலுவலர் (பழங்குடியினர் நலம்) பழங்குடியினர் நல இயக்குநர், உதகை - பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் உட்பட பல அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

**நிலம் விற்பனை**

நீண்ட விவாதங்களுக்குப்பின் பழங்குடியினர் நிலத்தை மற்ற இனத்தவர்களுக்கு விற்பதைத் தடை செய்யவும், ஏற்கெனவே உடைமை மாற்றம் செய்யப்பட்ட நிலங்களைத் திரும்பப் பெற்று, பழங்குடியினருக்கு ஒப்படை செய்யவும், பழங்குடியினருக்காகத் தனியாகக் கடன் நிவாரணச் சட்டம் இயற்றவும், இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பழங்குடியினர் சான்றிதழ் பெறுவதில் ஏற்பட்ட சிக்கலைத் தவிர்க்க, பழங்குடியினர் அதிகமாக வாழும் பகுதிகளுக்கு அலுவலர்கள் நேரில் சென்று சான்றிதழ் வழங்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

**தனியே பள்ளிகள்**

பழங்குடியினர் குழந்தைகள் அனைவருக்கும் 12ஆம் வகுப்பு வரை கல்வி பெற அனைத்துப் பழங்குடியினக் குடியிருப்புகளிலும் பள்ளிகள் திறக்கப்பட வேண்டும் என்றும் நல்ல தரமான மேற்கல்வி அளிக்க மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பெரும் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், சிறு வன விளை பொருட்களைச் சேகரிக்க முழு உரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், இந்த மகசூலைச் சேகரிக்கத் தனியாருக்கு உரிமை அளிக்கக் கூடாது என்றும், இந்த மன்றம் வலியுறுத்தியது.

இதில் உள்ள குறைபாடுகள் களையப்பட்டு, ஊட்டுதவி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கவேண்டும் என்று வனத்துறைக்குத் தக்க அறிவுரைகள் வழங்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

பழங்குடியினர் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்த ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம் முகமை, தக்க தகுதி வாய்ந்த, போதிய அளவில் அலுவலர்களுடன் ஏற்படுத்தலாம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது.

பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு நல்ல தரமான கல்வி அளிக்க 6 முதல் 12-க்குரிய இல்லங்களுடன் இணைந்த பொதுப்பள்ளிகளுக்கு நிகரான பள்ளிகள் ஆங்காங்கே ஏற்படுத்தி பழங்குடியின மாணவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற வகை செய்யவேண்டும் என்றும் இம்மன்றம் தீர்மானித்தது.

# காமராசர் பிறந்த நாள்

## முதலமைச்சர் கலைஞர்



இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் - கொள்கைக்
குன்றுக்கு எங்கணும் திருவிழா!

விருதையில் பிறந்து வீரனாய் வளர்ந்தாய்
சரிதையில் நிறைத்த தலைவனாய் நின்றாய்!

சிறையின் கொடுமையும் சித்ர வதையும்
சிரித்த முகத்துடன் ஏற்ற தியாகி.

ஆயிரம் உண்டு கருத்து மோதல் - எனினும்
அழியாத் தொண்டு மறந்திடப் போமோ?

தமிழ்நிலம் மணக்க வந்த திருவே!
அமிழ்தெனும் பொதுப்பணியின் உருவே!

கருத்திருக்கும் உன்றன் உடல் என்றாலும் - நெஞ்சில்
கருத்திருக்கும் காலமெல்லாம் உழைப்பதற்கு!

கதராடை மேனிதனை அலங்கரிக்கும் -
கதறுகின்ற ஏழைகளைக் கரம் அணைக்கும்!

கட்சிகளை நோக்கி, நீ கடுமொழிகள் தொடுத்திடுவாய் - பிற
கட்சித் தலைவர்க்கோர் இன்னலென்றால் துடித்திடுவாய்!
பெரியாரின் கல்லறையில் உன் கண்ணீர்!
பேரறிஞர், மூதறிஞர் மறைந்தபோதும் உன் கண்ணீர்!
பெற்ற தாய்தனை நான் இழந்தபோதும்
உற்றார் உறவுபோல் நீ வந்து உகுத்தாய் கண்ணீர்!
பெருமகனே! உனக்காக எம் கண்ணீர்
பேராற்றுப் பெருக்கெனவே பாய்ந்த தன்றோ?
தனிமனிதன் வாழ்வல்ல உன் வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்!

குமரி முதல் இமயம்வரை உன்கொடி பறக்கக்
கோலமிகு தமிழகத்தின் புகழ் பொறித்தாய்.
"குணாளா! குலக்கொழுந்தே!" என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்.
பச்சைத் தமிழன் எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்.
கருப்புக் காந்தியென உன்னை - இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம் வாஞ்சையும் காட்டினாய்! - உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவர்க்கும் நிலை நாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள் -
என்றைக்கும் அது சிறந்த நாள்!

- 15-7-76 'முரசொலி'யில் வெளிவந்தது.

## குண்டு வெடிப்பில் இறந்தவர் தங்கைக்கு உடனடியாக வேலை

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஈரோடு அருகில் தொட்டிப் பாளையத்தில் நடந்த ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர் திரு.கல்யாணசுந்தரம் என்பவர் இறந்துபோனார். இறந்துபோன கல்யாணசுந்தரத்தின் தங்கை செல்வி. மஞ்சுளா தனது கல்லூரி படிப்புச் செலவை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், படிப்பு முடிந்தபின் தனக்கு அரசுத்துறையில் வேலை வாய்ப்பு வழங்கவேண்டும் என்றும் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கையை ஏற்று முதல்வர் கலைஞர் அவர்கள், செல்வி மஞ்சுளாவுக்குக் கல்லூரிப் படிப்புக்குரிய செலவை அரசு ஏற்கும் என்றும், கல்லூரிப் படிப்பு முடிவடைந்த உடன், அவருடைய கல்வித் தகுதிக்கேற்ப திண்டுக்கல் மாவட்டத்தில் காலியாக உள்ள இடத்தில் பணி வழங்கப்படும் என்றும் 12.2.1998 அன்று ஆணையிட்டார்.

தற்போது, பழநியிலுள்ள அருள்மிகு பழநியாண்டவர் கலைக் கல்லூரியில் முதலாண்டு பட்டப்படிப்புபடித்துவரும்செல்வி. மஞ்சுளா, தனது அண்ணன் மரணத்தினால் பாதிக்கப்பட்ட மனநிலையுடன் உள்ள பெற்றோரைப் பாதுகாக்க வேண்டி யிருப்பதாலும், தான் மேலும் 2 ஆண்டுகள் படிக்க முடியாத சூழ்நிலையில் இருப்ப தாலும், தனது கல்வித் தகுதிக்கேற்ப தற்போது அரசுத்துறையில் தனக்கு வேலைவாய்ப்பு வழங்கக் கோரி மாவட்ட ஆட்சியர் மூலம் அனுப்பிய விண்ணப்பத்தினைப் பரிவுடன் பரிசீலித்து, செல்வி மஞ்சுளாவுக்குத் திண்டுக்கல் மாவட்டத்தில் தற்போது காலியாக உள்ள இளநிலை உதவியாளர் - தட்டச்சர் பணியிடங்கள் ஒன்றில் நியமனம் செய்திட முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

## காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

25.5.98-ல் சட்டமன்றப் பேரவையில் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 1971 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நாகை மாவட்டக் காவல் அலுவலகத்திற்கு, நாகை வெள்ளிப்பாளையம் என்ற இடத்தில் 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகை மாவட்டம் காவல் தலைமை அலுவலகத்தைக் கட்ட இந்த அரசு முடிவு செய்துள்ளது என அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பின்படி நாகப்பட்டினம் மாவட்ட அனைத்து காவல் சிறப்புப் பிரிவுகளும் ஒரு வளாகத்தில் இயங்கும் வகையில் 'T' வகை வடிவமைப்புக் கொண்ட மாவட்டக் காவல் அலுவலகக் கட்டடத்தினை நாகப்பட்டினம் வெளிப்பாளையத்தில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதியும், இதற்காகும் செலவினத்தில் முதல்கட்டப் பணிக்காக 1998-99 ஆம் ஆண்டில் ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

★ நலிவுற்ற நிலையிலிருக்கும் 18 கூட்டுறவு நூற்பாலைகளை ரூ.145 கோடி முதலீட்டில் புனரமைத்துச் சீர்செய்திட முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ தமிழ்நாட்டிலுள்ள 1,228 காவல் நிலையங்களுக்கும், மேசை, நாற்காலி முதலிய தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கென, தலா ரூ.20,000 வீதம் ரூ.2.46 கோடி நிதி ஒதுக்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ கைத்தறி, கைத்தறிப் பொருட்காட்சிகள், துணிநூல் மற்றும் கதர்த் துறை போன்றவற்றிற்கு, பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி நிதி ஒதுக்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடிமின மாணவ-மாணவியர்கள் பயனடையும் வகையில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழுள்ள 52 உயர்நிலைப் பள்ளிகளில், ரூ.50 இலட்சம் செலவில், கணிப்பொறிப் பாடவகுப்புகள் தொடங்கிட அரசு ஆணை.

★ ஊராட்சி மன்றங்கள் தங்களிடம் உள்ள உபரியான பொதுநிதியிலிருந்து சிறுசிறு முதலீட்டுப் பணிகளை எடுத்துச் செய்யும் பொழுது, அவற்றிற்கான தொழில்நுட்ப அனுமதி, மதிப்பீடு தயாரித்தல், அளவு, மேல் அளவு செய்தல் போன்றவற்றில் ஏற்படும் தேவையற்ற காலதாமதங்களைத் தவிர்த்திடும் வகையில் ரூ.1 இலட்சத்திற்குக் குறைவான மதிப்பீடுள்ள இத்தகு பணிகளை பொறியியல் பட்டம் பெற்ற பட்டயப் பொறியாளர்களைப் (தனியார்) பயன்படுத்திக் கொள்ள ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

★ கடலில் காணாமல் போய்த் தேடப்படும், தமிழக மீனவர் குடும்பங்களுக்கு, அவர்கள் திரும்பி வரும் வரை வருவாய் இன்றி உணவுக்குச் சிரமப்படும் அவர்தம் குடும்பத்தினருக்கு, நாளொன்றுக்கு ரூ.50 வீதம் மாதத்திற்கு ரூ.1,500 வழங்கிட, முதலமைச்சர் கலைஞர் ஆணை.

★ 50 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊரகச் சந்தைகளை மேம்படுத்திடத் தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.2.50 கோடி ஒதுக்கி அரசு ஆணை!

★ வருவாய் குறைந்த, நலிந்த ஊராட்சி களுக்கு மின்கட்டணம் செலுத்திட ரூ.2.80 கோடியும், தெருவிளக்கு இல்லாத கிராமக் குடியிருப்புகளுக்கு 30,000 தெரு விளக்குகள் அமைத்திட ரூ.12.60 கோடியும், 10,000 குழாய் விளக்குகளை சோடியம் ஆவி விளக்குகளாக மாற்றி அமைக்க ரூ.2.65 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ வீட்டுவரி வசூல் இணைமானியமாக ரூ.28.46 கோடி ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.


24 தமிழரசு

## உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு உதவிகள்

*1998-99* ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களுக்கு வாகனம் வாங்குவதற்காக ரூ.6.45 இலட்சம் வழங்கியும், ஒதூர், மாதவரம், அருப்புக்கோட்டை, திண்டுக்கல் மற்றும் சங்கரன் கோயில் நகராட்சி களுக்குக் குடிநீர்த் திட்டங்களுக்கென ரூ.150 இலட்சம் மான்யமாக வழங்கியும், 65 நகராட்சிகளில் கொசுக்கள் மூலம் பரவும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு ரூ.50இலட்சம் மான்யமாக வழங்கியும் ஆக, நகராட்சிகளின் வளர்ச்சிக்கு ரூ.206.45 இலட்சங்கள் வழங்கப் பட்டுள்ளன.

பேரூராட்சிகளைப் பொருத்த மட்டில் பேரூராட்சிகளில் உள்ள 100 உலர்ந்த பொதுக் கழிப்பிடங் களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ.40இலட்சமும், பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டத்தினை மேம்படுத்து வதற்கு ரூ.121.30 இலட்சமும், பேரூராட்சி களின் பொதுக் கட்டணக் கழிப்பிடங்களுக்குத் தொடர்ந்து தண்ணீர் வசதி செய்வதற்கு 15 பேரூராட்சிகளுக்கு ரூ.750 இலட்சமும் வழங்கப் பட்டுள்ளது.

திருச்சி, மதுரை, கோவை பேரூராட்சிகளில் உதவி இயக்குநர் களுக்குப் பழைய வாகனங்களுக்குப் பதில் புதிய வாகனங்கள் வாங்கு வதற்கு ரூ.8.50 இலட்சமும் ஆக - பேரூராட்சிகளின் வளர்ச்சிக் காக 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.177.30 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது.

- ★ வருவாய் குறைவான, நலிந்த ஊராட்சிகளின் குடிநீர்க் கட்டணத் தொகை செலுத்திட ஏதுவாகவும் மற்றும் குடிநீர் வசதி செய்து தருவதற்கும் ரூ.15 கோடி அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.
- ★ சுற்றுலா, ஆலயப் பயணம் செய்யும் நகரமைப்புகளை ஒட்டியுள்ள ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் வகையில், அத்தகு ஊராட்சிகளுக்கு ரூ.3 கோடியும், ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.8.52 கோடியும் அரசு ஒதுக்கியுள்ளது.




## காவிரி நதி நீர் தமிழக அரசு மனு

கர்நாடக மாநிலத்தில், தமிழ்நாட்டின் எல்லைக்கு மேல் சுமார் 30 கி.மீ. தொலைவில் காவிரி நதியில் குறுக்கே சிவசமுத்திரம் என்ற இடத்தில் 1899 ஆம் ஆண்டு முதல் 42 மெகாவாட் திறன் கொண்ட ஓர் நீர்மின் நிலையம் செயல்பட்டு வருகிறது.

1987ல் ஏற்கெனவே உள்ள சிவசமுத்திரம் நீர்மின் நிலையத்திற்கு அருகே 270 மெகாவாட் திறன் கொண்ட மேலும் ஓர் நீர்மின் நிலையம் அமைக்க கர்நாடகா ஓர் திட்டத்தைத் தீட்டியது. அந்தத் திட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் மேட்டூருக்குக் கிடைக்கப்பெறும் நீர் குறைந்து, சுமார் 125 டி.எம்.சி.நீர் வரத்துதான் கிடைக்கும். என்றும், இந்த அளவு சில ஆண்டுகளில் மேலும் குறையக்கூடும் என்றும் தெரியவந்தது.

எனவே, இந்த திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அதன் இசைவினை வழங்க மறுத்துவிட்டது. மத்திய அரசும், தமிழ்நாட்டின் இசைவினைப் பெற்று, திட்ட அறிக்கையை மீள அனுப்புமாறு கூறி அந்த அறிக்கையைக் கர்நாடகாவிற்குத் திருப்பி அனுப்பிவிட்டது. இதுவரையில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கவில்லை.

1992 ஆம் அண்டில் பத்திரிகைச் செய்தி மூலம் கர்நாடகா இத்திட்டத்தை மீண்டும் இத்தாலி நாட்டின் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப் படவுள்ளது என்று அறியப்பட்டது. எனவே அந்தத் திட்டத்திற்குத் தடை விதிக்குமாறு கோரி காவிரி நடுவர் மன்றத்தில் 1992 அக்டோபரில் ஓர் பலவகை உரிமையியல் மனுவை (C.M.P.No.24/1992) தமிழ்நாடு தாக்கல் செய்தது.

இந்த மனுவை நடுவர் மன்றத்தால் 2.4.1993 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போது மேலே கூறிய ஒப்பந்தத்தைச் செயல்படுத்தப் போவதில்லை என்று கூறியும், அதற்கான ஆணை ஒன்று கர்நாடகாவின் சார்பில் நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது. எனவே நடுவர் மன்றத்தின் ஆலோசனையின் படி, சட்டப்படி தேவை ஏற்படுமே யானால், இதுகுறித்துப் புதிதாக ஒரு மனுவை மீண்டும் தாக்கல் செய்யலாம் என்ற உரிமையின் அடிப்படையில் இந்த மனுவைத் தமிழ்நாடு அரசு திரும்பப் பெற்றுக்கொண்டது.

கர்நாடகா அரசு, இத்திட்டத்தை மீண்டும் மேற்கொள்ளப்போவதாக, 1998 மார்ச் மாதம், கர்நாடகா அரசு வழக்கறிஞரால் தமிழகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டம் பற்றிய தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் திட்ட அறிக்கையை அனுப்பக் கோரி தமிழகத்தின் சார்பில் கர்நாடக அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்குக் கர்நாடகா அரசிடமிருந்து தக்க பதில் வராத நிலையில், இத்திட்டம் பற்றிய முன் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்து, இதனால் தமிழகத்தின் காவிரிப் பாசனத் திற்கு ஏற்படும் பாதிப்பையும் தெளிவுபடுத்தி, இத்திட்டத்தைக் கர்நாடகம் செயல்படுத்தத் தடை விதிக்கக்கோரி, தமிழகத்தின் சார்பில் காவிரிநடுவர் மன்றத்தில் ஒரு பலவகை உரிமையியல் மனு 30.6.1998 அன்று தாக்கல் செய்யப் பட்டது. காவிரி நடுவர் மன்றம் விசாரணையை மீண்டும் தொடங்கும் போது இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு தகுந்த ஆணையை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படும்.

# கலைஞர் ஆட்சியில் கடலூர் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

- கடந்த ஆட்சியில், நிலுவையாக விடப்பட்டிருந்த 8,303 தொகுப்பு வீடுகள், 156 பள்ளிக் கட்டடங்கள், 174 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 61 சத்துணவுக் கூடங்கள், 86 கி.மீ. தூரமுள்ள சாலைகள், 380 ஏனைய பணிகள், 78 ஜீவன்தாரா கிணறுகள், வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் 104 பணிகள், பரவலாக்கப்பட்ட திட்டத்தில் 123 பணிகள், நாடாளுமன்ற உறுப்பினர் வளர்ச்சித் திட்டத்தில் 93 பணிகள் ஆகிய வளர்ச்சிப் பணிகள் இவ்வாட்சியில் கடந்த 2 ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன.

- மேலும், கடந்த 2 ஆண்டுகளில், 4,344 தொகுப்பு வீடுகள், 314 கி.மீ. தூரமுள்ள தார்ச்சாலைகள், 95 பள்ளிக் கட்டடங்கள், 37 நியாயவிலைக் கடைகள், 58 சத்துணவுக் கூடங்கள், 9 ஊராட்சி மன்றக் கட்டடங்கள், 791 தொலைக்காட்சிப் பெட்டி அறைகள், 1,954 பல்வகைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 163 ஏரி/குளம்/குட்டை/ஊரணிகள் பழுது பார்க்கப்பட்டுள்ளன. 307 ஜீவன்தாரா கிணறுகளும், பாராளுமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 113 பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

- ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,154 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஊரக இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1,412 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- நடப்பு நிதியாண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 2,728 தொகுப்பு வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 324 நபர்களுக்கு ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறு வெட்டவும், 47 பள்ளிக் கூடங்களில் கழிப்பிட வசதி செய்து கொடுக்கவும், 2,825 வீடுகளுக்கு நவீன கழிப்பறை வசதி செய்து கொடுக்கவும், 5,355 நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்கள் வழங்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

- மேலும் 42 பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், 84 நியாயவிலைக் கடைகள் கட்டவும், 2 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் கட்டவும், 52 சமையலறை கட்டடங்கள் கட்டவும், 37 சத்துணவுக் கூடங்கள் கட்டடவும், 5 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க கட்டடங்கள் கட்டவும், 175 தொலைக்காட்சிப் பெட்டி அறைகள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. 135 கி.மீட்டர் தார்ச் சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

- 418 மயானப் பாதை சாலைகள் அமைக்கவும், 260 சிறு பாலங்களும், 348 தடுப்புச் சுவர்களும், 21 பயனிகள் நிழற்குடைக் கட்டவும், 34 தரைப் பாலங்கள் கட்டவும் திட்டம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

- 535 இளைஞர்களுக்கு ஊரக இளைஞர் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டத்தில் பயிற்சி அளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏரி/குளம்/குட்டை/ஊரணி பணிகள் பழுது பார்க்க 221 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 45 எண்ணிக்கை கரிம எரிவாயுக் கலன் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- முதியோர் உதவித்தொகைத் திட்டங்களின் கீழ், 6,22,406 நபர்கள் பயனடைகின்றனர். கடந்த 2 ஆண்டுகளில் விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் 105 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்து 70 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் 2,576 பயனாளிகளுக்கு ரூ.87 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இலவச வேட்டிகள் 6,20,000 மற்றும் 6,07,000 இலவசச் சேலைகள் இரண்டாண்டுகளில் வழங்கப்பட்டுள்ளன. 1996-97ல் வெள்ளப்பெருக்கில் வீடிழந்த 92,469 பயனாளிகளுக்கு ரூ.9 கோடியே 26 இலட்சத்து 49 ஆயிரம் வெள்ள நிவாரண உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 1997-98ல் வெள்ள நிவாரண உதவித்தொகையாக வீடிழந்த 3,745 பயனாளிகளுக்கு ரூ.20,64,500 வழங்கப்பட்டுள்ளது.

- கடந்த 2 ஆண்டுகளில், 680.43 ஏக்கர் பரப்பளவுள்ள சாகுபடி நிலங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 26,630 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

- ஆதிதிராவிட இன மக்களுக்குக் கடந்த 2 ஆண்டுகளில் 4,427 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 10,800 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- கடந்த 2 ஆண்டுகளில், 1,01,542 ஆதி-திராவிட மாணவ-மாணவியர்க்கு ரூ.3 கோடியே 35 இலட்சத்து 75 ஆயிரம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டிற் கென ரூ.1 கோடியே 23 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- இவ்வாண்டையும் சேர்த்து 3 ஆண்டுகளில் 1,03,962 இலவசப் பாடப்புத்தகங்களும், 1,62,727 நபர்களுக்கு இலவசக் குறிப்பேடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

- கடந்த 2 ஆண்டுகளில் 51,877 ஆதிதிராவிட மாணவ-மாணவியர்க்கு இலவசமாகச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

- தாட்கோ நிறுவனத்தின் மூலம், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்களுக்கென 2,335 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் ரூ.2 கோடியே 58 இலட்சத்து 52 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

### சமத்துவபுரம்

- சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டை யொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களால் அறிவிக்கப்பட்ட சமத்துவபுரங்கள் உருவாக்கும் திட்டத்தின்படி, இம்மாவட்டத்தில், பண்ருட்டி வட்டம் - திருவாமூர் கிராமத்தில், 11 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 15-8-98 அன்று 100 குடும்பங்களைக் குடியேற்றும் வகையில், பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று விருத்தாசலம் வட்டம் - ஜவாதுகுடி கிராமத்தில், சமத்துவபுரம் உருவாக்கிட 13 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

- பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், இவ்வாட்சியில், புவனகிரி, எம்.பரூர் ஆகிய இடங்களில் 2 மாணவர் விடுதிகளும், குறிஞ்சிப்பாடி, காடாம்புலியூர், சேத்தியாத்தோப்பு ஆகிய இடங்களில் 3 மாணவியர் விடுதிகளும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கென, வல்லம்படுகையில் ஒரு மாணவர் விடுதியும், வடலூரில் ஒரு மாணவியர் விடுதியும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. கல்லூரி மாணவர் விடுதி ஒன்றும் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளது.

## பொது வினியோகம்

- இம்மாவட்டத்தில், நகர்ப்புறத்தில் 28 முழுநேர நியாயவிலைக் கடைகளும், கிராமப்புறத்தில் 56 நியாயவிலைக் கடைகளும், இவை தவிர 80 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் திறக்கப்பட்டுள்ளன.

- கடலூர் மாவட்டத்திலுள்ள 5 நகராட்சிகளில் 72,468 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் மொத்தம் 3,06,242 குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

- கடந்த இரண்டாண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2,583 ஏழைப்பெண்களுக்குத் தலா ரூ.10,000 வீதம், ரூ.2 கோடியே 58 இலட்சத்து 30 ஆயிரம், திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண உதவித் திட்டத்தின்கீழ் - 23 பேருக்கும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 30 பேருக்கும், ஏழை விதவைகளின் பெண்கள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 70 பேருக்கும், ஆதரவற்ற பெண் திருமண உதவித் திட்டத்தின்கீழ் - 3 பேருக்கும் ரூ.7.13 இலட்சம் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- இலவச தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ் - 185 பெண்களுக்கு ரூ.3 இலட்சத்து 70 ஆயிரம் செலவில், இலவசமாகத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1,200 விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் - 19,546 கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு 39 இலட்சத்து 9 ஆயிரத்து 200 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

- ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின்கீழ் 3,628 பயனாளிகளுக்கு ரூ.11 இலட்சத்து 84 ஆயிரத்து 212 நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

- கிராம குடிநீர்த் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.13 கோடியே 70 இலட்சம் செலவில் புதிய குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; ரூ.2 கோடியே 29 இலட்சம் செலவில் குடிநீர்த் திட்டப் புனரமைப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் சார்பில், கடந்த 2 ஆண்டுகளில், நபார்டு திட்டத்தின்கீழ் 5 கோடியே 22 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 57.25 கி.மீ. தூரமுள்ள பேருந்து தடச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

- 1996-97ல் - சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் 18 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.210 இலட்சம் செலவில் மேம்பாடு செய்யப்பட்டன; விபத்து தவிர்ப்புத் திட்டத்தின்கீழ் 1 கி.மீ. சாலை ரூ.15 இலட்சம் செலவில் செயலாக்கப்பட்டது; நபார்டு திட்டத்தின்கீழ் 14 பேக்கேஜ் பணிகள் ரூ.622 இலட்சங்கள் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன; நவம்பர் மற்றும் டிசம்பர் '98இல் பெய்த மழை காரணமாக நிவாரணப் பணிகள் ரூ.406.50 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டன; 146.252 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.591.21 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன.



- 1997-98ல் - அக்டோபர் மற்றும் நவம்பர் '97இல் பெய்த மழை காரணமாக பழுதுபட்ட சாலைகள் ரூ.250 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன; குறிஞ்சிப்பாடி உட்கோட்டத்தில் 28.45 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.187.45 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன; சிதம்பரம் - கவரப்பட்டு சாலை கி.மீ.2/4ல் பாலம் கட்டும் பணி ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது; நபார்டு திட்டத்தின்கீழ் விருத்தாசலம் - தொழுதூர் சாலை (0/0 - 16/0) இரண்டாம் கட்டப் பணி ரூ.353.56 இலட்சம் செலவில் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது; 11 சிறுபாலங்கள் ரூ.26.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டன; டிசம்பர் '96ல் பெய்த மழை காரணமாகப் பாதிக்கப்பட்ட சாலைகள் 11 பேக்கேஜ்களாகப் பிரிக்கப்பட்டு ரூ.2500 இலட்சத்தில் மேம்பாடு செய்யப்பட்டு

வருகின்றன; 143.92 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.424.27 இலட்சம் செலவில் சீரமைக்கப் பட்டுள்ளன.

- பொதுப்பணித்துறை வெள்ளாறு வடிநிலக் கோட்டத்தின் சார்பில், கடந்த இரண்டு ஆண்டுகளில்:
    - விருத்தாசலம் வட்டம் - வரம்பனூர் கிராமத்தில் ரூ.15 இலட்சம் செலவில் ஒரு புதிய ஏரி அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது.
    - திட்டக்குடி வட்டத்திலுள்ள நாங்கூர் ஓடையின் குறுக்கே அணைக்கட்டு, தச்சூர் மற்றும் எழுத்தூர் ஏரிகளுக்கு கூடுதல் நீர்வரத்து ஏற்படுத்தும் பணிகள் ரூ.19.6 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.
    - பண்ருட்டி வட்டம் பணிக்கன்குப்பம் கிராமத்தில் கெடிலம் கரையில், ரூ.6.48 இலட்சம் செலவில், வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.
    - விருத்தாசலம் நகர் கண்மாய் மற்றும் வரத்துக் காலவாயில் தூர்வாருதல் மற்றும் புனரமைத்தல் ரூ.10 இலட்சத்திலும்; நல்லான் ஏரி ரூ.5.60 இலட்சத்திலும்; வயலூர் ஏரி ரூ.14 இலட்சத்திலும்; கொண்டங்கி ஏரி ரூ.10 இலட்சத்திலும்; முனியன் ஏரி ரூ.10 இலட்சத்திலும்; ஒரையூர் கண்மாய்க்கு ரூ.6.10 இலட்சத்திலும்; குறிஞ்சிப்பாடி பெரிய ஏரி ரூ.10 இலட்சத்திலும், தூர்வாரிப் புனர் அமைக்கும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.
    - இவ்வாண்டில், 11 ஏரிகளில் தூர்வாரும் பணிகளுக்கென ரூ.116 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
    - பொதுப்பணித்துறை கொள்ளிடம் வடிநிலக் கோட்டத்தின் சார்பில், சிதம்பரம் வட்டம் சாக்காங்குடி கிராமத்தின் அருகே, வெள்ளாற்றில், 26 கிராமங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள அபாயத்திலிருந்து காத்திடும் வகையில், ரூ.161 இலட்சம் மதிப்பீட்டில் 4 ஸ்லூயிஸ் கட்டும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.
- கடந்த 2 ஆண்டுகளில் மாவட்டத் தொழில் மையத்தில், 5,447 புதிய தொழில்கள் தொடங்கப் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன; பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கடந்த 2 ஆண்டுகளில் 822 நபர்களுக்குக் கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் கடந்த 2 ஆண்டுகளில், 90 நபர்களுக்குத் தொழிற்கடனாக ரூ.7 கோடியே 3 இலட்சத்து 20 ஆயிரமும், 340 நபர்களுக்கு வாகனக் கடனாக ரூ.4 கோடியே 60 இலட்சத்து 57 ஆயிரமும் வழங்கப்பட்டுள்ளன.
- வேளாண்மைத் துறையின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நெல் மற்றும் சிறுதானிய விதை உற்பத்தி, பயிறு வகைகள், எண்ணெய் வித்து மற்றும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் 5 கோடியே 74 இலட்சத்து 65 ஆயிரத்து 600 ரூபாய் செலவிடப்பட்டு, குறியீடுகள் எய்திடப்பெற்றுள்ளன.
- வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில் கடந்த இரண்டு ஆண்டுகளில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில், மண்வளப் பாதுகாப்பு, சிறுபாசனம் மற்றும் வெள்ள நிவாரணப் பணிகள் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.
- இம்மாவட்டத்தில், இவ்வாண்டையும் சேர்த்து மூன்றாண்டுகளில், 23 புதிய துவக்கப்பள்ளிகள், 13 புதிய நடுநிலைப்பள்ளிகள், 7 புதிய உயர் நிலைப்பள்ளிகள், 3 புதிய மேல்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

> ***சாமானிய மக்களின் நலம்தான் மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலிகொடுக்க முடியாது!***
>
> **- ஜவகர்லால் நேரு**

- மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின்கீழ் 405 ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 36 தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 26 பள்ளிகளுக்கு ரூ.15.60 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ரூ.19.80 இலட்சம் மதிப்பீட்டில் 4 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் 6 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடங்கள் கட்டப் படுகின்றன.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 1,021 பயனாளிகளுக்கு ரூ.10.59 இலட்சம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,851 விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 13,083 குடிசைகளுக்கு விளக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 3,556 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. 25,508 குடியிருப்பு இணைப்புகளும், 233 குடிநீர்த் திட்டங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 385 மையங்கள் மூலமாக 6 வயதிற்கு உட்பட்ட 1,09,791 குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி, சொட்டு மருந்து போடப்படுகின்றன.
- மீனவர் நலனுக்கெனக் கடந்த இரண்டு ஆண்டுகளில் சிங்காரவேலர் நினைவு மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், 689 குடும்பங்களுக்கு ரூ.2 கோடியே 20 இலட்சத்து 48 ஆயிரம் செலவில் இலவச இல்லங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 413 வீடுகள் ரூ.20.65 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டன. 107 கட்டுமரங்களுக்கு ரூ.11.32 இலட்சம் செலவில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்கீழ் 14,506 பயனாளிகளுக்கு ரூ.103.58 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. குழுகாப்புறுதித் திட்டத்தின்கீழ் 39 நபர்களுக்கு ரூ.11.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீனவக் கிராமங்களுக்கு 146 தெரு விளக்குகள் ரூ.6.11 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.
- பேரூராட்சிகளின் மேம்பாட்டுக்கெனக் கடந்த 2 ஆண்டுகளில், அடிப்படைத் தேவைகள், திட்டங்கள், 10வது நிதிக்குழு மானியத்திட்டங்கள், பகுதித் திட்டங்கள், வெள்ள நிவாரண மானியம், குடிசைமாற்றுத் திட்டம் போன்ற 1,589 பணிகள் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- கூட்டுறவு வங்கிகளின் மூலமாக, விவசாயிகளுக்குக் கடந்த 2 ஆண்டுகளில் குறுகிய காலக் கடனாக ரூ.67.39 கோடியும், மத்திய காலக் கடனாக ரூ.3.45 கோடியும், நகைக் கடனாக ரூ.131.88 கோடியும், பண்ணைசாராக் கடனாக ரூ.1.90 கோடியும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

# கடலூர் மாவட்டத்தில், இரண்டே ஆண்டுகளில்

# ரூ.156 கோடி அளவிற்கு நலத்திட்டங்கள் !

# பயன்துய்ப்போரிடையே முதலமைச்சர் கலைஞர் பெருமிதம் !

"இன்று ஒரு மாநாடு போல் கடலூரில் நடைபெறுகின்ற இந்த அரசு நிகழ்ச்சியில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கின்றேன்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டாண்டுகளில் ரூ.156 கோடி அளவிற்கான திட்டங்கள் தீட்டப்பெற்று, அதற்கான தொகை ஒதுக்கப்பட்டு எல்லாத் துறைகளிலும் அந்தப் பணிகள் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மேலும் 157 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இந்த ஆண்டு அந்தப் பணிகள் தொடங்கி நிறைவுற இருக்கின்றன.

## இணைந்து செயல்பட வேண்டும்

என்னதான் திட்டங்களைத் தீட்டினாலும், அறிவித்தாலும் அவைகள் நிறைவுற மக்களால் பாராட்டப்பட ஒத்துழைக்க வேண்டியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள், ஊராட்சி மன்றத்திலேயிருந்து சட்ட மன்றம், நாடாளுமன்றம் வரையிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள், அரசின் அதிகாரிகள், அந்த அதிகாரிகளோடு இணைந்து பணியாற்றுகின்ற பல்வேறு துறையின் அலுவலர்கள்.

இவர்களெல்லாம் அந்தத் திட்டத்தோடு தங்களை இணைத்துக்கொண்டு ஆர்வத்தோடு பணியாற்றினால்தான் இது ஒரு அரசின் திட்டம். நாம் அதிகாரியாக இருக்கிறோம். நாம் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறோம். ஆகவே, நம்முடைய கடமையைச் செய்யவேண்டும் என்று வெறும் கடமைக்காக மட்டும் செய்யாமல் அந்தக் கடமையையும் மறந்துவிடாமல் உள்ளுணர்வோடு இந்த திட்டங்களிலே தங்களை ஒன்றிக் கலந்திடக்கூடிய இதயம் பெற்றவர்களாக விளங்கிட வேண்டும்.

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அப்படி ஒருங்கிணைந்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. நான் அவர் வரவேற்புரையாற்றும்போது கவனித்தேன். அவர் வேறு மாநிலத்துக்காரர். மிகுந்த சிரமத்திற்கிடையே தமிழைக் கற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை அவர் உரையாற்றிய போதே நீங்களெல்லாம் உணர்ந்து கொண்டீர்கள்; நானும் உணர்ந்து கொண்டேன். அது கொச்சைத் தமிழாக இருந்தாலும் கொஞ்சும் தமிழாக இருந்தது.

அந்த உரையில் நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ, நான் உன்னிப்பாகக் கவனித்தேன். அந்த உரையிலே அவர் சொன்ன இரண்டொரு சொற்றொடர்கள் உங்களுடைய கையொலியைக்கூட பெற்றன.



அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அந்தச் சொற்றொடரை அப்பழுக்கில்லாமல் சுத்தமாக இங்கே உச்சரித்தார். நீங்களெல்லாம் கைதட்டி வரவேற்றீர்கள். நமக்கு நாமே என்ற சொல்லையும் அப்படியே உச்சரித்தார். நீங்கள் கைதட்டி வரவேற்றீர்கள். சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற சொற்றொடரை உச்சரித்தார்; நீங்கள் கைதட்டி வரவேற்றீர்கள்.

## மாவட்ட ஆட்சியர் உறுதி

இதிலிருந்து என்ன புரிகிறது என்றால், இந்தத் திட்டங்களோடும், அந்த வைராக்கியத்தோடும் அவர்

ஒன்றிக் கலந்திருக்கிற காரணத்தால், அதை அடிக்கடி அவர் மனதிலே பதியவைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் ஏழை, எளிய மக்களை, சாதாரண மக்களை, பட்டிக்காட்டிலே இருக்கின்ற பாமர மக்களை, கிராமப்புறத்து மக்களை சென்றடையக்கூடிய பல்வேறு திட்டங்களை உள்ளடக்கிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், மக்கள் தங்களைத் தாங்களே ஒப்படைத்துக் கொண்டு, தங்களுக்காக நிறைவேற்றிக் கொள்கின்ற நமக்கு நாமே திட்டமென்றாலும், அல்லது அரசு இன்றைக்குப் பலகோடி ரூபாய்களைச் செலவழித்து மக்கள் நல்வாழ்வுக்காகத் தீட்டுகின்ற திட்டங்கள் ஆனாலும் அவைகளையெல்லாம் சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்கின்ற அந்த உறுதிமொழியோடு நிறைவேற்றுவேன் என்ற பொறுப்பை இந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் சக்ஸேனா அவர்களைப்போல எல்லா மாவட்டங்களுடைய ஆட்சித் தலைவர்களும் பெறவேண்டும், பெற்றிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையோடு தான் நான் இந்தக் கருத்தைச் சொல்கின்றேன்.

இன்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினார்கள். தங்களுடைய தொகுதியினுடைய நிலைகளையும் தொகுதிக்கு இந்த அரசு செய்திருக்கின்ற சாதனைகளையும், நிறைவேற்றியுள்ள திட்டங்களையும் எடுத்துக்காட்டி பெருமிதம் கொண்டார்கள்.

குறிப்பாக, இது கடலூரில் நடைபெறுகின்ற விழா என்கின்ற காரணத்தால், மாவட்டத்தின் தலைநகர் என்கின்ற முறையில் தம்பி புகழேந்தி இந்தக் கடலூர் பகுதியிலே மாத்திரம் கடந்த பல ஆண்டு காலமாகப் பேசப்பட்டு, நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு நிறைவேறாமல் இருந்துவிட்ட சிங்காரத் தோப்பு பாலத்தை ஒன்பது கோடி ரூபாயிலே கட்டிமுடிக்க இப்போது டெண்டர் விடப்படுகின்ற நிலை வரையிலே அதற்கான அனுமதி கிடைத்திருக்கின்றது என்பதை நான் புகழேந்திக்கும், உங்களுக்கும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மின் உற்பத்தி நிலையம்**

கடலூர் துறைமுகத்தின் வளர்ச்சிக்கான, மேம்பாட்டிற்கான ஆய்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடலூர் நகர குடிநீர்ப் பிரச்சினை தீர்வதற்கு 17 கோடி ரூபாய்க்கான திட்டம் சட்டமன்றத்திலே தம்பி.கோ.சி.மணி அவர்களால் உள்ளாட்சித்துறை அமைச்சர் என்கின்ற முறையிலே அறிவிக்கப்பட்டு அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இங்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன். கடலூர் தொகுதிக்கு மின் உற்பத்தி நிலையம் போன்ற புதிய திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அழகிரி இங்கே பேசும்போது சொன்னார்; தஞ்சை மாவட்டத்திற்குத் தந்துள்ளதைப்போல இல்லாவிட்டாலும், மின்சாரத் திட்டத்தில் இங்கே உள்ள விவசாயிகளுக்கு ஒரு 500 பம்புசெட்டுகளுக்காவது அனுமதி தரவேண்டும் என்று கேட்டேன். நினைவாற்றல் உள்ள முதலமைச்சர் மறந்திருக்கமாட்டார் என்று கருதுகிறேன் என்று குறிப்பிட்டு அந்தக் கோரிக்கையை மறைமுகமாக வலியுறுத்தி இருக்கின்றார்.

நான் நேரடியாகச் சொன்னாலும், மறைமுகமாகச் சொன்னாலும் புரிந்துகொள்ளக்கூடியவன் என்று அழகிரிக்குத் தெரியும். எனவே நான் உடனடியாக மின்சாரத்துறை அமைச்சர் அருமை நண்பர் வீராசாமி அவர்களிடத்தில் ஆணை பிறப்பித்திருக்கின்றேன். இந்த ஆண்டே அந்த 500 பம்புசெட்டுகளுக்கும் அனுமதி கிடைத்துவிடும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பராந்தகச் சோழனும் கலைஞரும்

**வீ**ராணம், வடவாறு, வாய்க்காலை மேம்படுத்தி பலப்படுத்திடும் திட்டம் ரூ.26.39 கோடியிலும், வீராணம் ஏரியை மேம்படுத்தி,பலப்படுத்திட ரூ.10.68 கோடியும், வீராணம் ஏரி மற்றும் வடவாறு பாசன பரப்பு வாய்க்கால்களை நவீனப்படுத்தி மேம்படுத்திட ரூ26 கோடியும் ஒதுக்கப்பட்டு திட்டப்பணிகள் விரைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கரைகள் பலப்படுத்தப்பட்ட கால்வாய்களையும், ஏரிகளையும, ஆறுகளையும் பார்வையிட்டவாறே சென்ற முதல்வர் கலைஞர் அவர்களை வயது முதிர்ந்த ஒரு விவசாயி சந்தித்து "பராந்தகச் சோழன் காலத்திலிருந்து யாருமே இந்தப் பகுதிக்கு வந்ததாகத் தெரியவில்லை. இதுபோன்ற பணிகளை செஞ்சதில்லை. பராந்தகச் சோழனுக்குப் பிறகு நீங்கள்தான் வந்திருக்கிறீங்க...!" என்று பொக்கை வாயெல்லாம் பூரித்திட சொன்னபோது எல்லோருமே மெய்சிலிர்த்து நின்றனர்.

**கரிகாலன் என்ற புனைபெயர்**

தூர்வாரும் பணியைப் பார்வையிட்டவாறே சென்ற முதல்வர் கலைஞர் அவர்களிடம் ஒரு செய்தியாளர் - 'இன்றைக்கு இந்தக் கரையை உயர்த்தும் பணியைச் செய்வதற்காகத்தான் - அன்றைக்கே 'கரிகாலன்' என்ற புனைபெயர் வைத்துக்கொண்டு எழுதினீர்களா ?" என்று வினவினார். அதைக் கேட்டுப் புன்னகை பூத்தார் கலைஞர்.


- தஞ்சை, கடலூர், பெரம்பலூர், மாவட்டங்களில் 5.7.98 அன்று தூர்வாரும் பணிகளை நேரில் பார்வையிடக் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது நிகழ்ந்தவை!

**சோழர் காலத்திற்குப் பிறகு**

நான் காலை முதல் இதுவரையிலே குடந்தை தொடங்கி கடலூர் வரையில் பல்வேறு ஏரிகளையும், ஆற்றுப் பாசனங்களையும், வாய்க்கால்களையும் பார்வையிட்ட நிகழ்ச்சியை உரையாற்றியவர்கள் வியந்து போற்றினார்கள். நூற்றாண்டுக் காலமாக நடைபெறாத இந்த ஆய்வுகளும், தூர்வாரும் பணிகளும் சோழர் காலத்திற்குப் பிறகு இன்றைக்கு நடைபெறுகின்றது என்று புகழ்ந்துரைத்தார்கள்.

அது மாத்திரமல்ல; அவைகள் சரிவர நடைபெறுகின்றதா என்பதைக் காண, நான் நேரிலேயே தஞ்சை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும், இன்றைக்கு கடலூர் மாவட்டத்திற்கும் வந்திருப்பதை, தம்பி துரைமுருகனும், மற்றவர்களும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள்.

நான் இன்று காலையிலே அணைக்கரை தொடங்கி, பிற்பகல் 1.30 மணியளவிலே கடலூர் வரையில் பல ஆறுகள், ஏரிகள் இவைகளையெல்லாம் பார்வையிட்டு வந்தேன். கடந்த கிழமை தஞ்சை மாவட்டத்திலே இரண்டு நாள்



சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கே 14 ஆயிரம் கிலோ மீட்டர் அளவுக்கு காவிரி டெல்டா பகுதியில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள் இவற்றிலே வடிகால் பகுதிகளையும், பாசனவசதிகளையும், ஒழுங்குபடுத்த ஏறத்தாழ 150 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை ஒதுக்கப்பட்டு கடந்த ஆண்டு 10 அல்லது 11 கோடி ரூபாயும், இந்த ஆண்டு 20 கோடி ரூபாயும் அதற்காக செலவழிக்கப்படுகின்ற சூழ்நிலையும், அவைகள் எப்படி நடைபெறுகின்றன என்பதைச் சோதித்துப் பார்க்கக்கூட அல்ல; எனக்கே ஒரு மன ஆறுதலுக்காக, எனக்கே ஒரு மன மகிழ்ச்சிக்காக ஆர்வத்தோடு அவைகளைக் கண்டு களித்தேன்.

இன்றைக்குக் காலையிலேயிருந்து தம்பி பன்னீர்செல்வத்தினுடைய வற்புறுத்தலின் காரணமாக மாத்திரமல்ல; எனக்கே ஏற்பட்ட ஆர்வத்தின் காரணமாகத் தஞ்சை மாவட்டத்திலே விட்டுப் போயிருந்த அணைக்கரை பகுதியிலேயும் மண்ணையாறு பகுதியிலே வெட்டப்பட்ட ஆழப்படுத்தப்பட்ட அந்த ஆறுகள், வாய்க்கால்களில் தண்ணீர் நிரம்பிச் செல்கின்ற காட்சிகளையும் கண்டுவிட்டு அதற்குப் பிறகு இந்த மாவட்டத்திலே பல பகுதிகளில் நான் கவனம் செலுத்தினேன்.

பொதுப்பணித் துறை அமைச்சர் இங்கே சுட்டிக் காட்டியதைப்போல், வடவாறு பல ஆண்டுக்காலம் செம்மைப்படுத்தப்படாமல், ஆழப்படுத்தப்படாமல் பல இடங்களிலே திசைமாறி இது ஆறா, வயலா, இது கரையா, கழனியின் வரப்பா என்றே தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அலங்கோலமாக இருக்கின்ற காட்சியைப் பல பகுதிகளிலே கண்டோம்.

**வடவாறு பணிகள்**

ஆனால் ஏறத்தாழ 20 அல்லது 22 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்த வடவாறு மற்ற ஆறுகளைப் போலச் சாதாரணமாக மண்ணெடுத்து ஆழப்படுத்தி பொக்குலின் போன்ற இயந்திரங்களை வைத்து தூர் எடுத்துவிட்டால் மட்டும் போதாது. அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, செம்மைப்படுத்தப் பட்டால் மட்டும் போதாது. அவைகளில் வருகின்ற தண்ணீர் கொஞ்சம்கூட சேதாரம் இல்லாமல், கரைகள் உறிஞ்சி விடாமல், வயல்கள் தங்கள் பக்கம் வலித்துக்கொள்ளாமல் அவைகள் நேரடியாக வீராணம் ஏரிக்கு வந்து அதனுடைய கொள்ளளவை; அழகிரி குறிப்பிட்டதைப்போல பாதி அளவுக்குக் குறைந்துவிட்ட அந்தக் கொள்ளளவை நிறைவு செய்கின்ற அளவுக்கு வீராணம் நிரம்புமேயானால் - ஒரு காலத்திலே வீராணம் சென்னைக்குத் தேவைப்பட்டது. கிருஷ்ணா வந்துவிட்ட காரணத்தால் வீராணம் சென்னைக்குத் தேவையில்லை - எங்கே உற்பத்தியாகிறதோ அந்த வீராணம் ஏரியின் தண்ணீர், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு அது பாதுகாக்கப்பட்ட குடிநீராகப் பயன் படட்டும் என்று முடிவெடுத்து, அதற்காகப் பல கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தால் வடவாறிலே வருகின்ற தண்ணீர் கொஞ்சமும் வீணாகாமல் அப்படியே வீராணத்திலே வந்து நிரம்ப வேண்டும் என்பதற்காகச் சிமெண்டு போடப்படுகின்ற அளவுக்கு இரு கரைகளும், அதைப்போலவே கீழ் மட்டத்திலே அடித்தளமும் சிமெண்டு போடப்பட்டிருக்கின்றது.

அதைப் பார்த்தபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை என்னாலேயே வர்ணிக்க முடியாது. அவ்வளவு மகிழ்ச்சிக் கடலிலே நான் ஆழ்ந்துபோனேன்.

அதனுடைய கரைகளிலே இருக்கின்ற மேடு பள்ளங்களைப் பார்த்தபோது பொன்முடியிடத்திலே சொன்னேன்; இந்த 22 கிலோ மீட்டர் தூரத்திலே உள்ள கிராமங்களையெல்லாம் இணைக்கின்ற அளவுக்கு ஒரு ஐந்தாறு மினி பஸ்களை இந்தக் கரைகளிலே விட முடியுமா என்று கேட்டேன். இப்பொழுது உயர்த்தப்படுகின்ற, அகலப்படுத்தப்படுகின்ற கரைகள் எல்லாம் வந்தபிறகு பெரிய பேருந்துகளைக்கூட விடலாம். அதுவரையிலே மினி பேருந்துகளை இங்கே இயங்கச் செய்யலாம் என்று மனத் திருப்தியோடு அவர் என்னிடத்திலே சொன்னார்.

### 22 கி.மீ. சிமெண்ட் தளம் போடப்பட்ட ஆறு வேறு எங்கும் கிடையாது

எனக்கேகூட அந்த இடத்திலே தோன்றிற்று, இந்தக் கரையிலே காரிலே போய்க்கொண்டிருப்பதை விட இறங்கி அந்தக் காரையே ஆற்றிலேயே விட்டுச் செல்லலாம் என்கின்ற அளவுக்கு அப்படிப்பட்ட அழகான தளம். நீங்கள்கூட சென்று பார்க்க வேண்டும்; நான் பார்த்தேன். உங்களில் பலர் பார்த்திருக்கமாட்டீர்கள். சென்று பார்க்க வேண்டும். பார்த்தால் தெரியும், நான் ஏன் அதை இவ்வளவு புகழ்கிறேன் என்று. நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. உண்மையைச் சொல்கின்றேன்.

அந்த அளவுக்கு வீட்டிலே போடப்பட்டிருக்கின்ற தளவரிசையைப் போல இந்தியாவிலே வேறு எந்த ஒரு ஆறும் 22 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சிமெண்டு தளம் போடப்பட்ட ஆறு எங்கும் கிடையாது. இங்கே அப்படிப்பட்ட ஒரு ஆறு அமைக்கப்பட்டிருக்கின்றது.

இப்படி பல திட்டங்கள் அக்கறையோடு, ஆர்வத்தோடு இந்த அரசில் இந்த நாட்டு மக்களுக்காக, விவசாயி வாழ்ந்தால்தான் மற்றவர்கள் வாழ முடியும் என்ற அடிப்படை நோக்கத்தோடு இன்றைக்கு நடத்தப்பட்டு வருகின்ற அப்படி நடத்தப்பட்டு வருகின்ற அந்த அடிப்படையிலேதான் அதன் தொடர்ச்சியாகத்தான் இரண்டாண்டுகளிலே 157 கோடி ரூபாயும் வரும் ஆண்டிற்கு மேலும் 157 கோடி ரூபாயும் இன்றைக்குச் செலவிடுகின்றோம்.

இவைகளெல்லாம் மக்களுக்குச் சென்று சேருகின்றதா என்று அதிகாரிகளிடத்திலே கேட்கின்ற நேரத்தில் இதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு, ஒவ்வொரு சிற்றூரிலும் இருக்கின்ற மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத்தான் இருக்க முடியும் என்ற காரணத்தால், பல ஆண்டு காலம் நடைபெறாமல் கிடந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே நடத்தி முடித்திருக்கின்றோம்.

அந்த ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் ஆங்காங்கு இருக்கின்ற ஊராட்சி கவுன்சிலர்கள், மாவட்ட ஊராட்சி கவுன்சிலர்கள் இவர்களெல்லாம், நாம் தேர்ந்தெடுக்கப்பட்டது, இவைகளையெல்லாம் பார்ப்பதற்காக - கண்காணிப்பதற்காக - மேலும் இவைகளையெல்லாம் ஊக்கப்படுத்துவதற்காக என்கின்ற அளவிலே தங்களுடைய பணிகளைத் தொடர வேண்டும்.

### தமிழக மக்களின் உள்ளங்களையெல்லாம் பெற்றிருக்கின்றேன்

என்னுடைய தம்பி போன்ற என்னுடைய அன்புக்குரிய அழகிரி இங்கே சொன்னார்; இழந்தது அதிகம்; பெற்றது குறைவு என்று சொன்னார். இழந்தது அதிகம் என்று சொன்னார். ஆனால் அவர் இலக்கியங்களைக் குறிப்பிட்டார். ஒரு கம்பராக, இளங்கோவடிகளாக இருந்திருக்கலாம். அவர் அரசியலுக்கு வந்த காரணத்தால் அவைகளையெல்லாம் அவர் இழந்துவிட்டார் என்று சொன்னார்.

நான் அவருக்கும் சொல்கின்றேன். அவரை மறுத்துப் பேசியதாக ஒரு பட்டிமன்றத்தைப்போல இங்கே வாதிட்ட தம்பி பொன்முடிக்கும் சொல்லிக் கொள்கின்றேன். நான் எதையும் இழக்க மாட்டேன். இழந்ததைப்போலத் தோன்றும். ஆனால் நான் எதையும் இழக்க மாட்டேன். ஏனென்றால் இவைகளுக்கெல்லாம் மேலாக நான் தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளங்களையெல்லாம் பெற்றிருக்கின்றேன். அவர்களுடைய இதயங்களையெல்லாம் பெற்றிருக்கின்ற காரணத்தால், எதை இழந்தாலும் இந்த இதயங்கள் என்பால் இருக்கின்ற காரணத்தால் அதற்கு இவைகளெல்லாம் ஈடாகி விடும் என்கின்ற அந்த உணர்வோடுதான் உங்களுக்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

என் பணியைப் பாராட்டிய சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இந்த 75 வயதிலே இவ்வளவு கஷ்டப்பட்டு காலை முதல் மாலை வரை சுற்றி வருகிறார் என்று சொன்னால் மாத்திரம் போதாது; என்னைப் பாராட்டினால் மட்டும் போதாது. உங்களையும் தொகுதி மக்கள் பாராட்டுகின்ற அளவுக்கு நடந்து கொள்ள வேண்டும். நீங்களும் தொகுதிகளுக்குச் செல்ல வேண்டும்.

நான் குறிப்பிட்டு - யார், யார் செல்லவில்லை என்று சொல்லமாட்டேன். அவர்களுடைய உள்ளுணர்வு அவர்களை உறுத்தும் என்று கருதுகின்றேன். சென்றவர்களுக்கு உறுத்தாது; செல்லாதவர்களுக்கு உறுத்தும்.

### மக்களோடு மக்களாக இருக்கவேண்டும்

ஆனால் தொகுதியிலே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த மக்களோடு மக்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசியவர்களிலே சிலபேர் இருக்கின்றார்கள். எனக்குத் தெரியும்.

நான் அவர்களைப் பாராட்டி, மற்றவர்களைப் பாராட்டாவிட்டால் அடையாளங் கண்டுவிடும். யார், யார் என்று உங்களுக்கு அதை நான் சொல்லவில்லை. மற்றவர்களுக்கே தெரியும். நான் உள்ளூர யார் யாரைப் பாராட்டுகிறேன். உள்ளூர யார் யார் இங்கே வந்து இப்படிப் புகழ்ந்தார்கள். அவர்கள் மக்களைச் சென்று சந்திக்கவில்லை என்ற மனக்குறையோடு இருக்கின்றேன் என்று அவர்களுக்குத் தெரியும். அந்த மனக்குறையைத் தீர்க்கின்ற அளவுக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும் நடந்துகொண்டு தூய பணியாற்றுவார்களேயானால் நம்முடைய தொண்டு தொடரும்.

இது தொடரக் கூடாது என்று சிலபேர் கருதுகிறார்கள். ஆனால் இது தொடராவிட்டால், இன்றைக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நல்ல காரியங்கள் தொடராமல் போய்விடும் என்பதை எண்ணிப் பார்த்து எங்களுக்கு நீங்கள் எல்லாம் துணை புரியவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

- இவ்வாறு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் **6.7.98** அன்று கடலூரில் உரையாற்றினார்.

# தொழில்துறையில் முதலிடத்தை நோக்கி தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது!

## "எக்கனாமிக் டைம்ஸ்" ஆங்கில ஏட்டின் படப்பிடிப்பு

"தொழில்துறையில் முதலிடத்தை நோக்கி தமிழகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது" என்று சென்னையிலிருந்து வெளிவரும் "எக்கனாமிக் டைம்ஸ்" ஆங்கில ஏடு சிறப்புச் செய்திக் கட்டுரையொன்று வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து 'எக்கனாமிக் டைம்ஸ்' ஏடு வெளியிட்டுள்ள செய்திக்கட்டுரையின் தமிழக்கம் வருமாறு:-

தமிழ்நாட்டில் இரண்டாண்டுக் கால தி.மு.க. ஆட்சியில் தொழில்துறையில் 33,560 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த முதலீட்டில் இது 17.6 சதவிகிதமாகும். இதன் மூலம் தொழில்வளர்ச்சியில் நாட்டின் மூன்றாவது இடத்தைத் தமிழ்நாடு பிடித்துள்ளது.

1991-92 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து 6,781 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டில் 18,500 கோடி ரூபாய்க்கு உயர்ந்த ஏற்றுமதி, 1997-98 ஆம் ஆண்டில் இருபதாயிரம் கோடி ரூபாயை எட்டிப் பிடிக்கும். இது இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் 17 சதவிகிதமாகும்.

### தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இரண்டாவது இடம்

'பிஸினஸ் டுடே' அண்மையில் நடத்திய ஒரு ஆய்வின்படி இந்தியாவிலேயே முதலீடு செய்வதற்குச் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடுதான் திகழுகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவின் தொழில்வளர்ச்சியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், 'பிஸினஸ் டுடே' நடத்திய ஆய்வின்படி தமிழ்நாடு தொழில்வளர்ச்சியில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறது.

### தி.மு.க.அரசு பொறுப்பேற்ற பின், அந்நிய முதலீடு ரூ.43,515 கோடி

தி.மு.கழக அரசு பொறுப்பேற்ற பின்னர் 43,515 கோடி ரூபாய்க்கு அந்நிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளன. இந்தத் தொகையில், ஒப்புதல் அளிக்கப்படாத முதலீடான 8,522 கோடி ரூபாயைக் கழித்துப் பார்த்தால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த அந்நிய முதலீடு 34,993 கோடி ரூபாய்களாகும்.

இதில் இரசாயனத் தொழிற்சாலைகளில் 16,329 கோடி ரூபாய்களும், பெட்ரோலியப் பொருட்கள் தொழிற்சாலைகளில் 2,264 கோடி ரூபாய்களும், உரத்தொழிற்சாலைகளில் 1,125 கோடி ரூபாய்களும், இரும்பு கலவாத தாதுப்பொருட்களுக்கான தொழிற்சாலைகளில் 936 கோடி ரூபாய்களும், தொழில்துறை இயந்திரங்களுக்கான தொழிற்சாலைகளில் 913 கோடி ரூபாய்களும், மின்னணு தொழிற்சாலைகளில் 242 கோடி ரூபாய்களும், வாகனத் தொழிற்சாலைகளில் 1,157 கோடி ரூபாய்களும், மின் உற்பத்தித் துறையில் 28,392 கோடி ரூபாய்களும், தொலைத்தொடர்புத் துறையில் நூறு கோடி ரூபாய்களும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வரவிருக்கும் தொழிற்சாலைகள் பற்றிய விவரமாவது :-

### இருபது இடங்களில் மின் உற்பத்தி செய்யத் தமிழக அரசு திட்டம்

தமிழ்நாட்டில் இருபது இடங்களில் மின் உற்பத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. இவற்றில் இரண்டு மின் உற்பத்தி நிலையங்கள் தூத்துக்குடியிலும், எண்ணூர், கள்ளிக்குடி, ஓசூர் ஆகிய இடங்களில் தலா ஒரு மின் உற்பத்தி நிலையமும் அமையும். இந்த மின் உற்பத்தித் திட்டங்களுக்கெல்லாம் எரிவாயு இணைப்பிற்காக மத்திய அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துவிட்டது.

இந்த ஐந்து மின் உற்பத்தி நிலையங்களும் 480 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் படைத்தவை. மீதமுள்ள பதினைந்து மின் உற்பத்தி நிலையங்களுக்கும் மத்திய அரசு ஒப்புதல் கிடைக்கப்பெற்றுவிட்டால் 2,300 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

### நாங்குநேரியில் ரூ.800 கோடியில் ஏற்றுமதிப் பூங்கா

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) அமெரிக்காவின் ஹைடெக் டெக்னாலஜி இண்டஸ்ட்ரியல் பார்க், ஆக்ஸஸ் டெக்னாலஜிஸ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் நெல்லை மாவட்டம் நாங்குநேரியில் தனியார் துறையில் ஏற்றுமதிப் பூங்கா ஒன்றை நிறுவ உள்ளது. நிலம் மற்றும் பூங்கா அமைப்புப் பணிகளுக்கு 800 கோடி ரூபாய் செலவழிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இந்த ஏற்றுமதிப் பூங்காவில் மட்டும் 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த மறைமலை நகரில் 1,200 ஏக்கரில் தொழிற்பேட்டை ஒன்று அமைகிறது. வாகனங்களுக்கான உதிரிப் பாகங்கள் இங்கு உற்பத்தி செய்யப்படும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த செயின்ட் கால்ரின் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து பிரம்மாண்டமான கண்ணாடித் தொழிற்சாலை ஒன்று திருப்பெரும்புதூர் தொழில்வளர்ச்சிப் பூங்காவில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் அமைகிறது. அடுத்த ஆண்டு இறுதியில் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கும்.

சென்னை எண்ணூரில் உள்ள பெட்ரோலியப் பொருள் தொழிற்சாலைப் பகுதியில் டென்மார்க் நாட்டைச் சேர்ந்த நார்த் சைட்ரோ நிறுவனம் கூட்டுத் துறையில் பி.வி.ஆர். இரசாயன மெழுகு (ரெசின்) தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. 350 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும் இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒன்றரை இலட்சம் டன் இரசாயன மெழுகு (ரெசின்) உற்பத்தி செய்யும்.

எம்.சி.சி. சாக்ரட் ஆக்ரோ லிமிடெட் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) பொள்ளாச்சி அருகே உள்ள கிணத்துக்கடவு கிராமத்தில் தேங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கிறது. இங்கு தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பால், தேங்காய் நார் ஆகியவை உற்பத்தி செய்யப்படும்.

**சிறுசேரியில் உயர்ரக பயோ-டெக்னலாஜி தொழிற்சாலை**

டாக்டர் எம்.எஸ்.சாமிநாதன் ஆய்வு நிறுவனம், மத்திய அரசின் பயோ - டெக்னாலஜி துறை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகிய மூன்றும் கூட்டுச் சேர்ந்து சிறுசேரியில் உயர் ரக பயோ டெக்னாலஜி தொழிற்சாலை ஒன்றை நிறுவுகிறது. இதற்காகத் தமிழக அரசு இருபது ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. இங்கு காய்கறிகள், பழவகைகளின் உற்பத்தி அதிகரிக்க ஆய்வு மேற்கொள்ளப்படும். அரிய மூலிகைச் செடிகள் பயிரிடப்படும். விதைப் பெருக்கத்துக்கு வழி காணப்படும்.

தமிழ்நாட்டில் வாகனத் தொழில் வெகுவாக முன்னேறி உள்ளது. போர்டு, ஹூண்டாய், மிட்சுபிஷி, அசோக் லேலண்டு, இத்தாலியின் இதேகா ஆகிய நிறுவனங்கள் புதிய வாகனத் தொழிற்சாலைகளை நிறுவியுள்ளன. இந்தத் துறைக்கு மேலும் ஊக்கம் தரும் வகையில் சர்வதேச நிதி நிறுவனம் (I.L.F.S) ஜெர்மனியின் டி.ஜி.ஜி. நிறுவனம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து இருபது கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் புதிய தொழிற்சாலை ஒன்றை அமைக்கவிருக்கிறது.

வெகுவாக முன்னேறி வரும் கம்ப்யூட்டர் துறையை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகமும் சர்வதேச நிதி நிறுவனமும் இணைந்து முப்பது கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கவிருக்கிறது.

> ***முயற்சி உன் நண்பனானால், அனுபவம் உனக்கு ஆசான் ஆனால், முன் ஜாக்கிரதை உன் அண்ணனானால், நம்பிக்கையே உன் பெற்றோரானால் நிச்சயம் வாழ்க்கையில் நீ வெற்றி பெற்றுவிடலாம்!***
>
> **- அடிஸன்**

**இந்தியாவிலேயே முதலாவதாக அமையவுள்ள தகவல் தொழில்நுட்ப மையம்**

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கியத் தேவை எனத் தமிழக அரசு உணர்ந்திருக்கிறது. இதனடிப்படையில் தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றை அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. அப்படி அமைக்கப்பட்டால் இந்தியாவிலேயே முதலாவது தகவல் தொழில்நுட்ப மையமாக அது இருக்கும். இந்தத் தொழில்நுட்ப மையத்தில் இளைஞர்களுக்கு கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், மென்பொருள் பொறியியல், வன்பொருள் துறை, தொலைத்தொடர்பு ஆகிய துறைகளில் சிறந்த பயிற்சி அளிக்கப்படும். TANITEC என்ற பெயரில் இது இயங்கும்.

**அதி நவீன மென்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்**

தகவல் தொழில்நுட்பத் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு, 'டிட்கோ'வும் எல்காட்டும் இணைந்து சென்னை தரமணியில் 160 கோடி ரூபாய் முதலீட்டில் 7.5 ஏக்கர் பரப்பில், அதி நவீன மென்பொருள் தொழில் பூங்கா ஒன்றை அமைத்து வருகிறது.

கோவை விமான நிலையம் அருகில் 6 ஏக்கர் நிலப்பரப்பில் இன்னொரு அதி நவீன மென்பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை வர உள்ளது. 'எல்காட்டும்', 'சிப்காட்டும்' இணைந்து 50 கோடி ரூபாய் முதலீட்டில் இதைக் கூட்டுத் தயாரிப்பாக நிர்மாணிக்கிறது.

**முதல்வர் தலைமையில் உயர்மட்டக் குழு**

நூறு கோடி ரூபாய் மற்றும் அதற்கு அதிகமான முதலீட்டுடன் கூடிய தொழில் திட்டங்களுக்குப் பரிசீலனை செய்து பின் உடனடியாக அனுமதி வழங்குவதற்காக முதலமைச்சர் தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், நூறு கோடி ரூபாய்க்கும் குறைவான முதலீட்டுடன் கூடிய தொழில்நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது தொடர்பாக, தலைமைச் செயலாளர் தலைமையில் அதே போன்றதொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கழக ஆட்சியில் கடந்த இரண்டாண்டுகாலத்தில் 33 புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்காக 33 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அவைகளில் 8 தொழிற்சாலைகள் தனது உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இவ்வாண்டு ஆறு தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவங்க உள்ளன. அவைகளில் மூன்றில் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன. எந்திரங்கள்தான் அவைகளில் அமைக்கப்பட வேண்டும்.

12 தொழிற்சாலைகளில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

***- இவ்வாறு 'எக்கனாமிக் டைம்ஸ்' நாளேடு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.***

# விமோசனம்

*உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்மொழித்துறை, டாக்டர் மா.இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையம் - ஆகியவை இணைந்து நடத்திய 'இந்திய விடுதலைக்கு முந்திய தமிழ் இதழ்கள்' கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை*

"விமோசனம்" ராஜாஜி நடத்திய மாத இதழாகும். இமைப்பொழுதும் தம் நெஞ்சின் நீங்காத மதுவிலக்கை ஓர் இயக்கமாக்கிச் செயல்பட அந்நாளில் ராஜாஜிக்குப் பயன்பட்ட படைக்கருவியே விமோசனம் ஆகும். இன்புறுத்துவதை நோக்கமாகக் கொள்ளாமல் அறிவுறுத்து வதையே இலட்சியமாகக் கொண்டு அறிவுறுத்தி, நெறிப்படுத்தி, நலவாழ்வை நோக்கி ஆற்றுப்படுத்தும் பணியைத் திறம்படச் செய்தது விமோசனம் ஏடு.


### விமோசனம் - வரலாறும் அமைப்பும்

இந்திய அரசியல் வரலாற்றில் இடம் பெற்றதைப் போலவே தமிழ் இதழியல் வரலாற்றிலும் தடம் பதித்தவர் ராஜாஜி. இந்திய அரசியலிலோ தமிழ் இலக்கிய உலகிலோ அதிகம் அறியப்படாதவராக இருந்த நாட்களிலேயே தமிழ் வளர்ச்சி பற்றிச் சிந்தித்தவர் இவர்.

### கலைச் சொல்லாக்க இதழ்

விமோசனத்திற்கு முன்பே இதழ் நடத்திய அனுபவம் பெற்றவர் ராஜாஜி. சேலத்தில் புகழ்மிக்க வழக்கறிஞராக வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த காலத்திலேயே தம் நண்பர்கள் சிலரோடு சேர்ந்து, 'விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்' என்ற ஒன்றை 1916 அக்டோபரில் இவர் தோற்றுவித்தார். அதுவே தமிழைப் பொறுத்த வரையில், கலைச் சொல்லாக் கத்திற்கென முதன் முதலில் அமைக்கப்பட்ட சங்கமாகும்.

அச்சங்கத்தின் சார்பில் அக்டோபர் திங்களிலேயே தமிழ்சாஸ்திர பரிபாஷைச் சங்கத்தாரின் பத்திரிகை (Journal of the Tamil Scientific Terms Society) என்ற பெயரில் கலைச்சொல்லாக்கத் திங்கள் இதழ் ஒன்று தொடங்கப்பட்டது. ராஜாஜியும் வேங்கடசுப்பையர் என்பவரும் ஆசிரியர் பொறுப்பில் இருந்தனர். கலைச்சொல்லாக் கத்திற்கு எனத் தமிழில் தொடங்கப்பட்ட முதல் இதழ் இதுவேயாகும்.



"தாய்மொழியில் நூல்கள் வெளியிட விரும்புகிறவர்களை எதிர்நோக்கும் மிகப்பெரிய துன்பம், அறிவியல் கருத்துக் களைக் கூறப் போதிய அளவில் சரியான கலைச்சொற்கள் இல்லாததுதான்" என்று முதல் இதழ் கூறியது. இந்தப் பத்திரிகையால் தமிழ்நாட்டாருக்கு மிகப்பெரிய பயன் விளையும் என்பதில் சந்தேகம் இல்லை என்று பாரதியார் பாராட்டியுள்ளார்.

"தற்கால சாஸ்திரிய பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை ஆராய்ந்து கண்டுபிடிக்கவோ அல்லது நூதனமாகச் சிருஷ்டிக்கவோ என்ற ஒரே நோக்கத்துடன் இப்பத்திரிகை வெளிப்போந்திருக்கிறது. இது மிகவும் உயர்ந்த நோக்கமென்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை" என்று சுப்பிரமணிய சிவம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

"வெளிவந்துள்ள நான்கு சஞ்சிகை களில் அப்பத்திரிகை நல்ல வேலை செய்துள் ளது" என்று அ.மாதவையா குறித்துள்ளார்.

பயிரியல், உயிரியல், வேதியியல், இயற்பியல், வானியல், கணிதம் ஆகிய பிரிவுகளில் ஆங்கிலக் கலைச் சொற் களுக்கு இணையாக இன்னின்ன தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்று ராஜாஜியின் கலைச் சொல்லாக்க இதழ் அறிவுறுத்தியது. உயர்ந்த நோக்கத்தோடு

பேராசிரியர் மா.ரா. அரசு

**தன்னை அடக்கிப் பழகிக்கொண்டவன்,**
**புறத்தேயுள்ள எதற்கும் வசப்படமாட்டான்;**
**அவனுக்கு அதன்பின் அடிமைத்தனம் இல்லை.**
**அவனது மனம் விடுதலை பெற்று விட்டது.**
**அத்தகையவனே உலகத்தில் நன்றாக வாழும்**
**தகுதி பெற்றவனாவான் !**

**- சுவாமி விவேகானந்தர்**

தொடங்கப்பட்ட இவ்விதழ் நான்கு திங்கள்களே வெளிவந்தது.

1916 அக்டோபர் முதல் 1917 சனவரி வரை வெளிவந்த இவ்விதழ் பின்னர், 1917 செப்டம்பரில் சென்னையில் தொடங்கப்பட்ட 'தமிழ்நேசன்' என்ற இதழுடன் இணைக்கப் பட்டது.

**'விமோசனம்' பிறந்தது**

விமோசனம் இதழைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாகவே ராஜாஜியின் மனத்தில் இருந்து வந்தது. 1923 அக்டோபரில் கல்கி, 'நவ சக்தி'யில் சேருவதற்காகச் சென்னைக்குப் பயணமானார். அதே வண்டியில் பயணம் செய்த ராஜாஜியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார். அப்போது இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல் இங்குக் குறிக்கத்தக்கது.

"மதுவிலக்குப் பிரசாரத்துக்காக நானே ஒரு பத்திரிகை நடத்தலாம் என்று எண்ணிக் கொண்டிருந் தேன். உங்களைக் கூட அதில் சேர்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

நான் அதை ஆரம்பிக்கச் சில மாதங்களோ, வருஷங்களோ கூட ஆகலாம். பெயரை மட்டும்தான் இப்போதைக்கு யோசித்து வைத்திருக்கிறேன்".

"என்ன பெயரோ ?"

"விமோசனம். மது விலக்குப் பிரச்சாரத்தை வலியுறுத்திடும் கருத்து தொனிக்கும் படியாய் அப்படி வைத்திருக்கிறேன்".

நடைமுறையில் விமோசனம் ஆகஸ்டு 1929ல் தான் வெளிவந்தது. ஆனால், அதற்கு ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு முன்பே அதைத் தொடங்கும் எண்ணம் ராஜாஜியின் மனத்தில் வேரூன்றி இருந்தது என்பதையே மேற்கண்ட உரையாடல் உணர்த்துகின்றது.

நவசக்தியில் சேருவதற்காகச் சென்னைக்குச் செல்லும்போது (1923) புகைவண்டியில் ராஜாஜியைச் சந்தித்த கல்கி, நவசக்தியில் இருந்து விலகியபோதும் (1928) எதிர்பாராமல் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. அப்போது ராஜாஜி கல்கியிடம்,

''முன்னொரு தடவை சொன்னேனே நினைவிருக்கிறதா ? மதுவிலக்குப் பத்திரிகை ஒன்று ஆசிரமத்தில் தொடங்கப் போகிறேன். மூன்று மாதத்துக்குள் வரமுடியுமா ?'' என்று கேட்டார்.

1928 - ராஜாஜி அரசியலில் வெகுதூரம் சென்றுவிட்ட நேரம். காந்தியடிகளின் வலக்கரமாகிக் காங்கிரசுப் பேரியக் கத்திலும், விடுதலைப் போரிலும் பல பெரும் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருந்த காலம். அந்தப் பணிச்சுமை மிகுந்த காலகட்டத்திலும் கூட, ராஜாஜி விமோசனத்தை மறக்கவில்லை என்பது வியப்புக்குரிய செய்தியாகும். எந்த அளவு மதுவிலக்குச் சிந்தனை ராஜாஜியின் நினைவுகளில் ஆழப்பதிந்திருந்தது என்பதை இது உணர்த்தவல்லது.

"ஆசிரமத்துக்கு நான் போய்ச் சேர்ந்த சில மாத காலத்துக்குப் பிறகு ராஜாஜி ஒருநாள் என்னை அழைத்து 'மதுவிலக்கு வேலையைத் தீவிரமாக ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன். மதுவிலக்குப் பத்திரிகையையும் உடனே ஆரம்பித்துவிட வேண்டியதுதான்' என்றார். அந்த வேலைக்காகவே நான் ஆசிரமத்துக்குச் சென்றேனாதலால், கணக்கு எழுதும், வேலையை இன்னொருவரிடம் ஒப்படைத்து விட்டு, ஆசிரமக் காரியாலயத்தில் இருந்து ராஜாஜியின் சொந்தக் காரியாலயத்திற்கு வேலை பார்ப்பதற்காகச் சென்றேன்.

ஆண்டு பலவாக ராஜாஜியின் கனவிலும் கற்பனையிலும் வளர்ந்து செழித்திருந்த விமோசனம், இதழ் உருவம் பெறுவதற்கான காலம் கனிந்தது.

விமோசனத்தைத் தொடங்குவதற்கு முன்னால் கல்கிக்குச் சில ஐயங்கள் தோன்றின. ராஜாஜி அவற்றை எப்படித் தீர்த்து வைத்து இதழின் வெற்றிக்கு வழிவகுத்தார் என்பதைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு 'பாங்கர் விநாயகராவ்' என்ற நூலின் முகவுரையில் கல்கி விவரித்துள்ளார்.

"பத்திரிகையின் பக்கங்கள் எத்தனை ?"

"நாற்பது பக்கங்கள்".

''நாற்பது பக்கங்களும் மதுவிலக்கு விஷயமேயா ?"

"ஆமாம்".

''நாற்பது பக்கங்களுக்கு மதுவிலக்கு விஷயம் எப்படித் திரட்டுவது ? அப்படித் திரட்டிப் பத்திரிகை கொண்டுவந்தாலும் ஜனங்கள் வாங்குவார்களா ?"

''ஏன் வாங்க மாட்டார்கள் ? வாங்காவிட்டால் வாங்கச் செய்ய வேண்டும்".

"எப்படி வாங்கச் செய்வது ? அடிபிடி கட்டாயம் செய்ய முடியுமா ? படிக்கச் சுவாரஸ்யமாய் இருந்தால்தானே பத்திரிகையை வாங்குவார்கள் ?"


''படிக்கச் சுவாரஸ்யமாய் இருக்கும்படி செய்யலாம். நீ பார்த்துக்கொண்டே இரு. முதல் இதழை நான் தனியாகவே தயாரித்துக் காட்டுகிறேன்".

இவ்வாறு கல்கியின் அவநம்பிக்கை யிலும், ராஜாஜியின் நம்பிக்கையிலுமாக விமோசனம் முதல் இதழ் உருவானது. ஒரு வாரத்தில் ராஜாஜி முதல் இதழின் தயாரிப்பு வேலைகளை முடித்துவிட்டதாகக் கல்கி தெரிவிக்கிறார்.

முதல் இதழ் ஆயிரம் படிகள் அச்சிடப் பட்டது. சந்தாதாரர்களுக்கு அனுப்பியவை போக, எஞ்சியவை காதிபவன்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டன. ஆயிரம் படிகளும் விற்றுத் தீர்ந்தன. விற்பனை, இதழுக்கு இதழ் கூடியது. ஒன்பதாவது, பத்தாவது இதழ்கள் நான்காயிரம் படிகள் அச்சிடப்பட்டன. அக்காலச் சூழலில் ஒரு தனிப்பட்ட செய்தியைப் பற்றிய இதழ் அத்தனைப் படிகள் விற்பனையானது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது.

விமோசனம் வெளிவந்து கொண்டிருந்த நாட்களில் சென்னை அரசாங்கம், மாநிலத்தில் மதுவின் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் குழுக்களையும், பரப்புநர்களையும் ஏற்படுத்தியது. 'டெம்பரன்ஸ் கமிட்டி' என்று அழைக்கப்பட்ட அந்தக் குழுக்கள் பல்வேறு இடங்களில் திறம்படச் செயலாற்றின. அந்தக் குழுக்களின் பணிகளுக்கு, விமோசனம் பெரிதும் பயன் பட்டது. அக்குழுக்களில் சில பத்துப்படிகள், பதினைந்து படிகள் என்று வாங்கி மதுவிலக்குப் பரப்பு நபர்களுக்குக் கொடுத்தன. இந்த வகையிலும் விமோசனத்தின் விற்பனை வளர்ந்தது.

எத்தனை மகத்தான சாதனை புரிந்த இதழாக இருந்தாலும் ஏதாவது ஒரு காரணத்தால் நிற்கவேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க இயலாத இயற்கை. விமோசனமும் ஒரு கட்டத்தில் தன் இயக்கத்தை நிறுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று.




விமோசனம் ஒன்பதாவது இதழ் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது காந்தியடிகளின் புதியதொரு போராட்ட அறிவிப்பு வெளியாகியது. அதுதான் உப்புப் போர். தண்டியில் காந்தியடிகளும், திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) ராஜாஜியும் சட்டத்தை மீறியமையால் கைதானார்கள். போராட்டத்தில் கலந்துகொள்ள விரும்பிய கல்கி, விமோசனத்தை அத்துடன் நிறுத்திவிட முடிவு செய்தார். ஆனால், கல்கி போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்றும், விமோசனத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் ராஜாஜி வற்புறுத்தினார். அப்படி இருந்தும் ராஜாஜி சிறை புகுந்த பிறகு ஒரே ஒரு விமோசனம் இதழ் மட்டுமே வெளிவந்தது. அந்த இதழ் அச்சாகிக் கொண்டிருந்தபோதே, கல்கி ராஜாஜிக்குப் பல கடிதங்கள் எழுதினார்; அவையாவும் விமோசனத்தைப் பத்தாவது இதழோடு நிறுத்திக் கொள்ள அனுமதி வேண்டி எழுதப்பட்ட கடிதங்கள். ஒருவாறு அனுமதி கிடைத்தது. பத்தாவது இதழோடு விமோசனம் நிறுத்தப்பட்டது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜாஜி மதுவிலக்கைப் பற்றிச் சிந்தித்ததைப்போல, சென்ற நூற்றாண்டின் இறுதியில், தி.மானியல் என்பவர் மதுவின் கொடுமைகளை எண்ணிக் கவலை கொண்டார். விளைவு, 'மதுவிலக்குத் தூதன்' என்னும் திங்கள் இதழ் பிறந்தது. தமிழில் தோன்றிய முதல் மதுவிலக்கு இதழாகக் கருதப்படும் இவ்விதழ் 1899இல் பிறந்தது. இவ்விதழின் படிகள் 1900 ஏப்ரலில் (அரசாங்க அறிக்கையின்படி) ஐந்நூறும் 1901 ஏப்ரலில் (அரசாங்க அறிக்கையின்படி) முந்நூறும் விற்பனையாகியுள்ளன. இதழின் விற்பனை, கால ஓட்டத்தில் குறையத் தொடங்கியதை அரசாங்க அறிக்கைகள் காட்டுகின்றன; 1905 ஆம் ஆண்டிலும் இவ்விதழ் வெளிவந்ததை அறிய முடிகிறது. இதழைப் பற்றிய பிற விவரங்கள் எதுவும் அறியுமாறில்லை.

## உருவமும் உள்ளடக்கமும்

விமோசனத்தின் அளவு 20.5x13.5 செ.மீ; பக்கங்கள் நாற்பது; ஆண்டுச் சந்தா, தபாற்கூலி உட்பட ரூ.1. தனிப்பிரதி அணா ஒன்று; தபால் கூலி தனி. அயல்நாட்டுக்குத் தபால்கூலி 0-2-0 சேர்த்து அனுப்ப வேண்டும். இதழின் முகவரி : புதுப்பாளையம், காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு.

> **தனக்குத் தெரிந்ததைத் தெரியும் என்றும், தெரியாததைத் தெரியாதென்றும் கூறுவது எதுவோ - அதுதான் அறிவாகும்.**
>
> **- கன்பூஷியஸ்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுக்ல ஆண்டு ஆவணியில் (ஆகஸ்டு 1929) முதல் இதழ் வெளிவந்தது. கடைசி இதழ் பிரமோதூத ஆண்டுவைகாசியில் (மே 1930) வந்தது. தொகுதி, பகுதி என்று பகுக்கப்பட்டுள்ளது. முதல் தொகுதியே முழுமையாக வரவாய்ப்பில்லாமல் போனது. பத்து இதழ்களே வெளிவந்தன.

பூரண மதுவிலக்குச் சட்டமே இன்றைய தேவை என்பதை 'மதுவிலக்கு ஏன் ?' என்னும் தலைப்பிலான முதல் இதழின் தலையங்கம் வற்புறுத்துகிறது; இதன் மூலம் இதழின் நோக்கமும் உணர்த்தப்படுகிறது.

> **"பாடுபட்டு வயிறு வளர்க்கும் ஜனங்களின் பொருளை நாசமாக்குவன கள்ளும், சாராயமும். தேகத்திற்குக் கள்ளு, சாராயம் ஒரு நன்மையும் செய்யாது. மயக்கத்தை மருந்தென்றும், போதையைப் பரிகாரமென்றும், குடிவெறியைப் பலமென்றும் தைரியமென்றும் நினைப்பது அறியாமை. மது பானத்தினால் சிரமபரிகாரம் அடையலாம் என்று எண்ணுவது, கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பது போலாகும்".**

என்று தொடங்கும் தலையங்கத்தை எழுதியவர் ராஜாஜி. எளியநடையில் எழுதப்பட்டுள்ள இந்தத் தலையங்கம் மூன்று பக்கங்களில் அமைந்துள்ளது.

'கடன் வாங்கின பணத்தை ஆஸ்தியென்று நினைப்பதுபோல' என்னும் அருமையான உவமையைக் கையாண்டுள்ள ராஜாஜி பல்வேறு புள்ளி விவரங்களையும், சான்றுகளையும் எடுத்தாண்டு, மது விலக்கின் தேவையைத் தெளிவாக - மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

இதழின் முதல் பக்கம் பாரதியாரின், 'ஜயபேரிகை கொட்டடா' பாடல் மாற்றம் பெற்று மதுவிலக்குப் பின்னணியில் தரப்பட்டுள்ளது; ஒருவன் மலர்ந்த முகத்துடன் முரசு அறைவது போன்றதொரு படம் வரையப் பட்டுள்ளது. விமோசனத்தின் வருகை தீய கள் அரக்கனை அழிக்கும்; கள்ளினை ஒழிப்பதே விமோசனத்தின் இலட்சியம் என்பதையெல்லாம் உணர்த்தும் விதத்தில் முதல் இதழின் முதல் பக்கத்தில் படமும் பாடலும் அமைந்துள்ளன.

பத்து இதழ்களிலும் முதல் பக்கம் படமும் விளக்கமுமாகவே அமைந்துள்ளது. இரண்டாம் பக்கம் தலையங்கப் பக்கமாகும். ஏதாவது ஒரு தலைப்பில் செய்தி ஒன்றினைப் பற்றிய கருத்துக்கோவை எல்லா இதழ்களிலும் இடம்பெற்றுள்ளது. தலையங்கத்தை அடுத்து, பெரும்பாலும் கதை தரப்பட்டுள்ளது. ஆறு இதழ்களில் கதையும், இரண்டு இதழ்களில் நாடகமும், ஒன்றில் கட்டுரையும், மற்றொன்றில் படமும் பாடலும் இடம்பெற்றுள்ளன. அடுத்து பலவகைப்பட்ட செய்திகள் தொடர்கின்றன. இது விமோசனத்தின் பொதுவான அமைப்பு.

### கருத்துப் படங்கள் (Cartoons)

கருத்துப்படம் விமோசனம் இதழின் தனிச்சிறப்பு வாய்ந்த பகுதி; தனித்த - விரிவான ஆய்வுக்கு உரிய ஒன்று. தன் தனித்தன்மையால் தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் நிலைத்த புகழுக்கு உரியது.

தகுதி கருதியும் தன்மை நோக்கியும் பயன்பாட்டு நிலையிலும் கருத்துப்படம் இக்கட்டுரையில் விரிந்த அளவிலான ஆய்விற்கு உரியதாகிறது. அதனால், அதுபற்றிய செய்திகள் முதன்மையாகவும், இதழின் பிற செய்திகள் சுருங்கிய அளவில் அடுத்த நிலையிலுமாகத் தரப்பட்டுள்ளன.

### தமிழ் இதழ்களில் கருத்துப்படம் - தொடக்க காலம்

விமோசனத்தில் வெளிவந்த கருத்துப் படங்களைப் பற்றி அறியும் முன், தமிழ் இதழியலில் கருத்துப் படங்களின் தோற்றம் பற்றி அறிவது அவசியமாகும்.

தமிழ் இதழியலைப் பொறுத்தவரையில், கருத்துப் படங்கள் வெளியிடும் வழக்கம் பாரதியில் இருந்தே தொடங்குகிறது.

பாரதி, தாம் ஆசிரியராகப் பொறுப் பேற்றிருந்த 'இந்தியா' இதழில் முதன் முதலில் கருத்துப்படங்களை அறிமுகம் செய்தார். சென்னையில் இருந்து 'இந்தியாவை புதுச்சேரிக்கு மாற்றிய பிறகு, அதை விரிவாக்க எண்ணியபோது பாரதி எழுதிய குறிப்பு ஒன்று இங்குக் குறிக்கத் தக்கது :

> "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகை யொன்றுதான் விகட சித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அடுத்த வாரம் முதல் இன்னுமொரு புதிய அலங்காரம் நமது பத்திரிகைக்குச் செய்யக் கருதியிருக்கிறோம். அதாவது தலைப்பக்கத்திலுள்ள ஒரு சித்திரம் மட்டுமேயன்றி, பக்கத்துக்குப் பக்கமுள்ள முக்கியமான வர்த்த மானங்களை விளக்குவதன் பொருட்டு அங்கங்கே சிறிய படங்களும் சித்திரங்களும் போடுவதாக உத்தேசம். தென்னிந்தியாவிலேயே இம்மாதிரி ஏற்பாடு தமிழ், இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம் முதலிய எந்த பாஷைப் பத்திரிகைகளிலும் இதுவரை கிடையாது. நாம் நூதனமாகச் செய்யப்போகிறோம்".

மேற்கண்ட குறிப்பு, தமிழ் இதழியலின் கருத்துப்பட வரலாற்றில் பாரதியின் இடத்தைப் புலப்படுத்தும்.

### தேசபக்தன் - விநோதினி

திரு.வி.க.விற்குப் பிறகு 'தேச பக்த'னின் ஆசிரியராக வ.வே.சு.ஐயர் பொறுப்பேற்றார். ஏறக்குறைய பதின்மூன்று திங்கள்கள் (31.7.1920 - 28.8.1921) அதன் ஆசிரியராக இருந்த அவர், வாரம் ஒருமுறை

கருத்துப்படம் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அந்நாளில் பெரும்புகழோடு விளங்கிய கருத்துப்பட ஓவியர் (Cartoonist) கே.ஆர்.சர்மா, 'விநோதினி' என்ற பெயரில் இதழொன்றை நடத்தினார். டி.என்.நடராசப் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த அந்த இதழில் கருத்துப்படங்கள் மிகுதியாக இடம்பெற்றன.

## தமிழ்நாடு

டாக்டர் பா.வரதராசுலு நாயுடு, தம்முடைய தமிழ்நாடு வார, நாள் இதழ்களில் கருத்துப் படங்களைத் தொடர்ந்து வெளியிட்டு இதழின் ஓர் அங்கமாக அதனைப் பிறர் கருதும் நிலையை உருவாக்கினார்.

பலரையும் கவரும் விதத்தில் கருத்துப் படங்கள் வெளியிட்டவரான பா.வரதராசுலு கருத்துப்படங்களின் காதலராகக் குறிக்கப்படுகிறார்.

இதழ்களில் கருத்துப் படங்கள் இடம் பெறவில்லை. இரண்டாவது கட்ட (11.4.1931-8.1.1932) இதழ்களிலேயே கருத்துப்படங்களைக் காண முடிகிறது.

ராஜாஜியின் விமோசனம் இதழ் நடைபெற்ற காலத்தும் (1929-1930) அதற்கு முன்னும் தமிழ்இதழியலில் கருத்துப்படங்கள் இடம் பெற்ற வரலாற்றை மேற்குறித்த செய்திகளிலிருந்து அறியலாம். இதைத் தொகுப்பின், பின்வருமாறு அமையும் :

தமிழ் இதழியலில், கருத்துப்படம் என்னும் பகுதியைத் தொடங்கி வைத்தவர் பாரதி. பாரதியின் இந்தியா, விஜயா, சூரியோதயம் ஆகிய இதழ்களைத் தவிர, பாரதியின் சமகாலத்தும் அதைத் தொடர்ந்தும் எந்த இதழும் கருத்துப் படங்களில் ஆர்வம் காட்டவில்லை.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்குப் பிறகு வ.வே.சு.ஐயர் தேச பக்தனிலும், கே.ஆர்.சர்மா விநோதினியிலும், பா.வரதராசுலு தமிழ்நாடு இதழிலும் கருத்துப் படங்களுக்கு முதன்மை தந்தனர். அவர்களுக்குப் பிறகு ராஜாஜியின் பார்வையில் கருத்துப்படம் புத்துரு பெற்றது.

**முள் நிறைந்த செடியில்தான் அழகிய ரோஜாவானது மலர்கிறது. அதேபோல் - சொல்லொணாத் துயரங்களும், தாளமுடியாத எதிர்ப்புகளுக்கும் இடையில்தான் உண்மை பூத்து மலரும்!**

**- மகாத்மா காந்தியடிகள்**

## பிற இதழ்கள்

எஸ்.எஸ். வாசன் பொறுப்பில் ஆனந்தவிகடன் பிப்ரவரி 1928 முதல் வெளிவந்தது. ஆனந்தவிகடன் மூலமாகத் தமிழ் இதழியலில் கருத்துப்படம் புத்தெழுச்சி பெற்றது. என்றாலும், 1928,1929 ஆகிய ஆண்டுகளில் அதில் கருத்துப்படங்கள் இடம் பெறவில்லை.

சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடர்ந்து வெளியான சுதந்திரச்சங்கு (சனவரி 1930) என்ற வாரம் மும்முறைக் காலணா இதழும் கருத்துப்படங்களை வெளியிடுவதில் பேரார்வம் கொண்டு செயல்பட்டது. இடைவெளிகளுக்கு இடையே நான்கு கால கட்டங்களில் வெளிவந்தது. சுதந்திரச்சங்கு, முதல் காலகட்டத்து (26.1.1930 - 12.5.1930)

## ராஜாஜியின் கருத்துப் படங்கள்

ராஜாஜிக்கு முன் கருத்துப்படங்கள் அரசியல் நிகழ்வுகளைச் சுட்டுவதற்கே பெரிதும் பயன்படுத்தப்பட்டன. ராஜாஜியின் பார்வை வேறுவிதமாக அமைந்தது. சமுதாயத்தை அழித்துக் கொண்டிருக்கும் மதுவை அறவே ஒழிக்க வேண்டும் என்னும் நோக்கத்தோடு தொடங்கப்பட்ட இதழானதால், விமோசனம் வெளியிட்ட கருத்துப் படங்களும் அந்த நோக்கிலேயே அமைந்தன. மதுவின் பிடியிலிருந்து ஏழைமக்களை விடுவிக்க ஒரு சமுதாயப் புரட்சியை மௌனமாக நிகழ்த்திக் கொண்டிருந்த ராஜாஜி தம் மனம், மொழி, மெய்களால் ஒருமுகப்பட்டு உருவாக்கிய இதழ் விமோசனம். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஒவ்வொரு செய்தியையும் எண்ணி எண்ணி, பார்த்துப் பார்த்து உருவாக்கிய ராஜாஜி கருத்துப்படங்களிலும் அதே அளவு ஈடுபாட்டைக் காட்டினார்.

இன்ன படம், இன்ன கருத்தை, இன்னவாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதையெல்லாம் ராஜாஜியே முடிவு செய்வார். விமோசனத்தின் கருத்துப்பட ஓவியர், ராஜாஜியின் கருத்துக்களுக்கு வடிவம் தருவார். நலக்குறைவினால் இளம் வயதிலேயே அவர் காலமானார். ஐந்தாம் இதழ் வரையில் அவர் கைவண்ணத்தைக் காணமுடிகிறது. எஞ்சிய ஐந்து இதழ்களில் உள்ள படங்களை வரைந்து கொடுத்தவர் யார் என்பதை அறியமுடியவில்லை. ஆனால், இரு படங்களின் கீழ் (இதழ் ஆறு, பக்.231-232; இதழ் பத்து, ப.389) 'சர்மா பிரதர்ஸ்' என்ற குறிப்பு உள்ளது. அந்த இரண்டு படங்கள் மட்டும் அவரால் வரையப்பட்டனவா அல்லது பின் ஐந்து இதழ்களின் கருத்துப்படங்களும் பிறபடங்களும் முழுமையாக அவரால் தீட்டப்பட்டனவா என்பது அறியுமாறு இல்லை.

விமோசனம் பத்து இதழ்களிலும் மொத்தம் பதினேழு கருத்துப்படங்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தவை ஐந்து, 'பார்த்தாயா தம்பி' (இதழ் ஒன்று, பக்.27) 'மிதமாகக் குடிப்பவன் கதி' (இதழ் இரண்டு, ப.64), 'வேண்டாம்' (இதழ் மூன்று, ப.81) 'யானை(யின்) வளர்ச்சி' (இதழ் ஆறு, பக்.231-232) 'மிதக்குடி' (இதழ் பத்து, ப.389).

## கருத்துப் படம் - ஒன்று

'பார்த்தாயா தம்பி' என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கருத்துப்படம் விமோசனத்தில் வெளிவந்துள்ள கருத்துப் படங்களில் முதன்மையானதாகக் கொள்ளத் தக்கது.

'வீட்டு விலங்குகளெல்லாம் ஏற்றுக் கொள்ளாத சாராயத்தை விலை கொடுத்து வாங்கிப் பகுத்தறிவுள்ள மனிதன் குடிக்கிறானே' என்று கேலி செய்திருந்தது அப்படம். அது மிகவும் ரசிக்கும்படியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கருத்துப் படம்-இரண்டு

'மிதமாகக் குடிப்பவன் கதி' என்ற தலைப்போடு அமைந்த இந்தக் கருத்துப்படம், ராஜாஜியின் சிந்தனை ஆற்றலையும் எதையும் கலை உணர்வோடு வெளிப் படுத்தும் இயல்பையும் உணர்த்துகிறது. நான் அளவாகத்தான் குடிக்கிறேன்; அதனால் 'எனக்குத் தீமை ஒன்றும் வாராது' என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்பவர் எண்ணிக்கை அதிகம். அத்தகையவர் இந்தக் கருத்துப்படத்தைப் பார்த்தால் மிதமாக ஆரம்பிப்பது எதில் போய் முடியும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். படம் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.

முதல் வருடம், இரண்டாம் வருடம், மூன்றாம் வருடம், நான்காம் வருடம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குடி, முதலையாக உருவகிக்கப்பட்டுள்ளது. முதலைக் குட்டியின் வளர்ச்சியைப் போல், மிதக்குடியும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து, பெருங்குடியாகி, குடிப்பவனை விழுங்கும் நிலையைக் கருத்துப்படம் நயம்பட தெரிவிக்கின்றது.

## கருத்துப் படம்-மூன்று

மிகவும் உணர்வுபூர்வமாக உருவாக்கப் பட்டுள்ளது இது. ஒரு மனிதனின் முன்னே கள் நிரப்பப்பட்ட சீசா நீட்டப்பட்டுகிறது. அந்த மனிதன் அதை நோக்கி முன்னேறுகிறான். மனைவியும், சின்னஞ்சிறு குழந்தைகளும் அவனைப் பின்நோக்கி இழுக்கின்றன. வருமானம் முழுவதையும் குடியில் தொலைத்துவிட்டு, மனைவி மக்களை நடுத்தெருவில் நிறுத்தும் ஆண்களைத் தடுத்து நிறுத்தி, சிந்திக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ள இந்தக் கருத்துப் படம் தனித்தன்மை வாய்ந்தது.

படத்தின் கீழ் இடம்பெற்றுள்ள விளக்கம் இதுதான்: ''நீ கள்ளுக் கடைக்குப் போகிறாயா? போகும்போது மனைவி மக்களை நினைத்துக் கொள். அவர்கள் உன்னை வேண்டாம், வேண்டாம் என்று பின்னுக்கு இழுக்கிறார்கள். கடையில் செலவு செய்யும் காசை அவர்களிடம் கொடுத்தால் எவ்வளவு சுகம் உண்டாகும்; யோசித்துப் பார்; அவர்களை ஏமாற்றாதே".

## கருத்துப் படம்-நான்கு

'யானை வளர்ச்சி' என்னும் தலைப்பில் அமைந்த கருத்துப் படம் அடுத்து குறிக்கத் தக்கது. மூன்று நிலைகளாக யானையின் வளர்ச்சி காட்டப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் எப்படி வளர்ந்துகொண்டே போகிறது என்பதையும், அதன் அசுர வளர்ச்சியின் விளைவாகக் குடிப்பழக்கம் உள்ளவர்கள் கதி என்னவாகிறது என்பதையும் இது விளக்குகிறது. ஒவ்வொரு பகுதியின் கீழும் ராஜாஜியால் தரப்பட்டுள்ள வாசகம் அறியத்தக்கது.

### பகுதி - 1

சின்னஞ்சிறு யானைக்குட்டி, குழந்தைகள் கூடத் தொட்டு விளையாடலாம். (1860 ஆம் வருடத்தில் இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் ஒரு கோடி ரூபாய்தான்).

### பகுதி - 2

குட்டி வளர்ந்து இளம் யானையாயிற்று. ஆனாலும், பாகனை மீறி இது என்ன செய்துவிடும்? கையில் அங்குசம் இருக்க அச்சம் என்ன? (1900 ஆம் வருடத்தில் கலால் வருமானம் ஆறுகோடி ஆயிற்று. ஆனாலும், ஏழை இந்தியர்கள் தாங்க முடியாத சுமையன்று.)

### பகுதி - 3

ஐயோ! இளம் யானை இராட்சத யானையாய் வளர்ந்து கட்டுமீறிப் போய்விட்டது. யானைப்பாகன் பிழைத்தல் கடவுள் புண்ணியந்தான். (1929 ஆம் ஆண்டில் கலால் வருமானம் இருபத்து நான்கு கோடி. ஏழைக் குடியானவர்கள் பாரந்தாங்காது நசுக்கப்படுகிறார்கள்.)

அங்கதப் போக்கில் கருத்துப் படம் அமைக்கப்பட்டுள்ளது. தொடக்கத்திலேயே தடுக்கப்படாவிட்டால் விளைவு கடுமை யானதாக இருக்கும் என்பதைப் படிப் படியாகச் சுட்டி எளிதாக விளங்கிக்கொள்ள வகை செய்கிறது படம்.

## கருத்துப் படம்-ஐந்து

இந்தப் படத்தில் ஒரு மனிதன் படகில் மகிழ்ச்சியாகச் செல்லுகிறான். அவன் மிதமாகக் குடிப்பவன். குறைந்த அளவுதானே என்ற அலட்சியம், 'பெருங்குடி' என்னும் நீர்வீழ்ச்சியில் தள்ளி, 'நாசம்' என்னும் முடிவை நோக்கி அவனை இட்டுச் செல்லுகிறது. கருத்துப் படத்தின் கீழே தரப்பட்டுள்ள விளக்கம், மிதக்குடியனின் வீழ்ச்சியைப் பின்வருமாறு புலப்படுத்துகிறது.

"இதோ படகில் அமர்ந்து கவலை இன்றிச் செல்லும் மனிதனைப் பாருங்கள். அடுத்த கணத்திலே அவன் இந்தப் பெரிய நீர்வீழ்ச்சியில் அகப்பட்டு அதலபாதாளத்தில் வீழ்ந்து நாசமடையப் போகிறான். எனினும், அவன் அப்பேரபாயத்தை உணரவில்லை. மிதமாகக் குடிக்க ஆரம்பிக்கிறவர்கள் கதி இதுவேயாகும்."


## விமோசனக் கருத்துப் படங்கள் - தனித்தன்மைகள்

பொதுவாக, கருத்துப்படங்கள் உயர்ந்த முறையில் அமைந்திருப்பதால் படிப்பவர்களால் ரசிக்கப்பட்டு, பாராட்டப்படுவது வழக்கம். மிகச் சிறப்பானவை என்று கருதப்படும் சில, பிற இதழ்களில் எடுத்தாளப்படுவதும் உண்டு. இதுவே பொதுவான நிலை. விமோசனத்தில் வெளிவந்த கருத்துப் படங்கள் முற்றிலும் வேறான தன்மையன. அவை, குடியின் தீமையைப் பாமரரும் உணர வேண்டும்; உணர்ந்து தெளியவேண்டும்; தெளிந்து திருந்தவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் வரையப் பட்டவை. அதனால் அந்தக் கருத்துப் படங்கள் பன்முகநோக்கில் பயன்பாடுடை யனவாக அமைந்தன.

விமோசனக் கருத்துப் படங்களின் பயன்பாட்டின் ஒரு கோணத்தை, 'பாங்கர் விநாயகராவ்' என்னும் நூலின் முகவுரையில் விரிவாகக் கூறிச் செல்கிறார் கல்கி. அதில் குறிப்பிடத்தக்க சில பகுதிகள் இங்கு அறியத்தக்கன.

> காந்தி ஆசிரமத் தொண்டர்கள் தீவிரமான மதுவிலக்குப் பிரசாரம் செய்தார்கள். விமோசனத்தில் வெளியான படங்கள் பிரசாரத்துக்கு மிக்க உதவியா யிருந்தன. மேற்படி படங்களைப் பெரிதாக எழுதச் செய்து துணியில் ஒட்டி வைத்திருந்தோம். இந்தப் படங்களையும் எடுத்துக் கொண்டு ஆசிரமத்தின் பெரிய கட்டை வண்டியில் ஏறி வாரத்துக்கு இரண்டு நாள் கிராமப் பிரசாரத்துக்குப் போவோம்.

அடுத்த இதழில் முடியும்



# பரிசுப் பொருட்கள் : முதலமைச்சரின் நடைமுறை!
# பட்டயக் கணக்கர் பயிலகப் பொன்விழாவில் கலைஞர் விளக்கம்

"பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு நான் உரையாற்றியிருக்கிறேன். பல்வேறு பொருள்களில் பேசியிருக்கிறேன். தரப்பட்டுள்ள பல்வேறு தலைப்புகளில், கல்லூரிகளில், உயர்நிலைப்பள்ளிகளில், மன்றங்களில் சொற்பொழிவாற்றியிருக்கிறேன். கவிதை கூட பாடியிருக்கிறேன். இன்று காலையிலே நண்பர்களிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தேன்— இன்றைக்குத்தான் எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசப்போகிறேன் என்று! ஏனென்றால், எந்தவொரு விஷயத்தைப் பற்றி மிக அதிகமாகத் தெரிந்தவர்கள் இங்கே நிரம்பியிருக்கிறீர்களோ உங்கள் மத்தியிலே நான் எனக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவது உள்ளபடியே நானே ஆச்சரியப் பட்டுக் கொள்ளக் கூடிய ஒரு சம்பவம் தான்.

**ஒழுங்காக வருமான செலுத்தி வருகிறேன்**

நான் உங்களோடு பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்ற வாய்ப்பைப் பெறாவிட்டாலும் உங்களில் ஒரு சிலரோடு ஐம்பதாண்டு காலமாக ஒட்டி உறவாடி வருகின்றேன். அப்படியென்றால், ஐம்பதாண்டு காலமாக நான் ஒழுங்காக வருமான வரி செலுத்தி வருகின்றேன் என்று பொருள். ஒழுங்காக வருமான வரி செலுத்துமாறு என்னை உங்களில் சிலர் பழக்கி வைத்திருக்கின்றீர்கள்.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பே நான் கலையுலகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தபோது சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்ஸில் கதை வசனம் எழுதுகின்ற பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில் அப்போது எனக்கு மாதந்தோறும் தரப்பட்ட அந்த ஊதியத்தில் வருமான வரியைப் பிடித்தம் செய்து கொண்டுதான் கொடுப்பார்கள்.

எனவே, வரி செலுத்த வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை. அவர்களே வரியை எடுத்துக் கொண்டு கொடுப்பார்கள். இப்படி தொடங்கியது தான் வருமான வரி செலுத்துகின்ற வழக்கம் என்பதை முதலில் உங்களிடத்திலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**வரி விதிப்பு முறையில் கழக அரசின் சீரமைப்பு நடவடிக்கைகள்**

வணிக வரி கட்டாய தணிக்கை முறை மற்றும் கூட்டுறவு சங்கங்களின் தணிக்கை முறை தனியாராகிய உங்களிடம் கொடுக்கும் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கைகள் வைத்துள்ளீர்கள். இதுபற்றி நிச்சயமாக அதிகாரிகளிடம் பேசப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே உரையாற்றியவர்கள் தெரிவித்ததைப் போல, ஏற்கெனவே சென்ற இரண்டு ஆண்டுகளில் வரி விதிப்பு முறைகளில் பல சீரமைப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. நாணயமாக வரி செலுத்துவோருக்கு நடைமுறைகளை எளிதாக்கி வரி விதிப்பு அமைப்பின் கடுமையைக் குறைத்திருக்கிறோம். இதன் ஒரு தொடர் நடவடிக்கையாகத்தான்

இங்கே சுட்டிக் காட்டியதைப் போல், பத்து இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டும், இருபது இலட்ச ரூபாய்க்கு உட்பட்டும் மொத்த விற்பனை தொகையுடைய வியாபாரிகள் தமது விருப்பத்தின் பேரில் பதிவு பெற்ற பட்டயக் கணக்கர் (சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்) ஒருவரால் தம்முடைய கணக்குகளைத் தணிக்கை செய்து சான்றளிக்கப்பட்ட கணக்கு விவரங்களின் நகல் ஒன்றை அந்த வணிகர் வரி விதிப்பு அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும். அத்தகைய நேர்வுகளில் வரி விதிப்பு அலுவலர் அந்த வணிகர்களின் வரி விதிப்பு கணக்குகளைக் காட்டும்படி கேட்காமலேயே பட்டயக் கணக்கர் அளித்த அறிக்கையினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்கேற்ப, தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு 1.4.98 முதல் அது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி பட்டயக் கணக்கர்களுக்கு கூடுதல் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தனைக் கட்டாயமாக ஆக்கவேண்டுமென்றும், மின்வாரியம் போன்ற பல்வேறு துறைகளில் வாய்ப்புகளை அளிக்க வேண்டுமென்றும் நீங்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். அது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். பரிசீலிக்கப்படும் என்பது ஏதோ அரசாங்க பாஷையல்ல. அப்படிக் கருதிக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் என்னை உங்களுக்குத் தெரியும். நான் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தாலும் கூட, தமிழகத்தை ஆளுகின்ற தி.மு.கழகத்தின் தலைவன். ஒரு ஒற்றுமையை நீங்கள் பார்க்கலாம்.

1949 - ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கணக்கர் நிறுவனம் பொன் விழாவைக் கொண்டாடுகின்றது. 49 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் இப்பொழுது பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றது. எனவே இருவரும் - என்னுடைய தலைமையிலே உள்ள கழகத்திற்கும் பொன்விழா, உங்கள் அமைப்புக்கும் பொன்விழா. என்னை அழைத்திருக்கிறீர்களே, எனக்குப் பொன்விழா அல்ல - பவளவிழா.

முதலிலே ஒன்றை நான் குறிப்பிட்டேன். நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல. கழக அமைப்பிலே கூட, வேறு எந்தக் கட்சியில் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. தி.மு.கழகத்தினுடைய பொதுக்குழுவில், தணிக்கைக் குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்படுகிறது. பொதுக் குழு உறுப்பினர்கள் வாக்களித்து தணிக்கைக் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், கழகத்தின் வரவு, செலவு கணக்குகளைப் பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் கணக்குகளைச் சரிபார்ப்பதற்குத் தலைமைக் கழகத்திலேயே இரண்டு பட்டய கணக்கர்களை நியமித்திருக்கிறோம். அவர்களும் அந்தக் கணக்குகளைச் சரி பார்க்கிறார்கள்.

இதற்கெல்லாம் மேலாக யோசனைகளைக் கேட்க நம்முடைய நண்பர் ஆடிட்டர் ஜெகதீசன் அவர்களும் எங்களுக்கு அரும் துணையாக இருந்து வருகிறார். எனவே தணிக்கை விஷயத்திலே நாங்கள் மிகத் தாராளமாக இருக்கிறோம் என்பதையும், தணிக்கைக்கு உட்பட்டேதான் எங்கள் கட்சியின் கணக்குகளே கூட வைக்கப்படுகின்றன என்பதையும் இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**பரிசுப் பொருள்கள் நடைமுறை**

தணிக்கை அதிகாரிகளின் உதவி வரி செலுத்துவோருக்கு எந்த அளவிற்கு தேவைப்படுகிறது என்பதை என்னை விட நீங்கள் மிக அதிகமாக அறிந்திருக்கிறீர்கள். எனவே கொல்லர் தெருவிலே ஊசி விற்பதைப் போல இங்கே நான் அதனை விளக்க விரும்பவில்லை. உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், இன்றைக்கு நான் ஒரு முதலமைச்சர். ஒரு கட்சியினுடைய தலைவன்.

இந்த இரண்டு நிலைகளிலும் பரிசுப் பொருள்கள் எனக்குச் சில இடங்களிலே வழங்கப்படுகின்றன. அரசு விழாக்களில் பரிசுப் பொருள்கள் - நினைவுச் சின்னங்கள் - நினைவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. என்னுடைய கட்சி சார்பில் நடத்தப்படுகின்ற விழாக்களில் நினைவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக இது பவள விழா ஆண்டு என்ற காரணத்தினால் நான் கலந்து கொள்கின்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் கழக அமைப்புகளிலே உள்ளவர்கள் பல இடங்களிலே உள்ள கிளைகள் ஒன்றியங்களின் சார்பாக வசூலித்து அந்த நிதியிலிருந்து நினைவுப் பொருட்களை வழங்குகிறார்கள்.

அவைகளை எல்லாம் நான் எனக்கென்று வைத்துக் கொள்வதில்லை. அவைகளை கட்சி விழாவிலே தரப்படுவதை கட்சிக்கு ஒப்படைத்து விடுகிறேன். அரசு விழாக்களிலே வழங்குவதை, அரசின் தலைமைச் செயலகத்திலே

**நாட்டில் நல்ல அரசியல் மரபை உண்டாக்கவும், உண்மை ஜனநாயகம் மலரவும் எல்லா அரசியல் கட்சியினரும் பாடுபட வேண்டும்.**

**- அறிஞர் அண்ணா**

**முதல் பக்க அட்டை...**

முன்னாள் முதல்வர் பி.எஸ்.குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா நிகழ்ச்சி

**கடைசிப்பக்க அட்டை....**

மக்கள் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்.**

தூர்வாரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் பார்வையிடுதல்.

இன்றைக்குச் சென்று பார்த்தாலும் நீங்கள் காணலாம். அங்கே கொண்டுபோய் வைத்துவிடுகின்றேன். இதுதான் நான் அனுசரித்து வருகின்ற வழக்கமான நிலை.

அந்த நிலையை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர்கள் நீங்களேதான். நானே கூடத் தெரியாமல், அதை வைத்துக் கொண்டிருந்தால் சில நேரங்களில் ஆபத்துக்கு ஆளாகலாம். அப்படி ஆபத்துக்கு ஆளாகும்போது நான் ஆடிட்டர் சொல்லைக் கேட்காத அந்தக் குற்றத்திற்காக வருந்த நேரிடும். ஆடிட்டர் சொன்னால் என்ன, யார் சொன்னால் என்ன? நான் வைத்துக்கொண்டுதான் இருப்பேன், அதைப்பற்றிக் கவலைப்படமாட்டேன் என்று சொல்கின்றவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. நீங்களும் கவலைப்படமாட்டீர்கள்.

**எனது கவலை**

ஆனால் நான் என்னைப் பற்றியும், என்னுடைய ஒழுக்கத்தைப் பற்றியும்-சமுதாயத்திற்கு ஏற்பட்டுத் தீரவேண்டுமென்று விரும்புகின்ற அந்த ஒழுக்கத்தைப் பற்றியும் மெத்தவும் கவலைப்படுகின்றவன் என்ற காரணத்தினாலேதான் அண்மையில் கூட - என்னுடைய பவளவிழா நிகழ்ச்சியில் பல பேர் அங்கே வைக்கப்பட்ட உண்டியலில் நிதி செலுத்தினார்கள். அவைகளையெல்லாம் மாலை நேரத்திலே கட்சியினுடைய தணிக்கைக் குழு உறுப்பினர்களையும், தணிக்கையாளர்கள் இருவரையும் வைத்துக்கொண்டு அவைகளை எண்ணி, ஏறத்தாழ 11 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை உடனடியாக அரசாங்க கஜானாவிலே செலுத்தி அது பத்திரிகையிலே வெளிவந்திருப்பது உங்களுக்குத் தெரியும்.

அதைப் போலவே வேறு சில பொருள்கள் கடந்த சில வாரங்களாகப் பவள விழா என்கின்ற பெயரால் எனக்குத் தரப்பட்டுள்ளன. அவைகள்ளையெல்லாம் கூட ஆடிட்டர் ஜெகதீசன் யோசனையின் பேரில் அவைகளையும் நான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக் கழகத்திற்கு ஒப்படைக்க இருக்கிறேன் என்பதையும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே கூறுவது சாலவும் பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

**எந்த பயமுமில்லை**

எனவே, வருமான வரி என்பது ஏதோ ஒரு பயமுறுத்துகின்ற பயங்கரமான ஒன்றல்ல. நாம் ஒழுங்காக நடந்து கொண்டால், வருமான வரித்துறையால் எந்தப் பயமும் கிடையாது. அதை ஏமாற்ற நினைத்தால்தான் சில நேரங்களிலே நமக்கு ஆபத்து, ஆடிட்டர்களுடைய துணையும் அதிகமாக தேவைப்படும்.

ஒழுங்காக வரி செலுத்துபவர்களுக்கு ஆடிட்டர் துணை வேண்டாமா என்றால் நிச்சயமாக அவர்களுக்கும் வேண்டும். உடல் நலத்தோடு இருப்பவர்களுக்குக் கூட சித்த வைத்திய மூலிகைகள் பயன்படுவதைப் போல ஆடிட்டர்களுடைய யோசனை பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையிலே ஆடிட்டர்கள் எனப்படும் தணிக்கையாளர்களுடைய பெரும் உதவி வருமானவரி செலுத்தக்கூடிய அளவிற்கு வருவாய் ஈட்டுகின்ற ஒவ்வொருவருக்கும் தேவை.

மூன்று பேர்களிடத்தில் - பொய் சொல்லக்கூடாது. வைத்தியரிடத்திலே பொய் சொல்லக்கூடாது. வக்கீலிடத்திலே பொய் சொல்லக்கூடாது. மூன்றாவது ஆடிட்டர் இடத்திலே பொய் சொல்லக்கூடாது. உண்மையைச் சொன்னால்தான் ஆடிட்டர் கூட அவரைக் காப்பற்ற முடியும். அப்படிப்பட்ட வைத்தியர், வழக்கறிஞர், ஆடிட்டர் என்ற இந்த மூன்று பேரைக் கொண்ட இந்தப் பெரும் பட்டியலிலே இணைத்துக் கொண்டிருக்கின்ற இந்த நிறுவனம் நிறுவனத்திலே உள்ள உறுப்பினர்கள் இன்றைக்குப் பொன்விழாவைக் கொண்டாடுகின்றீர்கள்.

அந்தத் தொடக்க விழாவை இந்தப் பிராந்தியத்திலே என்னைக் கொண்டு நடத்தியிருக்கிறீர்கள். தொடர்ந்து இந்த விழா நிகழ்ச்சிகள் நடைபெற விருப்பதாக அறிகிறேன். இங்கே வரவேற்புரையாற்றிய விஷ்ணுபரத் குறிப்பிட்டார்-விரைவில் இந்தப் பொன்விழா பல இடங்களில் நடைபெறும் என்றார். பிரதமர் அவர்களே கூட இந்தப்பொன்விழாவின் துவக்க நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு தெரிவித்துள்ள கருத்துக்கள் என்றென்றும் நினைவில் நிற்கக்கூடிய கருத்துக்கள்.

இந்த பொன்விழாக் கொண்டாடுகின்ற இந்த அமைப்பு தொடர்ந்து மணிவிழா, பவள விழா, முத்து விழா, நூற்றாண்டு விழா, அதற்குப் பிறகு பல நூற்றாண்டு விழாக்களைக் கொண்டாட வேண்டும்.

- இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.7.98ல் நடைபெற்ற விழாவில் உரையாற்றினார்.

★ ★ ★

அன்றும் வழக்கம்போல் தினைப்புனத்தைக் காவல் புரியத் தன் தோழியுடன் சென்றாள் தலைவி.

தினைப்புனத்தின் நடுவே அமைக்கப்பட்ட பரண்மீது ஏறிநின்று கவண்வீசி காக்கை, குருவிகளை விரட்டிக் கொண்டிருந்தாள். அவ்வழியாக ஓர் இளைஞன் சென்றுகொண்டிருந்தான். அவன் அணிந்திருக்கும் ஆடை அணிகலன்கள் செல்வக்குடியில் பிறந்தவன் என்பதை எடுத்துக் காட்டின.

தலைவி வீசிய கவண் கல் ஒன்று, அந்த இளைஞன் நெற்றியில் பட்டது. 'ஆங்...' என்ற வேதனைக் குரல் எழுப்பி அப்படியே அமர்ந்துவிட்டான் அவன். அந்த வேதனைக் குரல் தலைவியின் காதில் விழுந்து பார்வையை அவன் பக்கம் திருப்பியது.

தான் வீசிய கவண் கல்தான் அவன் நெற்றியில் பட்டிருக்கும் என்பதைப் புரிந்துகொண்டாள். மென்மையான அவள் உள்ளம் துடித்தது. அடுத்த வினாடியே அவனிருக்கும் இடத்திற்கு விரைந்து சென்றாள். தலைவி விரைந்து செல்வதைக் கண்ட தோழி ஒன்றும் புரியாமல் அவளை அழைத்த வண்ணம் அவள் பின் தானும் ஓடினாள்.

தலைவன், தன்னை நோக்கி ஓர் அழகு மங்கை ஓடி வருவதைக் கண்டு, இது அவள் செயல்தான் எனப் புரிந்துகொண்டான். அவளுக்குச் சரியான தண்டனை கொடுக்க முடிவு செய்தான். மேலும் பலத்த வேதனைக் குரல் எழுப்பி நடிக்கத் தொடங்கினான்.

அவனருகில் வந்த தலைவி, நெற்றியில் குருதி சிந்துவதைப் பார்த்ததும் உள்ளம் நடுங்கிப் போனாள். முந்தானையில் ஒரு பகுதி கிழித்துக் குருதியைத் துடைத்துவிட்டாள். பக்கத்திலிருந்த மூலிகைச் செடியிலிருந்து சில தழைகளைப் பறித்துவந்து, அதைக் கசக்கி அடிபட்ட நெற்றியில் வைத்து ஒரு கட்டுப் போட்டுவிட்டாள். இத்தனையும் பரபரப்போடு செய்து முடித்துவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

அவள் செயலைக் கண்டு தன் வேதனையை மறந்தான் தலைவன். இல்லை... இல்லை;தன்னையே மறந்தான். அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்த வண்ணம் இருந்த அவனைக் கண்டு, "இப்போது எங்கே வலிக்கிறது? சொல்லுங்கள்" என்றாள் தலைவி.

அது அவன் காதில் விழுந்தால்தானே! மீண்டும் தனது மென்கையால் மலை போன்ற அவனது தோளைப் பற்றிக் குலுக்கிவிட்டு "உங்களைத்தான்...வலிக்கிறதா சொல்லுங்கள்?" என்றாள்.

தலைவன் எழுந்து நின்றான். "நெற்றியில் வலி இல்லை. ஆனால்..." சொல்லத் தயங்கினான்.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள் - சொல்லுங்கள்?" தலைவி கேட்டாள்.

"நெஞ்சில் வலிக்கிறது!" ஏக்கத்தோடு அவளையே நோக்கினான் தலைவன்.

அதற்கும் அவளிடத்தில் மருந்து இல்லாமல் இல்லை. கனியிதழின் கடையில் புன்னகையைத் தவழவிட்டாள். மூங்கிலன்ன அவளது மென்தோளைத் தனது வலிமை பொருந்திய கையால் பற்றினான், தலைவன்.

எங்கே மென்தோள் உடைந்துவிடுமோ என்று அச்சமடைந்த தலைவி, அவன் மார்மீதே சாய்ந்துவிட்டாள். அந்தக் காதல் காட்சியைக் கண்டுவிட்ட தோழி மறைவிடம் சென்றுவிட்டாள், நாணத்தோடு!

அவர்தம் காதல் வளர்ந்தது.

பகலிலும் இரவிலும் சந்தித்து இன்புற்றனர்.

அவர்களுக்குத் துணையாய் இருந்தாள் தோழி.

நாளடைவில் தலைவியின் நடவடிக்கைகளில் மாற்றம் கண்ட அவள் அன்னை வெளியே போகவொட்டாமல் தடுத்துவிட்டாள்.

தலைவன் வந்து ஏமாற்றத்துடன் திரும்பலானான். பிரிவைத் தாங்கமாட்டாத தலைவி தோழியிடம் தன்னை மணம் செய்து கொள்ளும்படி தலைவனைக் கண்டு சொல்லும்படி வேண்டினாள்.

தோழி தலைவனைக் கண்டு, "இனி தலைவியைச் சந்திப்பது அரிது. உடனடியாக அவளை மணம் செய்து கொள்ளுங்கள். காலம் நீடித்தால் அவள் உயிர் நிலைக்காது" என்றாள்.





**வைரம் குப்பையிலே கிடந்தாலும், எடுத்துக் கொஞ்சம் தூசியைத் தட்டினால் மீண்டும் ஒளிவிடும். ஆனால், இழிநிலையில் மங்கிப்போன பித்தளைகளை யாரும் தீண்டமாட்டார்கள்!**

**- கலைஞர்**

தலைவனும் முறையாகப் பெண் கேட்க தலைவி வீட்டிற்கு மறுநாளே வருவதாகக் கூறிச் சென்றான். இந்தச் செய்தியைத் தலைவிக்குத் தெரியப்படுத்தினாள் தோழி.

அடுத்த நாள் விடிந்தது.

இரவெல்லாம் இன்பநினைவில் உறக்கமின்றிக் கழித்த தலைவி, பொழுது விடிவதற்குள் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து பொன்நகைகள் பூட்டி, புதிய பொலிவோடு விளங்கினாள். வீட்டிற்கும் வாசலுக்கும் நடை பயின்றுகொண்டிருந்தாள். தோழி வந்தாள். அவளிடம், "தலைவன் இன்னும் வரவில்லையடி! நிச்சயமாக வருவாரா?" என்று ஏக்கமுடன் வினவினாள் தலைவி.

"என்ன அவசரமடி உனக்கு. அவர்மட்டும் வருவதாக இருந்தால் எப்போதோ வந்திருப்பார். உடன் பெற்றோர்களையும் உறவினர்களையும் அழைத்து வரவேண்டுமல்லவா? அவர்களெல்லாம் ஒன்று கூடியல்லவா புறப்பட்டு வரவேண்டும்!"

"தோழி, அவர்கள் வந்து பெண்கேட்டும் நம் பெற்றோர்கள் மறுத்துவிட்டால் என்ன செய்வது?"

"போடி பைத்தியக்காரி! ஏன் மறுக்கப் போகிறார்கள். அவருக்கென்ன அழகில்லையா? அறிவில்லையா? மேலும் நம்மைவிட செல்வத்தில் குறைந்தவருமல்லர். மனத்தை அலட்டிக் கொள்ளாமல் பேசாமல் இரு. அதோ! நம் தலைவரும் வந்துவிட்டார். அவரோடு அவர்தம் பெற்றோரும் உறவினரும் வருகிறார்கள். நீ உள்ளே போய் இரு. நான் இங்கு நடப்பதை அறிந்துவந்து சொல்கிறேன்" என்று அவளை உள்ளே அனுப்பிவிட்டு, தலைவியின் பெற்றோர்களிடம் யாரோ விருந்தினர்கள் வருவதாகத் தெரியப்படுத்தினாள்.

தலைவியின் பெற்றோர்கள் வீடு தேடி வந்தவர்களை மலர்ந்த முகத்தோடு வரவேற்று இருக்கச் செய்தார்கள். வந்தவர்களில் தலைவனும் அவனுடைய பெற்றோரும் தவிர மற்ற இருவரும் வயது முதிர்ந்தவர்கள் என்பதை நரைத்த முடியும், தலைக்கட்டும், கையிலே தடியும் எடுத்துக் காட்டின. அவ்விருவரில் ஒருவர் தங்கள் மகன் வந்திருப்பதாகவும் இன்னாருடைய மகன் இவன் என்று தலைவனையும் பெற்றோரையும் அறிமுகப்படுத்தினார்.

தலைவனைக் கண்டதும் தலைவியின் பெற்றோர்க்குப் பிடித்துவிட்டது. தம் பெண்ணையும் அழைத்து வரச்சொல்லி வந்தவர்களுக்குக் காண்பித்தார்கள். அவர்களுக்கும் பெண் பிடித்துவிட்டது. பெண்ணை உள்ளே அழைத்துப் போகச் சொல்லிவிட்டு மற்றவை பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

தலைவனின் உறவினரும் பெற்றோரும் தாங்கள் இன்னது இன்னது தருகிறோம். இன்னது இன்னது செய்கிறோம் என்று சொல்ல, தலைவியின் பெற்றோர்கள் தாங்கள் இன்னது இன்னது செய்கிறோம், இன்னது இன்னது தருகிறோம் என்று சொல்ல, தலைவனின் உறவினர் "நன்று, நன்று" என்று சொல்ல, தங்கள் வருகையால் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். இந்நாள் எங்களுக்குப் பெருமை தரக்கூடிய நன்னாளாகும் என்று தலைவயின் பெற்றோர் சொல்ல, அடுத்த நல்ல நாளிலேயே திருமணத்தை வைத்துக் கொள்வோம் என்று இரு தரப்பினரும் முடிவெடுக்க அந்த நல்ல முடிவை தலைவிக்குச் சொல்ல விரைகிறாள் தோழி.

சிரித்த முகத்தோடு வரும் தோழியைப் பார்த்து தலைவி வினவுகிறாள், "தோழி, நல்ல முடிவுதானா?".

தோழி, "நல்ல முடிவுதான். அடுத்த நல்ல நாளிலேயே திருமணம்" என்று சொல்லிவிட்டு, "தோழி, இன்று நம் இல்லத்தில் கூடிய அவையில், பிரிந்தவர்களைக் கூட்டி மகிழும் சான்றோரும் நம்மூரிலும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன். கையிலே தடியும், தலையிலே நரைத்த முடியும், தலைக்கட்டும் கொண்டு ஆண்டிலும், அறிவிலும் முதிர்ந்த தலைவனின் உறவினர்கள் நம் பெற்றோர்கள் சொன்னதற்கெல்லாம் நன்று, நன்று எனக் கூறினார்கள். அவர்கள் வருகையால் இன்று பெருமையுடைய நன்னாளாகும் என்று நம் பெற்றோர்கள் கூறி மகிழ்ச்சியடைந்தார்கள். தோழி! நீ வாழ்க" என வாழ்த்தி மகிழ்ந்தாள்.

–மேலே தீட்டிக் காட்டிய சொல்லோவியம் வெள்ளிவீதியார் என்னும் புலவர் பாடிய பாடலாகும்.

அப்பாடல்:


*"அம்ம வாழி தோழி நம்மூர்ப்*
*பிரிந்தோர்ப் புணர்ப்போர்*
*இருந்தனர் கொல்லோ*
*தண்டுடைக் கையர்*
*வெண்தலைச் சிதலவர்*
*நன்றுநன் றென்னு மாக்களோ*
*டின்று பெரிதென்னும் ஆங்கண*
*தலையே"*

(குறுந்தொகை - 146)

# உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டி

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலகக் கால்பந்து கோப்பைக்கான மாபெரும் போட்டி - 1998 ஜூன் 10ஆம் தேதி தொடங்கி, ஜூலை 12ஆம் தேதியோடு 33 நாட்கள் நடைபெற்று முடிவுற்றிருக்கிறது. 38 நாடுகள் இதில் கலந்து கொண்டன.





பிரான்ஸ் நாட்டு அதிபர் ஜாகுவாஸ் சிராக், அந்நாட்டுத் தலைநகரான பாரீசில் தொடங்கிவைத்து நடைபெற்ற இந்தப் போட்டியில், நான்குமுறை சாம்பியன் பட்டத்தை வென்ற பிரேசிலை வீழ்த்தி, உலகக் கால்பந்துக் கோப்பையைத் தட்டிச் சென்று விட்டது பிரான்ஸ்.

பாரீஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள 8 நகரங்களில் இப்போட்டிகள் நடைபெற்றன; தொடக்கப் போட்டியும் நிறைவுநாள் போட்டியும் பாரீஸ் அருகே செயின்ட் டெனிஸ் நகரில் உள்ள ஸ்டேட்-டி-பிரான்ஸ் ஸ்டேடியத்தில் நடைபெற்றன.

இந்த இறுதிநாள் போட்டிக் கால்பந்தாட்டத்திற்கு, மொராக்கோவைச் சேர்ந்த சாய்த் பெல்கோலா நடுவராக இருந்திருக்கிறார்.

1930ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியில், முதல் கோல் போட்டவர் பிரான்ஸ் விளையாட்டு வீரர்தான்; இந்த இருபதாம் நூற்றாண்டின் கடைசியில் நடைபெற்ற இப்போட்டியில் கடைசியாகக் கோல் போட்டவரும் பிரான்ஸ் நாட்டுக் கால்பந்தாட்ட வீரர்தான்!

ஒலிம்பிக் போட்டியை விட அதிக அளவில், கோடிக்கணக்கான ரசிகர்கள் நேரில் இதைக் கண்டு களித்திருக்கிறார்கள்.

அர்ஜெண்டினாவில் நடந்த போட்டிக்குப்பின், இருபதாண்டுக் காலம் கழித்து இத்தகைய அதிசயம் நடைபெற்றிருக்கிறது. அதாவது, போட்டியை நடத்தும் நாட்டு அணியினரே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

**தங்கக் காலணி**

முதல்நாள் போட்டியில் பிரேசிலும் ஸ்காட்லாந்தும் மோதின; நிறைவுநாள் போட்டியில் பெரும்பாலோர் எதிர்பார்த்தவாறே பிரேசிலும், பிரான்சும் மோதியதில் - பிரான்சு வென்றிருக்கிறது.

இதுவரை நடைபெற்றுள்ள 15 உலகக் கோப்பை போட்டிகளிலும் பங்கேற்ற ஒரேநாடு பிரேசில்தான். இருந்தும் என்ன பயன்?



மற்றொரு அதிசயம் - முதன்முதல் களத்தில் இறங்கிய புதிய நாடான குரோஷியா, மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த அணியைச் சேர்ந்த சுகேர் என்பவர், அதிகபட்சமாக ஆறு கோல்களைப் போட்டு, தங்கக் காலணி (Boots) பரிசு பெற்றிருக்கிறார்.

போட்டியின் தொடக்கம் முதலே, உலகக் கோப்பையைப் பெறப்போவது பிரேசில்தான் என்று பெரும்பாலானோர் ஆரூடம் கணித்தனர்; செய்தித் தாள்களில் பலவும் அந்நாட்டு அணி வீரர் ரொனால்டோவை ஒரேயடியாகப் பாராட்டி அவ்வாறே எழுதின. இந்த எதிர்பார்ப்பிற்கும் காரணம் இருந்தது.

1930ஆம் ஆண்டு முதல் 1996 வரை எல்லா உலகக் கோப்பைப் போட்டியிலும் பிரேசில் அணியினர்தான் விடாமல் பங்கேற்று வந்தார்கள்.

1994-இல் அமெரிக்காவில் விளையாடி உலகக் கோப்பையைப் பெற்றது முதல், சேர்ந்தாற்போல அவர்களே பல வெற்றிகளையும் குவித்து வந்தார்கள். 1994 முதல் 1997 வரை பிரேசில் கால்பந்தாட்ட அணியே 'ஆண்டின் சிறந்த அணி' என்கிற பட்டத்தையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருந்தது.

ஆனால் இந்த முறை? 'யானைக்கும் அடிசறுக்கும்' என்கிற உதாரணத்திற்கு ஆளாகிவிட்டார்கள் பிரேசில் அணியினர்.


உலக அளவில் சாதனை படைத்துவிட்டது பிரான்ஸ். பிரான்ஸ் அதிபர் சிராக், வெற்றிபெற்ற தமது நாட்டுக் கால்பந்தாட்ட வீரர் 'ஜிதானி' என்பாருக்குத் தங்கக்கோப்பை வழங்கிப் பாராட்டியுள்ளார்.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடந்த உலகக் கோப்பை கால்பந்து போட்டியில்தான் - டெட்ராய்ட் நகரில் முதன்முதல் உள்ளரங்கில் - ஒளி வெள்ளத்தில் கால்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

ஆசிய நாடுகளில் - ஜப்பான், தென்கொரியா, சவூதி அரேபியா, ஈரான் ஆகிய 4 நாடுகள் மட்டுமே உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்க முடிந்தது.

இன்னும் ஒரு நான்காண்டு கழித்து, அடுத்த உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி முதன்முதல் ஆசியாவில் நடைபெறவிருக்கிறது.

ஜப்பானும், தென்கொரியாவும் இணைந்து - அதை நடத்த இருக்கின்றன.



**கால்பந்தாட்டத்தின் தோற்றம்**

கால்பந்தாட்டம் மிகவும் பழமையான விளையாட்டாகும். சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் சீனாவில்தான் இந்தக் கால்பந்தாட்டம் முதன்முதல் தோன்றியது!

ஒரு கடினமான உருண்டைப் பொருளை இரு அணியினர் உதைத்து விளையாடுவார்கள். 'டுசு-ச்சூ' எனப் போட்டிருந்த அந்த விளையாட்டிற்கு அவர்கள் அப்போது தனிப்பட எந்தச் சட்டதிட்டங்களும் வகுத்து வைத்திருக்கவில்லை.


பிறகு, அதே விளையாட்டைக் கிரேக்கர்கள் 'எப்பிஸ் கிரோ' என்ற பெயரில் விளையாடத் தொடங்கினர்.

ரோமாபுரியில் 'ஹொர் பாஸ்டம்' என்ற பெயரில் விளையாடலானார்கள். மாமன்னன் ஜூலியஸ் சீசரின் படைவீரர்கள் மூலம் இந்த விளையாட்டு புகழ் பெறலாயிற்று; மெல்லமெல்ல அவர்களால் இந்த ஆட்டம் 12ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலும் பரவிடலாயிற்று.

**பெயர் வைத்தவர்கள்**

காலால் உதைத்து விளையாடும் ஆட்டம் என்பதால் இதற்குக் 'கால்பந்தாட்டம்' (Foot Ball) என்று ஆங்கிலேயர்களே முதன்முதலில் பெயர் வைத்தார்கள்; சில சட்டதிட்டங்களையும் வகுத்தார்கள்.

போர் வீரர்கள் இவ்விளையாட்டில் பெரிதும் ஆர்வம் காட்டவே, இதனால் மற்ற வீர விளையாட்டுப் பயிற்சிகள் கெட்டுவிடுமோ என்று அஞ்சினார் மன்னர் இரண்டாம் எட்வர்டு; இதனால் அப்போது இதற்குத் தடையும் விதித்தார்.




அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த மூன்றாவது எட்வர்டு, இரண்டாவது ரிச்சர்டு; நான்காம் ஹென்றி ஆகியோரும் இந்தக் கால்பந்தாட்டத்திற்குத் தடைவிதித்தனர். மக்கள் பெரும் ஆர்வத்தோடு இவ்விளையாட்டில் ஈடுபட இத்தகைய தடைகளும் காரணமாக அமைந்தன; நாளடைவில் தடைகள் தகர்ந்தன.

17ஆம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்த இரண்டாம் சார்லஸ் மன்னர், கால்பந்தாட்டம் மக்களிடையே பரவ வழிவகைகள் செய்தார். எல்லா வயதினரும் ஆர்வத்தோடு விளையாடலாயினர்.

**மாணாக்கர் ஈடுபாடு**

19ஆம் நூற்றாண்டின் இடையே பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களெல்லாம் அதற்கென்று நேரம் ஒதுக்கி உற்சாகத்தோடு கால்பந்தாட்டத்தில் ஈடுபடலாயினர்.

1922ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்தில் உள்ள ஜூரிச் நகரில் அனைத்து நாடுகளின் கால்பந்துக் கழகம் அமைக்கப்பட்டது; இப்போது அதில் 200 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

**உலகக் கோப்பை**

1930ல், உருகுவே நாட்டில் நடைபெற்ற அனைத்து நாடுகள் கால்பந்தாட்டப் போட்டியின் போதுதான், 'உலகக் கோப்பைப் பரிசு அறிவிக்கப்பட்டது.

தங்கமுலாம் பூசப்பட்ட அந்தக் கோப்பைக்கு 'ஜூல்ஸ் ரிமே' என்று பெயர் சூட்டினர்.

இதற்கு முன்புவரை நடைபெற்றுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளில் மிகச்சிறந்த கால்பந்தாட்ட வீரர் என்று பெயரெடுத்தவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பீலி என்பவராவார்; குறிப்பிடத்தக்க கோல்களைப் போட்ட பெருமை பெற்றவர் அர்ஜெண்டினா அணித்தலைவராக இருந்த மாரடோனா.

1900-ல், பாரீசில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில்தான் முதன்முதலாகக் கால்பந்தாட்டம் இடம்பெற்றது. அந்த ஆட்டத்தின்போது, பிரான்சை இங்கிலாந்து தோற்கடித்தது!

'இதை ஆண்கள் மட்டும்தான் ஆடலாமா?' என்று கேட்காமல் கேட்டு - 1996-ல் கால்பந்தாட்டத்தில், அர்ஜெண்டினாவில் மகளிர் அணியினரும் இறங்கினார்கள்! ஆனால், அதற்குப் பிறகு பெரிய அளவில் பெண்கள் அணியினரிடையே கால்பந்தாட்டம் வளர்ச்சி பெற்றதாகத் தெரியவில்லை.

**முதல் போட்டியில்...**

முதன்முறையாக பிரான்ஸ் உலகக் கோப்பை போட்டியை நடத்தியபோது, கால் இறுதி ஆட்டத்திலேயே இத்தாலியிடம் தோற்று இடமிழந்தது, பிரான்ஸ் அணி 60 ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் இப்போது பிரான்ஸ் நடத்தியது 16வது உலகக் கோப்பைக்கான கால்பந்தாட்டப் போட்டி. இதற்காக 6,000 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது பிரான்ஸ் நாட்டு அரசு.

1930ஆம் ஆண்டிலிருந்து உலகக் கோப்பைக்கான இப்போட்டி கோலாகலமாக நடந்து வருகிறது. 1942, 1946 ஆகிய இரண்டு ஆண்டுகள் மட்டும், இரண்டாம் உலகப் போர் காரணமாக கால்பந்தாட்டப் போட்டி எங்கும் நடத்தப்படவில்லை.

கிரிக்கெட் போட்டியைப் போல 12 நாடுகள் மட்டுமே சம்பந்தப்பட்ட விளையாட்டல்ல இது; 172 நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்தன. பலவகைத் தகுதிகள் ஆராயப்பட்ட பிறகு, கடைசியாக 32 நாடுகள் மட்டுமே அவற்றில் விளையாடத் தேர்ந்தெடுக்கப் பட்டன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

**இந்தியாவின் நிலை**

நம் இந்திய நாடோ இந்தப் போட்டிக்காக விண்ணப்பிக்கவும் இல்லை; தேர்வு பெறவும் இல்லை. காரணம் வேடிக்கையானது. 1948-ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற இந்தியக் கால்பந்தாட்ட அணியினர் காலில் பூட்ஸ் அணியாமல் விளையாடினராம்; காரணம் அப்படியெல்லாம் நம்மவர்களுக்கு விளையாடிப் பழக்க மில்லை என்பதுதான்.

உலகக் கோப்பைப் போட்டியிலும் வெறுங் காலுடனேயே விளையாட விருப்பம் தெரிவித்ததாகவும், அதற்கு அனைத்து நாடுகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் மறுத்துவிட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இவ்வாறான நிலைமை மாறவேண்டும்; உலகளவில் நடைபெற்ற ஒரு போட்டியைத் தொலைக்காட்சியிலும், பெரும் செலவிட்டு நேரிலும் பார்த்து மகிழ்ந்த பார்வையா ளராகவே இத்தனையாண்டுக் காலமும் நாம் இருந்து வந்திருக்கிறோம்.

கிராமச் சிறுவர்களும் கூட காகிதத்தைக் கசக்கியும், வைக்கோலை உருண்டையாகத் திரட்டி சணலால் கட்டியும் வீதிகளில் கால்பந்தாடுவதை இப்போதும் நாம் பார்க்கிறோம். ஆர்வம் மிக்க அந்த இளைஞர்களைப் போன்றவர்களைத் தேடிப்பிடித்து ஊக்கப்படுத்தியாவது - 2002-ல் வரவிருக்கும் உலகக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் விளையாடும் தகுதியை நாமும் பெற்றாக வேண்டும்.

முதல்முறையாக உலகப் போட்டியில் ஈடுபட்டே, இந்த முறை மூன்றாவது இடம் பெற்றிருக்கிற மிகச் சிறிய நாடான குரோஷியாவைப் பார்த்தாவது நாமெல்லாம் வேகம் கொள்ளவேண்டும்.




ஒருகாலத்தில் ஹாக்கி விளையாட்டில் இந்தியாவுக்கு நிகரில்லை என்ற நிலைமை இருந்தது.

பிறகு, கிரிக்கெட் விளையாட்டில் அவ்வாறான நிலை இருந்து - அதிலும் ஊசலாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

அண்மைக்காலமாக டென்னிஸ் விளையாட்டு மோகம் அதிகரித்து வருகிறது.

இதெல்லாம் கூடாது என்று கூறவில்லை. எல்லாம் இருக்கட்டும்; உலகளாவிய தங்கக் கோப்பை கால்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்று உலகச் சாதனை படைப்பதற்கு அதெல்லாம் நிகராகுமா?

- பி.எல்.ராஜேந்திரன்





ஆசிரியரும் வெளியிடுபவரும் : க. முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926,568927,564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23



